# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 350 ஐப்பசி 25ஆம் நாள் சனிக்கிழமை 11 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


# பதவியில் மைத்திரி இருக்கும்வரை போர்க்குற்ற விசாரணைக்கு இடமேயில்லை

## படையினர் முன்னிலையில் அவரே உறுதிபட எடுத்துரைப்பு

கொழும்பு, நவம்பர் 11

அரச தலைவராக தான் பதவியில் இருக்கும் வரை, படையினரை எந்தவொரு போர்க்குற்ற நீதிமன்றத் திலும் நிறுத்துவதற்கு அனுமதிக்கமாட்டார் என்று உறுதிபடத் தெரிவித்திருக்கிறார் மைத்திரிபால சிறிசேன. போர்க்குற்ற விசாரணைகளைக் கொழும்பு நடத்தாது விட்டால் பன்னாட்டு விசாரணைகளை அது எதிர் கொள்வதற்கான அழுத்தங்கள் அதிகரிக்கும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணை யாளர் சயிட் அல் ஹுசைன் அண்மையில் எச்சரிக்கை விடுத்ததன் பின்னரும் அரச தலைவர் இந்த விடயத்தை மீண்டும் படையினர் மத்தியில் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் உள்ள இராணுவ மருத்துவமனை அரங்கில் நேற்றுமுன்தினம் மாலை இராணுவக் கட்டளை அதிகாரிகள், மற்றும் சார்ஜன்ட் மேஜர் தர அதிகாரிகள் 350 பேரை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்தித்தார். அங்கு உரையாற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்த தாவது:

நாட்டைக் காப்பாற்றுவதற்காகவும் தேசிய பேரழிவுகளின்போதும் உங்கள் உயிரையும் மதிக்காமல் நீங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளீர்கள். அதற்காக நாங்கள் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும், அமைதியான சமூகமாக நல்லிணக்கம், ஒற்றுமை, புரிந்துணர்வுடன் முன் நோக்கிச் செல்வதற்கும் உங்களின் தொடர்ச்சியான ஆதரவு எமக்குத் தேவை.

நாட்டின் தலைவராக நான் இருக்கும் வரைக்கும், எந்தவொரு போர் நீதிமன்றத்தின் முன்னாலும் உங்களை நிறுத்துவதற்கு அனுமதிக்கமாட்டேன் என்று உறுதியாகக் கூறுகிறேன். இருந்தாலும், தவறு செய்த இராணுவத்தினர், நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதாக இருந்தால், நாட்டின் சட்டங்களுக்கு அமைவாகவே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சில அதிருப்தி அரசியல்வாதிகளும், ஓய்வுபெற்ற இராணுவத்தினரும் நாம் படையினரைத் தண்டிக்க முயற்சி செய்வதாகக் குற்றஞ்சாட்டி வருகின்

25

## மென்பானமா பியரா சிறந்தது? மங்கள சொன்னபதில் இது

கொழும்பு, நவ. 11

மென்பானங்கள் அருந்துவதை விடவும் பியர் அருந்துவது சிறந்தது என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சபையில் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியுடன், பியர் வரி குறைப்பு தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தற்போது மென்பானங்களில் சீனி வரியாக 20 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. பியருக்கான விலை குறைக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் பியர் தயாரிப்பின்போது ஒரு நாளைக்கு 300 கிலோ சீனி பயன்படுத்தப்படுகின்றதே" என்று சுனில் ஹந்துன் நெத்தி கேள்வி எழுப்பினார்.

"வெளிநாடுகளில் பொதுவாக அதியுச்ச காரம் கொண்ட மதுபானங்களுக்கு பதிலாக குறைந்த காரம் கொண்ட பியரையே அருந்துகின்றனர். பியர் அருந்தும் வீதம் வெளிநாடுகளில் அதிகமாகும். இதன் காரணமாகதான் நாம் அதிகூடிய

25

## வரவு - செலவுத் திட்டத்தை கண்காணிக்க தனி அலகு

### அமைக்கப்படும் என்கிறார் அமைச்சர் மங்கள

கொழும்பு, நவ. 11

வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அதனைக் கண்காணிப்பதற்கும் தனியான பிரிவு அமைக்கப்படும். ஒவ்வொரு மாதமும் அந்தப் பிரிவு முன்னேற்ற அறிக்கையை வெளியிடும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"வரவு - செலவுத் திட்டத்தில் திட்டங்களை முன்மொழிந் தாலும் அவைபெரும்

25

## கடன் சுமையைக் குறைக்க மெதமுலன வரி அறிமுகம்

### அமைச்சர் மங்கள தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11

கடன் சுமையை குறைக்கும் நோக்குடன் மெதமுலன வரியை அறிவித்த தீர்மானித்துள்ளோம். வங்கிகளில் இருந்து ஆயிரம் ரூபாவுக்கு 2 சதம் என்ற அடிப்படையில் அறவிடவுள்ளோம். இந்த அறவீட்டை நுகர்வோர் மீது சுமத்த முடியாது. மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது. இந்தத் திட்டம் மூன்று வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

நிதி மற்றும் ஊடகத்

25

## கட்டலோனியா, குர்திஸ்தான் போன்று வாக்கெடுப்புக்குக் கொழும்பு தயாரா?

### நாடாளுமன்றத்தில் நேற்று சிறிதரன் எம்.பி. கோரிக்கை




கொழும்பு, நவ. 11

தமிழ் மக்கள் பிரச்சினைகளுடனும் கண்ணீரோடும் வாழ்ந்துவரும் நிலையில் என்னதான் பொருளாதாரத் திட்டங்களை அரசு அறிவித்தாலும் எந்தவிதப் பயனும் ஏற்படப்போவதில்லை. இவ்வாறு தொடர்ந்து சென்றால் கட்டலோனியா, குர்திஸ்தான் போன்று பொது வாக்கெடுப்பொன்றுக்கு அரசு தயாரா?

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார். வரவு செலவுத் திட்ட முதலாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு மாகாணத்துக்கு சில முன்னேற்றகரமான முன்மொழிவுகள் 2018ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. போருக்குப்பின்னர் பாதிக்கப்பட்ட தரப்புக்கு சில

25

## மைத்திரி - மகிந்த விரைவில் சந்திப்பு

கொழும்பு, நவ. 11

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வுக்கும், முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் அவசர சந்திப்பொன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

25

## சபையில் வாங்கிக் கட்டிய மகிந்த அணியின் எம்.பி.

கொழும்பு, நவ. 11

வடக்கு மாகாணத்தைத் தொடர்ச்சியாக அரசு புறக்கணித்து வருகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக்காட்டியபோது, குறுக்கிட்ட மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன வாங்கிக் கட்டிக்கொண்டார்.

"வடபகுதி குறித்து பல்வேறு விடயங்களை சிறிதரன் கூறுகின்றார் இதற்குப் பதிலளிப்பதற்கு நிதி அமைச்சரோ, இராஜாங்க அமைச்சரோ, பிரதி அமைச்சரோ சபையில் இல்லை. இதனை தாங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்" எனச்சபைக்குத்தலைமை தாங்கிக்கொண்டிருந்த குழுக்களின் பிரதித் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு

25

## திருமலை விபத்தில் யாழ். சிறுவன் சாவு

### வீதியைக் கடக்க முயன்றபோது பேருந்து மோதியதால் விபரீதம்

திருகோணமலை, நவ.11

திருகோணமலை, ஹொரவபொத்தானை வீதியில் நேற்று நடந்த விபத்தில் 7 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

யாழ்ப்பாணம், மீசாலையைச் சேர்ந்த ந.தசதரண் (வயது-7) என்ற சிறுவனே உயிரிழந்தான். வீதியைக் கடக்க முயன்ற சிறுவனை வவுனியாவில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த அரச பேருந்து மோதியது என்று கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள நிகழ்வு ஒன்றுக்குச் சென்ற சமயம் மஹதிவுல்வெவ குளத்துக்கு அருகே வாகனத்தை நிறுத்தி இளைப்பாறினர் என்றும், அப்போது சிறுவன் வீதியைக் கடக்க முற்பட்டான் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சிறுவனின் சடலம் மஹதிவுல்வெவ பிரதேச

25

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

## கொட்டும் மழையால் 9 ஆயிரம் பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடரும் அடை மழையால் 2 ஆயிரத்து 518 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 141 பேர் பாதிப்படைந்துள்ளனர். 4 வீடுகள் முழுமையாகவும், 159 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்தன.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மழை தொடருமாக இருந்தால் தாழ் நிலப் பகுதி மக்கள் இன்னும் இடம்பெயர வேண்டிய நிலமை ஏற்படும்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 106 குடும்பங்களைச் சேர்ந்த 385 பேரும், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 137 பேரும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 209 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 552 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 249 குடும்பங்களைச் சேர்ந்த 893 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 273 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 66 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 128 குடும்பங்களைச் சேர்ந்த 444 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 393 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 253 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 189 குடும்பங்களைச் சேர்ந்த 759 பேரும், பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 283 குடும்பங்களைச்

25

## வடக்கில் மழை இன்றும் தொடரும்

### நேற்றிரவுவரை 26 மி.மீ. பதிவு

யாழ்ப்பாணம், நவ. 11

இரண்டு நாள்கள் இடைவெளியின் பின்னர் வடக்கில் மீண்டும் மழை நேற்றுமதியம் தொடக்கம் ஆரம்பித்துள்ளது. இலங்கையின் வட அரைப் பகுதியில் இந்த மழை நாளையும் நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

கடந்த வாரமும் இத்தகைய குழப்பமே நிலவியது. இலங்கையின் கிழக்கே தென் மேற்கு வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள வளிமண்டல குழப்பநிலை காரணமாகவே மழை ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்கள பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

திணைக்கள அறிவிப்பின்படி இன்று இரவு (நேற்று) தொடக்கம் 36 மணித்தியாலங்களுக்கு அதாவது நாளை ஞாயிற்றுக் கிழமை

25

# 5 ஆயிரம் ரூபா நோட்டால் கிளம்பியது பெரும் சர்ச்சை

## நாடாளுமன்றில் கடும் தர்க்கம்

கொழும்பு, நவ.11
சிங்கப்பூர் குடிமகன் கையொப்பம் இட்ட 5 ஆயிரம் ரூபா நோட்டுச் செல்லாது என்று நாடாளுமன்றில் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன. அதையடுத்து அங்கு பெரும் சர்ச்சை மூண்டது.
நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரதன், சுஜிவ பண்டார, நளின் பண்டார ஆகியோர் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.
நேற்றுக் கூடிய நாடாளுமன்ற அமர்வில் வரவு.- செலவுத் திட்டம் மீதான விவாதம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட கூட்டு எதிரணியின் நாடாளுமுன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன உரையாற்றினார்.
இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜுன மகேந்திரன் நியமிக்கப் பட்டார். அதில் எமக்கு ஒரு சந்தேகம் எழுந்துள்ளது.
இலங்கை வரலாற்றில் முதன்முறையாகச் சிங்கப்பூர் குடிமகன் ஒருவர் 4 ஆயிரம் ரூபா நோட்டில் கையொப்பம் இட்டுள்ளார். இது எப்படி நியாயமாகும்?
சிங்கப்பூர் குடிமகன் கையொப்பம் இட்ட ரூபா நோட்டுச் செல்லுபடியாகாது. அது திருட்டுப் பணமாகும். அது தொடர்பில் நீதிமன்றை நாடவுள்ளோம் என்று சர்ச்சையைக் கிளப்பினார் அவர்.
அதையடுத்து எழுந்தார் நிதி மற்றும் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன.
தயவு செய்து மக்களின் கவனத்தைத் திசை திருப்ப வேண்டாம். 5 ஆயிரம் ரூபா நோட்டில் கையொப்பம் இட்டது சிங்கப்பூர் குடிமகன் அல்ல. மத்திய வங்கியின் ஆளுநரே. இந்தக் கருத்தை மீளப் பெறுங்கள் என்று பாய்ந்தார் எரான்.
அதற்குப் பதிலளித்து சீறினார் பந்துல குணவர்த்தன.
நான் ஏன் மீளப் பெற வேண்டும். கூறிய வார்த்தையை மீளப் பெற மாட்டேன். கீதா குமரசிங்க இரட்டைக் குடியுரிமை கொண்டவர் என்பதாலேயே அவரது பதவியைப் பறித்தீர்கள். அப்படியாயின் சிங்கப்பூர் குடிமகன் அர்ஜுன மகேந்திரன் கையொப்பமிட்ட 5 ஆயிரம் நோட்டு எப்படிச் செல்லுபடியாகும்? என்று கேள்வி எழுப்பினார் அவர்.
இந்தச் சந்தர்ப்பத்தில் சுஜிவ சேனசிங்க எழுந்தார்.
5 ஆயிரம் ரூபா நோட்டுச் செல்லுபடியாகவில்லை என்றால் நீங்கள் இதுவரை 5 ஆயிரம் ரூபா நோட்டைப் பயன்படுத்திச் செலவிடவில்லையா? என்று தன்பங்குக்கு பந்துலவுக்கு பதிலடி கொடுத்தார் அவர்.
இந்த விடயம் தொடர்பாக நாம் நீதிமன்றம் செல்வோம் என்றார் பந்துல குணவர்த்தன.
நீதிமன்றம் செல்லுங்கள் செல்லுங்கள் என்று கோசமிட்டனர் ஆளுந்தரப்பினர்.
(ந-31)

## நாடாளுமன்று சென்றது கனேடியக் குழு

கொழும்பு, நவ.11
நாடாளுமன்றில் வரவு செலவுத் திட்ட விவாதம் நேற்றுநடைபெற்றுக் கொண்டிருந்த வேளை கனேடிய நாடாளுமன்றக் குழு ஒன்று சபைக்குச் சென்றது. வரவு செலவுத் திட்ட இரண்டாம் கட்ட வாசிப்பின் மீதான விவாதத்தில் அமைச்சர் சரத் அமுனுகம உரையாற்றிய போதே அந்தக் குழு அங்கு சென்றது.
பொதுநலவாய சமஷ்டிப் பிரிவின் தலைவரும், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் யஷ்மின் ரட்டன்ஷி தலைமையிலான குழுவே நாடாளுமன்ற நடவடிக்கைகளை அவதானித்தது. சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால அந்தக் குழுவை வரவேற்கும் அழைப்பை விடுத்தார். (ந-31)

## நுவரெலிய மாவட்டத்தில் பிரதேச செயலகங்களை 15 ஆக உயர்த்த முடியாது

### நாடாளுமன்றில் வஜிர தெரிவிப்பு

கொழும்பு, நவ.11
நுவரெலியாவின் பிரதேச சபைகள் அதிகரிக்கப்பட்டாலும் பிரதேச செயலங்கள் அதிகரிக்கப்படவில்லை. பிரதேச செயலகங்களை 15 ஆக அதிகரிக்க வேண்டும் என்று கோரப்பட்டாலும் எம்மால் அதைச் செய்ய முடியாது.
இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.
நேற்றுக் கூடிய நாடாளுமன்றில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.திலகராஜ் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
நுவரெலியா மாவட்டத்தின் மக்கள் தொகை, புவியியல் நிலை என்பவற்றைக் கருத்தில் கொண்டு பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை 5 முதல் 10 வரை அதிகரிக்கப்படும் என்று நான் முன்வைத்த பிரேரணையின் போது அமைச்சர் முன்னர் குறிப்பிட்டிருந்தார்: ஆனால் அது தொடர்பில் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அவற்றை அதிகரிப்பதற்கான உறுதியான திகதியைக் குறிப்பிட முடியுமா? என்று திலகராஜ் கேள்வி எழுப்பினார்.
அதற்கு அமைச்சர் வஜிர அபேவர்த்தன பதிலளித்தார்.
பிரதேச செயலகங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமானால் எல்லை நிர்ணயம் உரிய முறையில் செய்யப்பட வேண்டும். 2007ஆம் ஆண்டே இறுதியாக எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு குழு ஒன்று அமைத்து எல்லை நிர்ணயம் செய்யப்பட்டாலும் அது உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை. கம்பஹா மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆயிரத்து 600 கிராம அலுவலர் பிரிவு இருந்தாலும் அப்போதைய எல்லை நிர்ணயத்தின்படி அவற்றில் 20 குறைக்கப்பட்டன. அப்போது அரசியல் கட்சிகளின் ஆலோசனையைப் பெறாதே எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது.
நுவரெலியா மாவட்டத்தின் பிரதேச சபைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்கள் அதிகரிக்கப்படவில்லை. அம்பகமுவ பிரதேச சபை மிகவும் கஷ்ட பிரதேசமாகும். மலையக அரசியல் தலைவர்கள் பிரதேச செயலகங்களை 15 ஆக அதிகரிக்கக் கோரினாலும் அதைச் செய்ய எம்மால் முடியாது. ஆனால் நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலகங்களை 10 ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் சமர்ப்பிப்பேன். என்றார். (ந-31)


காரைதீவு விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு கதிரைகள் வழங்கப்பட்டன. முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் அவை வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் ஜேர்மன் நம்பிக்கை ஒளி அமைப்பின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் கி.ஜெயசிறில், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந)



## வட இந்து ஆ. பாடசாலை கட்டடம் நேற்றுத் திறப்பு

பருத்தித்துறை, நவ.11
பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலையின் கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.
பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாணசவை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.
"வடமாகாணத்திலுள்ள அதிகமான பாடசாலைகளில் மாணவர்கள் மிகக் குறைந்த அளவிலேயே கல்வி கற்கின்றார்கள். ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கை மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. கீற்றல் செயற்பாடுகளில் வடமாகாணமே பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலை மாறவே வேண்டும்." என்று நிகழ்வில் உரையாற்றிய எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ந-ரி4)

## பயன்படுத்தாத கட்டடத்துக்கு ரூபா 49 லட்சம் மின் கட்டணம்

கொழும்பு, நவ.11
கமத்தொழில் அமைச்சு குத்தகைக்கு எடுத்து இதுவரை பயன்படுத்தாத கட்டடத்துக்கு ஒரு ஆண்டுக்கு 49 இலட்சத்து 33 ஆயிரத்து 422 ரூபா மின்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் ஆளும் கட்சிப் பிரதம கொறடாவும், அமைச்சருமான கயந்த கருணாதிலக்க. நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் வாய்மூல கேள்வி நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
2016.04.01 ஆம் திகதி முதல் 2017.05.31ஆம் திகதிவரையான காலப் பகுயில் கமத்தொழில் அமைச்சு பேணி வந்த கட்டடங்களின் மொத்த மின்கட்டணம் எவ்வளவு?. அந்தந் காலப் பகுதியில் இராஜகிரியவில் அமைந்துள்ள கமத்தொழில் அமைச்சால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட டி.பி.ஜயசிங்ஹ கட்டடத்தின் மொத்த மின் கட்டணம் எவ்வளவு?" என்று நளிந்த கேள்வி எழுப்பினார்.
கமத்தொழில் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவுக்குப் பதிலாக கயந்த கருணாதிலக்க பதிலளித்தார்.
"தற்போது கமத்தொழில் அமைச்சால் பேணிவரும் கட்டடத்துக்கு ஒரு கோடியே 30 இலட்சத்து 32 ஆயிரம் ரூபா மின்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. இராஜகிரியவில் உள்ள கட்டடத்துக்கு 49 இலட்சத்து 33 ஆயிரத்து 422 ரூபா மின் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது." என்று அவர் கூறினார்.
குத்தகைக்கு எடுத்து மூன்று ஆண்டு காலப் பகுதியில் பயன்படுத்தாது இவ்வளவு பெருந்தொகையான மின் கட்டணத்தைச் செலுத்துவது நீதியா?. என்று கேள்வி எழுப்பினார் நளின்.
திருத்த வேலைகள் இருப்பதாலேயே அந்தக் கட்டடத்தைப் பயன்படுத்தவில்லை என்று கூறினார் ஆளும்கட்சிப் பிரதம கெறடாவான கயந்த கருணாதிலக்க.
(ந-31)

## வடமராட்சிச் சூட்டுச் சம்பவம் பொலிஸாரின் மறியல் நீடிப்பு

வடமராட்சி,நவ.11
வடமராட்சி கிழக்கில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸார் இருவரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
இந்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிர்வரும் 24 ஆம் திகதிவரை சந்தேநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.
கடந்த ஜூலை 9 ஆம் திகதி 6ஆம் கட்டை மணற்காட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த 24 வயதான இளைஞர் உயிரிழந்தார். பொலிஸாரின் சைகையை மீறி வாகனம் செலுத்திச் சென்றதால் வாகனத்தின் மீது சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் விளக்கமறியலே நீடிக்கப்பட்டது.
(ந-ரி4,26)

# தீர்வு கிடைக்காவிட்டால் உயிர் விடும் நிலைவரும்

## கேப்பாபிலவு மக்கள் விரக்தி

முல்லைத்தீவு. நவ.11

எமக்குத் தீர்வு வழங்கப்படாது தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டால் குடும்பம், குடும்பமாக உயிர்விடும் நிலைவரும் என்று விரக்தியுடன் தெரிவித்தனர் கேப்பாபிலவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் கேப்பாபிலவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் போராட்டம் 255ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. வீதியோரம் தகரக் கொட்டகை அமைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

"எங்கள் காணிகள் விடுவிக்கப்படும் என்று கூறுகின்றார்கள். ஆனால் அவை எப்போது விடுவிக்கப்படும் என்று உறுதியாகக் கூறப்படவில்லை. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாம் தற்போது பெய்யும் மழையாலும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளோம்.

வீதியோரத்தில் பாம்பு, பூச்சிகளுடன் நாம் இருக்கின்றோம். எங்கள் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ள வருமானம் போதாது. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியவில்லை. எமது காணிகளை விடுவித்தால் விவசாயம் செய்து, காணிகளில் உள்ள பயன்தரு மரங்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நிம்மதியாக வாழ முடியும்.

எங்கள் காணிகளை விடுவிக்காது இழுத்தடிக்கப்படுமானால், வீதியில் கிடக்கும் இந்த வாழ்க்கை தொடருமானால் குடும்பங்களாக உயிரை விடுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை." - என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் விரக்தியோடு தெரிவித்தனர். (ற-ரி5)



## தொடருந்து சேவையை நிறுத்திய குளவிகள்

கொழும்பு,நவ.11

வட்டவலை தொடருந்து நிலையத்தில் நேற்று குளவி கூடு கலைந்ததால் தொடருந்துச் சேவைகள் பாதிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

மரமொன்றிலிருந்த குளவி கூட்டை கழுகு கலைத்தது என்றும், அதனால் இருவர் குளவிகொட்டுக்கு இலக்காகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. அரை மணி நேரத்தின் பின் தொடருந்து சேவை சீரானது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

## மகிந்த சைக்கிள் சவாரி கேளிக்கையாக இருந்தது

### சமீர பெரேரா நகைப்பு

கொழும்பு,நவ.11

கூட்டு எதிர்க்கட்சியின் சைக்கிள் சவாரி கேளிக்கையூட்டுவதாக அமைந்தது. அவர்களில் ஒரு வியர்வைத் துளி கூட காணப்படவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் இடதுசாரி கேந்திர நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இவர்கள் சைக்கிள் ஓட்டி வந்தது எதற்காக? மக்களுக்காகவா? அவர்கள் வந்த விதத்தைப் பார்க்கும்போது எமக்கு பல கேள்விகள் எழுகின்றன. சைக்கிள் ஓட்டும் போது, ஒரு துளி வியர்வை கூட வரவில்லை. அவர்களுடைய அலங்காரம் அப்படியே இருந்தது. கண்ணாடியுடன், தங்க நிறத்தில் மகிந்த ஜொலித்தார். மக்கள் பிரச்சினையை வெளிக்கொண்டுவந்து, அவர்களுக்காக சைக்கிள் ஓட்டுவதாயின் மகிந்த குருணாகலில் இருந்தும், நாமல் ராஜபக்ஸ அம்பாந்தோட்டையில் இருந்தும் சைக்கிளில் வந்திருக்க வேண்டும். அவர்கள் விளையாட்டுக்காகவே சைக்கிளில் வந்துள்ளார்கள். நாட்டு மக்களுக்கு பிரச்சினை உள்ளது. தமக்கு பிரச்சினை உள்ளது என்றால் தினமும் சைக்கிளில் வரலாமே - என்றார். (ற-ரி5)

## என்.சி. தூளுடன் ஒருவர் கைது

ஹற்றன், நவ.11

1 கிலோ 50 கிராம் புகையிலைத் தூளை (என்.சி) வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஹற்றன் நோர்வூட் வெஞ்சர் தோட்டப்பகுதியை சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் புகையிலைத் தூளை தனது வீட்டில் விற்பனைக்காக வைத்திருந்தபோதே கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## பெற்றோரின் கனவை நனவாக்க வேண்டும்

### கிழக்கு முன்னாள் தவிசாளர் மாணவர்களுக்கு அறிவுரை

திருகோணமலை. நவ.11

பெற்றோர்களின் கனவுகளை மாணவர்கள் நனவாக்க வேண்டும்.

இலங்கை கல்வியில் பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறது. அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்துக்கு தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எஸ்.உதயகுமார் தலைமையில் நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

கல்வியில் எங்களை திட்டமிட்டு புறக்கணித்ததன் காரணமாக தான் எமது இளைஞர்கள் ஆயுதமேந்தினர்.

சுதந்திரத்துக்கு முன்னர் தமிழர்களே அனைத்துத் திணைக்களகங்களிலும் தலைமைப் பதவியை வகித்து வந்தனர்.

அதைக் கட்டுப்படுத்தத் தமிழ் மக்கள் வாழுகின்ற மாவட்டங்களில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை அதிகரித்தனர். மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதன் எண்ணிக்கை குறைந்திருந்தது.

இப்போது நாங்கள் கல்வியில் நிர்வாக ரீதியாக பின்னடைவு கண்டுள்ளோம். எமது தமிழ் பிரதேச மாணவர்களின் கல்வி நிலை மிகவும் பின்தங்கி காணப்படுகின்றது. எதிர்காலத்தில் எமது சமூகத்தைப் பாதுகாக்கவேண்டியதன் பொறுப்பு மாணவர்களிடமே உள்ளது அதை நிறைவேற்றுபவர்களாக அவர்கள் மாறவேண்டும் - என்றார். (ற-ரி5)



## உயிரை மாய்க்க முயன்ற குற்றவாளி

கம்பஹா, நவ.11

கம்பஹா மேல் நீதிமன்றால் 5 வருடங்கள் கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி ஒருவர் நீதிமன்றில் வைத்து நஞ்சருந்தி உயிரை மாய்க்க முயற்சித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. குற்றவாளி கம்பஹா மருருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சப்புகஸ்கந்த ஹயியன்துடுவப் பகுதியில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரைக் கத்தியால் குத்த முயற்சித்த குற்றத்துக்காக கம்பஹா மேல் நீதிமன்று கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின. வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் ஒன்றுகூடி சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர். மாவீரர் தினத்தைக் கடைப்பிடிக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

உங்கள்
பிரதேசங்களில்
நடக்கும்
நிகழ்வுகளை
உலகறியச் செய்ய
எமக்கு அனுப்புங்கள்



உதயன்
DIGITAL
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

# வருமானம் அதிகரித்தும் பொருளாதார வீழ்ச்சி ஏன்?

## யாருடைய பைக்குள் நிதி செல்கிறது ஆராய வேண்டும் என்கிறார் அமுனுகம

கொழும்பு, நவ. 11

நாட்டில் அரசின் வருமானமும், வரி வருமானமும் அதிகரித்துச் செல்கின்றன. ஆனால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்குக் காரணம் என்ன? இந்த நிதி யாருடைய பைக்குள் செல்கின்றது. இதனை ஆராய்ந்து நாம் விடைதேட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட முதலாம்நாள் விவாதத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலாநிதி என்.எம்.பெரேரா நிதி அமைச் சராக இருக்கும்போது சிகரெட்டைப் பதுக்கி வைத்திருப்பவர்களுக்காக சிகரெட்டின் விலையைக்குறைத்துப் பாடம்புகட்டினார். அதேபோன்றுதான் எமது நிதி அமைச்சர் மங்கள சமரவீரவும் பருப்பின் விலையைக் குறைத்துள்ளார். அத் தியாவசிய பொருள்களின் விலைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் அரச வருமானம் அதிகரித்த நிலைமையை அவதானிக்க முடிகின்றது. 2014இல் ஆயிரத்து 50 பில்லியன்களும், 2015இல் ஆயிரத்து 356 பில்லியன்களும், 2016இல் ஆயிரத்து 464 பில்லியன்களும், 2017இல் ஆயிரத்து 769 பில்லியன்களும் கிடைத்துள் ளன. 2018இல் 2 ஆயிரத்து 34 பில்லியன்களை நாம் எதிர்பார்க்கின்றோம். அரச வருமானத்தில் ஒரு துரித முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் வரி வருமானத்திலும் வெகுவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2014இல் 198 சதவீதமும், 2015இல் 263 சதவீதமும், 2016இல் 256 சதவீதமும் 2017இல் 308 சதவீதமும் காணப்படுவதோடு 2018இல் 365 சதவீதம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நாம் சிக்கலான கேள்வியொன்றுக்கு விடைதேட வேண்டியுள்ளது. நாட்டின் அரச வருமானமும், வருமான வரியும் அதிகரித்துள்ள நிலையில் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என்ன என்றவொரு கேள்வி எழுகின்றது. வருமானம்மூலம் கிடைக்கப்பெற்ற நிதி எங்கே சென்றது. இந்த வீழச்சிக்கு காரணமானவர்கள் யார்? எவருடைய சட்டைப்பைக்குள் அத்தனை நிதியும் சென்றது. ஏன் அந்த நிதி உரிய வகையில் பொதுமக்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்பதைத் தேடிப்பார்க்க வேண்டியுள்ளது.

அதேநேரம் உறுதியான பொருளாதரத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய வகையிலான முதலீடுகளை மேற்கொள்வதற்குரிய வழிகளை அரசு வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ளது. மிகவும் நல்லதொரு பண்பாக எடுத்துக்காட்ட முடியும். நாட்டின் பொருளாதார சுபாவத்தை நோக்கும் போது உள்நாட்டில் முதலீடுகளை செய்வதற்கான பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது விட்டால் அடுத்துள்ள இரு உபாயங்களை நாடவேண்டும். வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் முறைமையையே இதுவரைகாலமும் இருந்த அரசுகள் மேற்கொண்டது. கூட்டுத்தொழில் முயற்சிகளைத் தவிர்த்து வந்தமையால் கடன் வாங்க வேண்டிய நிலமையே ஏற்பட்டது. அவ்வாறு கடன் வாங்குகின்றபோது அதற்கான வட்டி அதிகரிக்கப்பட்டது. நாட்டின் கடன்சுமை அதிகரித்தது. ஆரம்பத்தில் இரண்டு சதவீதம் என்று கடன் வாங்கினாலும் பிற்காலத்தில் ஐந்து ஆறு சதவீதமான அளவிலேயே கடன் பெறப்பட்டது.

இந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்காகத் தற்காலிகமாகப் பணத்தை அச்சடிக்கவும் முடியும். பணத்தை அச்சடித்ததன் காரணத்தால் தான் பணவீக்கம் ஏற்பட்டது. கூட்டு ஒத்துழைப்பிலான முதலீடுகளை உள்வாங்குவதன் ஊடாகவே பொருளாதர உறுதிப்பாட்டை நிலைநிறுத்த முடியும். இதனை எதிர்க்கும் முக மூடிக்குள்ளிலிருந்து வெளிவர வேண்டியது அவசியமாகின்றது - என்றார்.

(5,31)

## பரீட்சைகள் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் பணிநீக்கம்

கொழும்பு, நவ. 11

பரீட்சைகள் திணைக்களத்தின் இரகசிய மற்றும் நிறுவன பரீட்சைகள் பிரிவின் பொறுப்பதிகாரி அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் ஒருவரே இவ்வாறு பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொறுப்புக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை மற்றும் தவறான நடத்தை போன்ற குற்றச்சாட்டுக் காரணமாக உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வியமைச்சின் ஊடகச் செயலர் கல்ப குணரத்ணவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5)

### கொமடோர் தசநாயக்கவின்

## பிணை மனு மீது டிசெ.7இல் விசாரணை

2008ஆம் ஆண்டு காலப்பகுதியில், மாணவர்கள் ஐவர் உள்பட 11பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க உள்பட அறுவருக்கு பிணை வழங்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு தொடர்பான விசாரணை, டிசெம்பர் 7ஆம் திகதி இடம்பெறும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

கொழும்பில் மாணவர்கள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க உள்பட எழுவருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அறுவரினாலும், தமக்குப் பிணை வழங்குமாறு கோரி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு, மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர்.ஹெய்யந்துடுவ முன்னிலையில், நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. மனு மீதான விசாரணை டிசெம்பர் 7ஆம் திகதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

(5)

## இந்தியா எப்போதும் உங்களுடன் இருக்கும்

### மைத்திரியிடம் கூறினார் மோடி

கொழும்பு, நவ. 11

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் தகுதியானவர்களாக திறமையானவர்களாக இருக்க வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில் இப்படியான பிரச்சினைகளையே எதிர்கொள்ள வேண்டிவரும் .நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்தியா எப்போதும் உங்களுடன் இருக்கும். நான் உங்களுக்கு உதவுவேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அன்பு கலந்த பேச்சில் தெரிவித்திருக்கிறார் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி.

பெற்றோல் தட்டுப்பாட்டால் இலங்கையில் உருவாகிய நிலைமைகளைச் சீர் செய்யும் வகையில் இந்தியத் தலைமை அமைச்சர் மோடியுடன் இரண்டு நாள்களுக்கு முன்னர் மைத்திரி அலைபேசியில் உரையாடியிருந்தார். அதன்போதே தலைமை அமைச்சர் மோடி இவ்வாறு தெரிவித்தார் என்று அரச தலைவர் மைத்திரிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு எரிபொருள் விநியோகம் செய்யும் இந்திய ஐ.ஓ.சி. நிறுவனம் இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இல்லாதபோதிலும் எரிபொருள் பற்றாக்குறையால் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க இந்திய நடுவண் அரசின் உதவியை நாடுவது நல்லதெனத் தீர்மானித்தே மைத்திரி, மோடியுடன் அலைபேசி அழைப்பை ஏற்படுத்திப் பேசியிருந்தார்.

இதன்போது, எதையும் சமாளிக்கும் திறமையுடைய தகைமை கொண்டவர்கள் அமைச்சரவையில் இல்லாவிட்டால் இப்படித்தான் நாட்டில் பிரச்சினைகள் வரும். இலங்கையின் இப்போதைய நெருக்கடி பற்றி எனக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. நீங்கள் கவலைப்படவேண்டாம். நான் உங்களுடன் இருக்கிறேன். இலங்கையில் நிலமை சீரடைய உடனடி ஒத்துழைப்புக்களை இந்தியா வழங்கும், என்று மைத்திரியிடம் உறுதிபடத் தெரிவித்தாராம் மோடி.

(5)

## பொருளாதாரத்தை கொள்ளையடிக்கும் மங்களவின் பட்ஜட்

### சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, நவ. 11

அரசிடம் பொருளாதாரம் தொடர்பில் உறுதியான கொள்கை மற்றும் தெளிவு நிலமை இல்லாதமையையே 2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் காண்பித்துள்ளது எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணி, இது 1977ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தைக் கொள்ளையடிக்கும் வரவு - செலவுத் திட்டம் போன்று காணப்படுவதாகவும், நாட்டு மக்கள் இதனால் முட்டாள்களாக்கப்பட்டுள்ளனர் என்றும் கடுமையாக விமர்சித்தது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மங்களவின் 'மங்கள பட்ஜட்' என்று இது கூறப்பட்டாலும், அப்படி சொல்லிக் கொள்ளும் படியாக மங்களகரமாக இதில் எந்தவொரு முன்மொழிவுகளும் உள்ளடக்கப்படவில்லை என்பதே எமது கருத்தாக இருக்கிறது. 1977ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தை கொள்ளையடிக்கும் வகையில் எப்படியான ஒரு வரவு - செலவுத் திட்டம் கொண்டு வரப்பட்டதோ அதன் ஒரு நகலாகவே இதனை நாம் கருதுகிறோம். 2018ஆம் ஆண்டில் மொத்த வருமானம் 2 ஆயிரத்து 326 பில்லியன் ரூபா என்றும், செலவினம் 3 ஆயிரத்து ஒரு பில்லியன் ரூபா என்றும், பற்றாக்குறை 675 பில்லியன் ரூபா என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும், அந்த வருமானத்தை அரசு எப்படி முழுமையாகப் பெற்றுக்கொள்ளப் போகிறது? செலவினங்கள் என்னென்ன? பற்றாக்குறையை எவ்வாறு சமாளிக்கப்போகிறது? என்று எந்தவொரு கேள்விக்கும் இதில் விடையைக் காணமுடியவில்லை.

உற்பத்தியை அதிகரிப்பதை விட வரிச்சுமையை உயர்த்துவதும் நாட்டுக்கு மேலும் கடன் பெறுவதை ஊக்குவிப்பதுமே இந்த பட்ஜட்டில் பிரதானமாக முன்மொழியப்பட்டுள்ளது. மாறாக தேசிய உற்பத்திகளை ஊக்குவிப்பது, மக்களின் வாழ்கைச் செலவை குறைப்பது என்று எதுவும் இதில் இல்லை.

வாகனங்களை எடுத்துக் கொண்டால் வரிக்கு அப்பால் காபன் வரியென்று ஒன்றும் தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வீட்டுப் பாவனைக்கு உதவும் மின்சார உபகரணங்கள், அரச சேவையாக வழங்கப்படும் இறப்புச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், திருமணச்சான்றிதழ் என்று அனைத்துக்குமான வரிகளையும் கட்டணங்களையும் அரசு அதிகரித்துள்ளது.

சில வரித்திட்டங்கள் குறித்து அரசிடம் ஒரு தெளிவின்மை காணப்படுகின்றமையையும் பொருளாதார உறுதிப்பாடான தன்மை இல்லாதமையையும் இந்த வரவு - செலவுத்திட்டம் வெளிக்காட்டாமல் இல்லை. மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களுக்கான வரி 2018ஆம் ஆண்டுக்கான பட்ஜட்டில் குறைக்கப்பட்டுள்ளது. கடந்தமுறை ரவிகருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜட்டில் வாகனங்களுக்கான வரி அதிகரிக்கப்பட்ட காரணத்தினால்தான் வாகன இறக்குமதி சடுதியாக வீழ்ச்சியடைந்ததோடு, வாகனங்களுக்கு சக்தியூட்டும் பல நிலையங்களும் மூடப்பட்டன. தற்போது மீண்டும் வாகனங்களுக்கான வரியை அரசு குறைத்துள்ளது.

அதுமட்டுமன்றி, வெளிநாட்டவர்களுக்கு எமது சொத்துக்களை விற்பனை செய்யும் வரையறைகளும் இதனால் தகர்த்தப்பட்டுள்ளன. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பல முன்மொழிவுகள் நாட்டு மக்களுக்கு பெரும் பாதிப்பாக அமைவதோடு, அவர்களை முட்டாளாக்கும் ஒன்றாகவே கருதப்படுகின்றது - என்றார்.

(5)

# இறைச்சிக் கடைகள் மூடப்பட்டதால் சட்டவிரோத விற்பனை அதிகரிப்பு

## கொடிகாமம் பொதுச் சந்தையில் இந்த நிலை

யாழ்ப்பாணம், நவ. 11
கொடிகாமம் பொதுச்சந்தையில் உள்ள இறைச்சிக் கடைகள் அனைத்தும் கடந்த 3 வருடங்களாக மூடப்பட்டுள்ளன. இதனால் குறித்த பகுதியில் சட்டவிரோத இறைச்சி விற்பனை அதிகரித்துள்ளது எனப் பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் பொதுச் சந்தையில் உள்ள இறைச்சிக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. இதனால் சட்டவிரோத இறைச்சி விற்பனை அதிகரித்துள்ளதாகவும் இறைச்சியை கொள்வனவு செய்வதற்கு சாவகச்சேரி மற்றும் பளைப் பகுதிகளுக்கே செல்ல வேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் வினவிய போது வருடாந்த குத்தகைக்கு கேள்வி கோரல் அடிப்படையில் இறைச்சிக்கடைகள் வழங்கப்படுகின்ற போதும் அதனை குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவர்கள் ஓரிரு மாதங்களில் கடையை நடத்த முடியாததால் ஒப்பந்தங்களில் இருந்து விலகிவிடுகின்றனர். இதனால் மீள் கேள்வி கோரல் விடப்படுகின்ற போது யாரும் கடையை எடுக்க முன்வராததால் கடைகள் மூடப்பட்டுள்ளன எனத் தெரிவித்தனர்.

இதேவேளை நீண்டகாலம் இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு நடத்தியவர்கள் தெரிவிக்கையில் கேள்வி கோரலின் போது புதிதாக வருபவர்கள் அதிக தொகைக்கு கடைகளை குத்தகைக்குப் பெற்றுக்கொண்டு பின்பு நஷ்டம் காரணமாகத் தொடந்து கடைகளை நடத்த முடியாமல் மூடிவிடுகின்றனர். இதனால் நியாயமான தொகைக்கு வழமையாக நடத்திய எமக்கு குத்தகைக்கு வழங்குமாறு பிரதேச சபையிடம் கோரினோம். அதுமட்டுமல்லாமல் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் இது தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

பிரதேச சபையின் ஆடு, மாடு, மற்றும் கோழி இறைச்சிக்கடைகள் மூடப்பட்டிருப்பதால் பொதுமக்கள் பாதிப்படைவது மட்டுமின்றி பிரதேச சபைக்கான வருமானமும் இழக்கப்படுகின்றது. மூன்று கடைகளும் மூடப்பட்டிருப்புதால் வருடமொன்றுக்கு சுமார் 3 மில்லியன் ரூபா வருமானத்தை சாவகச்சேரி பிரதேச சபை இழக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-8)




## மாதர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தையல் இயந்திரங்கள்

தென்மராட்சி, நவம். 11
தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள இரு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக தையல் பயிற்சிகளை மேற்கொள்ள சங்கங்களுக்கு தலா 10 தைய்யல் இயந்திரங்கள் வீதம் வழங்கப்படவுள்ளன.

தேசிய சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான திணைக்களத்தின் பொருளாதார பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் வாழும் இளம்பெண்களுக்குதையல் பயிற்சிகளை வழங்கவென இருபது தையல் இயந்திரங்கள் பிரதேச செயலகத்துக்கு திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை நுணாவில் மத்தி மற்றும் நுணாவில் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு அதனூடாக தையற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## சங்கானை மண்டிகைக் குளத்தை சூழவுள்ள 100 ஏக்கர் விவசாய நிலம் அழிவடையும் அபாயம்



யாழ்ப்பாணம், நவ.11
சங்கானை, மண்டிகைக் குளத்தின் நீர் நிரம்பி வழிவதால் அதனைச் சூழவுள்ள 100 ஏக்கர் விவ்சாய நிலங்களில் பயிர்கள் அழிவடையும் அபாயத்தில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சங்கானை மண்டிகைக் குளம் 40 லட்சம் ரூபா செலவில் கடந்த மாதம் சீரமைக்கப்பட்டது. இதன்போது 12 அடி ஆழமாக்கப்பட்டு, சுற்றிவர 8 அடிமண் அணை கட்டப்பட்டது. ஒரு துளி தண்ணீரும் இல்லாத நிலையில் இருந்த குளம் அண்மையில் பெய்து வரும் மழையால் நிரம்பி வழிகின்றது. தொடர்ந்து மழை நீடிக்கும் பட்சத்தில் வான்கதவுதிறக்கப்படும் நிலை தோன்றலாம். இதனால் மேவிப்பாயும் வெள்ளம் குளத்தைச் சுற்றியுள்ள 100 ஏக்கர் விவசாய வயற்காணிகளில் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் தமது வயற்காணிகளில் தற்போதும் தேங்கி நிற்கும் மழை வெள்ளத்தால் பயிரழிவை எதிர்கொண்டுள்ளனர் இதனால் மேலும் பாதிப்படைய நேரிடும் என அச்சமுறுகின்றனர். (எ-29)

## இராமநாதன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.11
யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை மு.ப 9 மணிக்கு கல்லூரியிலுள்ள அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகாரங்கள், புனர்வாழ்வு, சிறை சீர்திருத்த அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும் சிறப்பு விருந்தினராக வலிகாம வலயக் கல்வி துணை இயக்குநர் நடராஜா காண்டீபனும் கலந்து கொள்ளவுள்ளனர் என அதிபர் தெரிவித்தார். (எ)

## போதிய வசதி இன்றிய நிலையில் கல்வியங்காடு பொதுச்சந்தை:

### சிரமத்தை எதிர்கொள்ளும் வியாபாரிகள்

யாழ்ப்பாணம், நவ. 11
ஆடியபாதம் வீதியில் தற்காலிகமாக இயங்கி வரும் கல்வியங்காடு பொதுச் சந்தை போதிய வசதிகள் இன்றிக் காணப்படுவதால் நுகர்வோரும் வியாபாரிகளும் சிரமப்பட்டு வருகின்றனர்.

சந்தைக் கட்டடத்தின் சீரமைப்புக் கட்டுமானப் பணிகளுக்காக இந்தச் சந்தை கடந்த ஒருமாதத்துக்கு முன்னர் தற்காலிக இடத்துக்கு மாற்றப்பட்டது.

இந்தப் பகுதியில் உள்ள தனியார் காணியில் தகரக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு மரக்கறி மற்றும் மீன் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அடைமழையினால் வியாபாரிகளும் நுகர்வோரும் இந்த தற்காலிக கொட்டகைகளினுள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். மாநகராட்சி மன்றம் போதிய வசதி களை ஏற்படுத்தித் தராமையால் தாம் மழையில் நனைந்தே வியாபாரத்தில் ஈடுபட்டதாக மீன் வியாபாரிகள் தெரிவித்தனர். இதே சமயம் கல்வியங்காட்டு சந் தையின் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டுமானப் பணிகளை இந்த ஆண்டுக்குள் முடிவுறுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாநகராட்சி மன்றம் தெரிவித்தது. (எ-17)

## தமிழ்த்தாய் மன்றம் நடத்தும் 2ஆவது இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணத்தில், அமரர் மு. க. சின்னையா சௌபாக்கியவதி (பாக்கியம்) நினைவாக தமிழ்த்தாய் மன்றம் நடத்தும் இரண்டாவது இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

குறித்த முகாம் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 'பொற்கமலதேவி வாசா' 31, புதிய செங்குந்தா வீதி, சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் காலை 7 முதல் 12 மணி வரை நடைபெறவுள்ளது. இதில் இலவச நீரிழிவு பரிசோதனை, இலவச குருதி அழுத்தப் பரிசோதனை செய்யப்படும்.

இந்த மன்றத்தினால் முதலாவது தடவையாக நடத்தப்பட்ட மருத்துவ முகாம் கடந்த மாதம் 5, 6, 7ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அதில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு நீரிழிவு மற்றும் குருதி அழுத்தப் பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் சுமார் 200 பேருக்கு நீரிழிவு மட்டம் அதிகமாக காணப்படுவது கண்டறியப்பட்டது.

அவர்களுக்கு மீண்டும் பரிசோதனை செய்வதற்காக இந்த முகாம் நடத்தப்படுகிறது. இவர்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன. அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்களும், புதிதாகப் பரிசோதனை செய்ய விரும்புபவர்களும் கலந்து கொள்ளமுடியும்.

அத்துடன் முதலாவது முகாமில் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிக்கு பரிந்துரைக்கப்பட்டுக் கிடைக்காதவர்களுக்கும் இந்த நிகழ்வில் கண்ணாடி வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பொதுமக்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், நவ. 11
இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு 13ஆம் திகதி உடுவிலிலும் 14ஆம் திகதி புத்தூரிலும் நடைபெறவுள்ளன.

பிரமிட் திட்டங்களால் பொதுமக்கள் ஏமாற்றப்படல், தனியார் துறை நுண்கடன் திட்டங்களின் பாதிப்பு, வங்கி நடைமுறைகள் மற்றும் சிறுதொழில்களுக்கான கடன், சட்டவிரோத நாணய தாள்கள் இனங்காணல் தொடர்பாக கருத்தரங்கில் கருத்துப் பரிமாறல்கள் நடைபெறவுள்ளன.

13 ஆம் திகதி திங்கட்கிழமை வலி தெற்கு உடுவில் பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும்.

14 ஆம் திகதி செவ்வாய்கிழமை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகும்

மதிய உணவு மற்றும் சிற்றுண்டி வசதிகளுடன் இரண்டு அமர்வுகளாக கருத்தரங்கு நடைபெறவுள்ளது. பொதுமக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் எதிர்காலத்தில் பிரதேச செயலக பிரிவு வாரியாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு பிரிவின் குழுக்களின் தலைவர் ஆர். ஸ்ரீ பத்மநாதன் அறிவித்துள்ளார். (எ-11)

## ஊர்காவற்றுறையில் கட்டாக்காலிகளுக்குத் தடை

யாழ்ப்பாணம், நவ.11
வேலணையில் மட்டுமன்றி ஊர்காவற்றுறையிலும் கட்டாக்காலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையானது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 66 ஆம் பிரிவுக்கு அமைவாக இதனை நடைமுறைப் படுத்தியுள்ளது. இந்த வகையில் நடப்பாண்டிலும் பிரதேசசபை யின் எல்லைக்குள் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள், ஆடுகளைக் கைப்பற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. மாடுகள், ஆடுகள் வளர்ப்பேோர் அவற்றைக் கட்டி வளர்க்குமாறும் தவறும் பட்சத்தில் அவை பிரதேச சபையால் கைப்பற்றப்படும் என்றும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலும் கட்டாக்காலிகள் இனி பிடிக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-4)

# பேராசிரியர் மகேஸ்வரனின் பணி நயப்பும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ.11
பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரனின் பணி நயப்பு விழாவும் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.
பேராதனைப் பல்கலைக்கழக தகைசார் பேராசிரியர் கலாகீர்த்தி சி.தில்லை நாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்
முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் திருமதி பவானி விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர்.
சிறப்பு விருந்தினர்களாக இந்திய துணைத்தூதரக கொன்சியூலர் ஆ.நடராஜன், திருமதி சாந்தி நடராஜனும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. விழா ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் கலாநிதி கே.ரீ.கணேசன் வரவேற்புரை நிகழ்த்துவார். ஆசியுரையை சோ.பிரசன்னா குருக்களும், தகைசார் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும், கலாநிதி ஆறு.திருமுருகனும் நிகழ்த்துவர்.
வாழ்த்துரையை தகைசார் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் மா.வேதநாதன், பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், பேராசிரியர் க.தேவராஜா, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ.துரைசிங்கம் கொழும்பு தமிழ்சங்கத்தலைவர் தம்புசிவசுப்பிரமணியம் ஆகியோர் நிகழ்த்துவர்.
அதனைத்தொடர்ந்து பணிநயப்பு மலர் வெளியீடு நிகழ்வு இடம் பெறும். வெளியீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார்.
தொடர்ந்து பேராசிரியர் வ.மகேஸ்வரன் எழுதிய பெரியதும் சிறியதும் நூல் வெளியீடு இடம் பெறும். நூல் நயவுரையை பேராசிரியர் கி.விசாகரூபன் நிகழ்த்துவார். (4)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | கன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 80 | 70 | 70 | 80 |
| கத்தரி | 150 | 200 | 160 | 160 | 180 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 60 |
| பயிற்றை | 180 | 200 | 250 | 250 | 120 |
| பாகல் | 200 | 300 | 300 | 250 | 200 |
| க.கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 100 |
| பெ.வெங்காயம் | 200 | 200 | 200 | 200 | 220 |
| சி.வெங்காயம் | 300 | 400 | 300 | 380 | 220 |
| பூசணி | 40 | 80 | 40 | 80 | 60 |
| தக்காளி | 200 | 160 | 250 | 160 | 120 |
| வாழைக்காய் | 100 | 80 | 70 | 80 | 80 |
| கீரை | 40 | 40 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 35 | 30 | 40 | 30 | 30 |
| ப.மிளகாய் | 400 | 500 | 500 | 600 | 700 |
| புடோல் | 100 | 100 | 100 | 140 | 100 |
| கோவா | 80 | 20 | 120 | 140 | 120 |
| வெண்டி | 100 | 100 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 160 | 200 | 160 | 160 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 | 200 |
| தேங்காய் | 90 | 90 | 100 | 120 | 70 |
| உ.கிழங்கு | 110 | 120 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 180 | 160 | 140 |
| வல்லாரை | 25 | 20 | 25 | 15 | 10 |
| கறிமிளகாய் | 250 | 300 | 250 | 300 | 280 |
| கரட் | 80 | 200 | 100 | 140 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 500 | 140 | 360 |

# தொண்டமானாறை அண்டிய இட மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை

## வெள்ள நீரால் ஏரி நிரம்பி வழிகிறது

யாழ்ப்பாணம், நவ. 11
தொடர்ந்து பெய்து வரும் கனமழையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் தொண்டைமானாறு ஏரியில் (பராச்) தண்ணீ நிரம்பி வழிவதால் இந்தப் பிரதேசத்தை அண்மித்துள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.
ஏற்கனவே பெய்த மழை காரணமாக குறித்த நீரேரிக்குத் தண்ணீர் வரத்து அதிகரித்திருந்தது. நேற்று மதியத்துக்குப் பின்னரான மழை காரணமாக தொண்டமானாறு ஏரிக்குத் தண்ணீர் வரத்து மேலும் அதிகரித்துள்ளது. ஏரியில் மொத்தம் 18 கதவுகள் உள்ளபோதிலும் அனைத்துக் கதவுகளின் ஊடாகவும் தற்போது தண்ணீர் வெளியேறிக்கொண்டிருக்கிறது.
நீரேரிக்கு தண்ணீர் வரத்து இன்னும் அதிகரித்தால் கப்பூது, வாதரவத்தை, மண்டான் ஆகிய பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் வெள்ளம் அதிகரிக்கும். எனவே இந்தப் பகுதி மக்கள் இது தொடர்பில் அதிக கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.
(உ-4,101)

# புல் வெட்டச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்

யுாழ்ப்பாணம், நவ. 11
மாட்டுக்குப் புல் வெட்டச் சென்ற குடும்பத்தலைவர் மழை வெள்ளத்தில் முகம் குப்புற வீழ்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் காக்கைதீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. ஆனைக்கோட்டையைச் சேர்ந்த து.ரூபசிங்கம் (வயது - 56) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். அவரைக் காணவில்லை என்று தேடிச் சென்ற போது மழைவெள்ளத்தில் முகம் குப்புற வீழ்ந்த நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினமிரவு சேர்க்கப்பட்டார். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். மாரடைப்பால் அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (4-8)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 780 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 600 | 500 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 700 |
| சுறா | 400 | 700 | 800 | – |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 400 | 400 | 500 | 600 |
| முரல் | 200 | 350 | 400 | – |
| கும்பிளா | 200 | 300 | 400 | 200 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 200 | 300 | 500 | 300 |
| திரளி | 150 | 200 | 200 | 150 |
| நகரை | 150 | 200 | 400 | 200 |
| சூடை | 100 | 120 | 160 | 100 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 150 |
| திருக்கை | 300 | 200 | 400 | – |
| மதனம் | 200 | 150 | 250 | – |
| கொய் | 100 | 100 | 50 | 50 |
| பாலை | 100 | 200 | 500 | 300 |
| வாளை | 100 | 150 | 400 | 200 |

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு இன்னும் மருத்துவர்கள் தேவை

## பிரதேச மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, நவ.11
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு மருத்துவர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர் மேலும் சில மருத்துவ அதிகாரிகளை நியமிக்குமாறு பிரதேச மக்கள் மாகாண சுகாதார அமைச்சரைக் கோரியுள்ளனர்.
மருத்துவமனையில் தினமும் வெவ்வேறு கிளினிக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. பிரதி செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் பொது மருத்துவம் மற்றும் நீரிழிவு சிகிச்சை கள் நடத்தப்படுகின்றன. இந்த கிளினிக்குகளில் வாராந்தம் 500 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற வருகின்றனர். ஆனால் கடமையில் இருக்கும் மருத்துவர்களின் எண்ணிக்கையோ மிகக் குறைவு. காலை 7.30 மணி தொடக்கம் கிளினிக் நடத்தப்படுகிறது.
இரவுக் கடமையில் உள்ள மருத்துவர்கள் காலை 7.30 மணி தொடக்கம் சிகிச்சை வழங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்கள் காலையில் விடுதிகளைப் பார்வையிட்டு சிகிச்சை நிலையத்துக்கு வருகின்றனர். குறிப்பிட்ட நோயாளர்களைப் பார்வையிட்ட பின்னர் கடமை முடிந்து சென்று விடுகின்றனர். அதன் பின்னர் வரும் மருத்துவர்களே ஏனைய நோயாளர்களைப் பார்வையிடுகின்றனர். இதனால் சிகிச்சை பெற வரும் நோயாளர்களில் அரைவாசி நோயாளர்களே பார்வையிடப்படுகின்றனர். ஏனையோருக்கு மீள் சிகிச்சைக்கான திகதி வழங்கப்பட்டு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.
கிளினிக்குகளில் சிகிச்சை பெற புதிதாகக் குறைந்தது 25 க்கும் மேற்பட்ட நோயாளர்களும் இணைந்து கொள்வதால் காலையில் வரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
மருத்துவமனையில் கடமையாற்றும் பொது மருத்துவ நிபுணர் உட்பட 7 மருத்துவர்கள் கடமையில் இருந்தால் தான் நோயாளர்கள் அனைவருக்கும் சிகிச்சை வழங்க முடியும். சில வேளைகளில் ஒரு மருத்துவரே பெருமளவு நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்க வேண்டிய நிலை காணப்படுகிறது.
இந்தக் கிளினிக்குகளுக்கு தென்மராட்சி பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் சிகிச்சை பெற வருவதனால் இந்த நோயாளர்களின் நலன் கருதி மேலும் மருத்துவ அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளனர்.
இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது தெரிவிக்கப்பட்டதாவது:
15 மருத்துவ அதிகாரிகளும் மருத்துவ நிபுணர்களும் கடமையாற்ற வேண்டிய நிலையில் மூன்று மருத்துவ நிபுணர்களும் (பொது மருத்துவ நிபுணர், குழந்தைகள் மருத்துவ நிபுணர், மகப்பேற்று மருத்துவ நிபுணர்) 7 மருத்துவ அதிகாரிகளும் கடமையாற்றுகின்றனர்.
நோயாளர்களின் நலன் கருதி இரவுக் கடமையில் ஈடுபடும் மருத்துவ அதிகாரிகளை காலையில் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றக் கேட்டுள்ளோம். அவர்களும் இரவுக் கடமை முடிந்து தமது விடுதி நோயாளர்களைப் பார்வையிட்ட பின்னர் கிளினிக்குக்குச் சென்று சிகிச்சையளித்து வருகின்றனர். அவ்வாறு மருத்துவ அதிகாரிகள் கிளினிக் கடமையில் ஈடுபடும் வேளையில் வெளிநோயாளர் பிரிவில் ஒரு மருத்துவர் கடமையாற்ற வேண்டியுள்ளது.
தற்போது தினமும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட நோய்ளர்கள் பல பிரதேசங்களிலிருந்து வந்த வண்ணமுள்ளனர். வெளிநோயாளர் பிரிவில் ஒரு மருத்துவ அதிகாரியுடன் அனுமதி அறையில் ஒரு மருத்துவர் கடமையாற்ற வேண்டிய நிலை காணப்படுகிறது.
மருத்துவமனையில் கடமையாற்றிய மருத்துவ அதிகாரிகள் பரீட்சையில் சித்தி பெற்று இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் மருத்துவருக்குப் பற்றாக் குறை காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.
(எ- 9)

# அகில உலக பஜனை நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.11
அகில உலக அகண்ட பஜனை நிகழ்வு யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று பி.ப 6 மணி முதல் நாளை பி.ப 6 மணி வரை நடைபெறவுள்ளது. உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவுவதற்காக 185 நாடுகளில் பல்லாயிரக்கணக்கான சாயி நிலையங்களில் ஒரே தினத்தில் 24 மணிநேர பஜனை இடம்பெறவுள்ளது. அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (எ)

# பருத்தித்துறை காந்திசேவாவில் காயத்திரி ஹோமம்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 92ஆவது அவதார தினத்தையொட்டி பருத்தித்துறை பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று சனிக்கிழமை காயத்திரி ஹோமம் நடைபெறவுள்ளது.
காலை 5 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி கணபதி ஹோமம் நடைபெற்று அதனை தொடர்ந்து காயத்திரி ஹோமம் இடம்பெறும். இதன் நிறைவில் நாராயண சேவை வழங்கப்படும். (4-173)

இது புதுசு

ஆண்களுக்கான காலணி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 3ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



பாகிஸ்தான் சென்ற

# இலங்கைக் குழு நாடு திரும்பியது

யாழ்ப்பாணம், நவ. 11

தேசிய கலந்துரையாடல் நிகழ்வுக்குப் பாகிஸ்தான் சென்ற இலங்கைக் குழு நேற்று வியாழக்கிழமை நாடு திரும்பியது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியன ஒன்றிணைந்து இளைஞர் கழகங்களில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு பன்னாட்டு இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டங்களில் பங்கு கொள்வதற்கு வழி சமைத்துக் கொடுக்கின்றன. அந்த வகையில் 9 வது தேசிய கலந்துரையாடல் நிகழ்வு இந்த வருடம் பாகிஸ்தானில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் இலங்கையில் இருந்து சுமார் 13 இளைஞர்கள் கடந்த 31ஆம் திகதி பாகிஸ்தான் நாட்டுக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் கடந்த 31 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை பாகிஸ்தானில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் ஜப்பான், நேபாளம், லண்டன், தாய்லாந்து, மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-56)

# மயிலிட்டி காசநோய் மருத்துவமனை பிரதேசம் விரைவில் ஒப்படைக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 11

மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையின் நிலப் பிரதேசம் படையினரால் விரைவில் சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும். எனத் தெரிவிக்கப்பட்டது.

வலிகாமம் வடக்குப் பகுதியின் எஞ்சிய பகுதி நிலம் விடுவிப்புமற்றும்விடுவிக்கப்பட்ட நிலங்களில் உள்ள நெருக்கடிகள் தொடர்பில் வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் குணபாலசிங்கம்தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் இராணுவத் தளபதியைச் சந்தித்து உரையாடினர். இதன்போதே மேற்படி உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஒரேயொரு காசசோய் வைத்தியசாலையாக குறித்த வைத்தியசாலையே விளங்கியது. இராணுவத்தினரின் ஆடம்பரப் பாவனை எவற்றுக்கும் குறித்த நிலத்தை சுவீகரிக்கும் திட்டம்இல்லாதகாரணத்தினால் விரைவில் ஒப்படைக்கப்படும்எனத்தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்திப்பில் இத்துடன் மேலும் பல விடயங்கள் ஆராயப்பட்டன.

மயிலிட்டிதுறைமுகப் பிரதேசம் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் அதனை அண்டிய பகுதிகள் விடுவிக்கப் படாதமையினால் அந்தப் பகுதி மீனவர்கள் அங்கு மீளக்குடியமரவில்லை. இதனால் துறைமுகம் ஊடான மீன்பிடியை அபிவிருத்தி செய்யமுடியாமல் உள்ளது. இதற்கும் அப்பால் இந்தப் பகுதியைச் சேர்ந்த அதிக மீனவர்கள் இன்னும் பருத்தித்துறைப் பகுதியிலேயே வாழ்கின்றனர். பருத்தித்துறை பொன்னாலைப் பாதையின் ஊடாக அவர்களின் போக்குவரத்துக்கு அனுமதிப்பதாக படையினர் சம்மதம் தெரிவித்து இரு மாத காலம் கடந்துவிட்ட நிலையிலும் குறித்த பாதை திறக்க ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. என படைத்தரப்பிடம் சுட்டிக் காட்டப்பட்டது. இவற்றுக்குப் பதிலளிக்கும் போது போக்குவரத்துக்கான பணிகள் தற்போது இடம்பெறும்நிலையில் பணிகள் முடிவுற்றதும் வீதி போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும் எனவும் முன்னர் பகல் நேரங்களில் மட்டும் அரச பேருந்துகளே பயணிக்க முடியும் எனக் கூறப்பட்ட போதிலும் தற்போது சகல வாகனங்களும் எந்த நேரத்திலும் போக்குவரத்துச் செய்யும் நிலமை ஏற்படும் எனவும் இந்தப் பணியானது சுமார் 10 தினங்களுக்குள் நிறைவுபெறும் எனவும் படைத்தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-101)

# கேப்பாப்பிலவு மக்களின் உரிமையை மறுப்பது இன நல்லிணக்கத்தில் தடையை ஏற்படுத்தும்

## எதிர்கட்சித் தலைவர் சம்பந்தன் அரச தலைவருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், நவ.11

கேப்பாப்பிலவுக் காணிகளை மீளப்பெற காணிகளுக்குச் சொந்தமான மக்கள் காட்டி வரும் துணிச்சலான உறுதிப்பாட்டின் அடிப்படையில், சட்டபூர்வமான அவர்களது காணி உரிமையை மறுப்பது இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் பெரிய தடையாக அமையும். என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கேப்பாபிலவு காணி விடுவிப்புத் தொடர்பாக நேற்று முன்தினம் அவரால் அரச தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கடந்த 2017 ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி இந்த விடயமாகத் தங்களைச் சந்தித்து உரையாடியுள்ளனர். இந்தச் சந்திப்பின்போது 132 ஏக்கர் தனியார் காணிகள் விடுவிக்கப்படும்எனத்தீர்மானிக்கப்பட்டது. 3 மாத காலத்தினுள், அதாவது 2017 ஆகஸ்ட் 22 இலிருந்து 2017 நவம்பர் மாதம் 23 ஆம் திகதிக்கிடையில் இந்தக் காணிகளைத் தங்களால் விடுவிக்க முடியும் என இராணுவம் நம்பிக்கை கொண்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கடந்த ஒக்டோபர் 10 ஆம் திகதியிடப்பட்ட தனது கடித மூலம் குறித்த 132 ஏக்கர்களும் 2017 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்பு விடுவிக்கப்படும் என எனக்கு அறிவித்திருந்தார்.

குறித்த காணிகள் மிக விரைவில் தங்களுக்கு விடுவிக்கப்பட வேண்டுமெனக் கோரி காணியின் வாசலில் கடந்த 250 நாள்களுக்கும் மேலாக மக்கள் வெய்யிலையும், மழையையும் பொருள்படுத்தாது தமது போராட்டங்களைச் செய்து வருகின்றனர்.

அந்த மக்களுடைய காணிகள் மிகக் கூடிய விரை வில் விடுவிக்கப்பட வேண்டுமென நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் காணிகள் 2017, நவம்பர் 23 திகதியளவில் விடுவிக்கப்படும் என மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர். அங்கு மிகுதியாகவுள்ள தனியாருக்குச் சொந்தமான காணி 73 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. இந்தக் காணி மக்களின் சம்மதமின்றி இராணுவத்தால் அடாத்தாகக் கையேற்கப்பட்டுள்ளதோடு, பொதுத் தேவையொன்றிற்காக காணி சுவீகரிக்கும் போது தேவைப்படுத்தப்பட்டவாறு அவை கையேற்கப்படவில்லை.

இராணுவம் இந்தக் காணியில் தங்கியிருக்க ஆரம்பித்த காலம் தொடக்கம் காணிகளைத் திருப்பித் தருமாறு மக்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர்.

இந்தக் காணிகளில் தான் அவர்களுடைய மூதாதையர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் வேறு மாற்றுக் காணிகளைப் பெறுவதற்கோ அல்லது நட்டஈட்டைப்பெறுவதற்கோ விருப்பமுடையவர்களாக இல்லை. இந்தக் காணிகளில் அவர்களுக்குரிய உரிமை மிக வலுவானது. அதனால் எத்தகைய மாற்றீடுகளும் அவர்களுக்குத் திருப்தியளிக்காது. அத்துடன் இந்தக் காணிகளைப் பெற குறித்த மக்கள் அதிக துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். அவர்களுடைய விருப்பங்கள் தட்டிக்கழிக்கப்படாமல் மதிக்கப்பட வேண்டியதென்பதை நான் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

இராணுவத்துக்குத் தேவையாக இருந்தால் போதியளவு வேறு காணிகள் அங்கேயுள்ளன. அங்கே நட்டஈடு எதுவும் செலுத்தாது அவர்கள் தங்கியிருக்க முடியும்.

ஆகவே, குறிப்பிட்ட 73 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட காணிகளும் கூடிய விரைவாக அவற்றுக்குரிய பிரஜைகளுக்கு மீளக் கையளிக்கப்பட வேண்டுமென்பதை மிகவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விடயத்தில் அரச தலைவர் தாங்கள் தலையீடு செய்யுமாறு கோருகிறேன் என்றுள்ளது. (எ-21)

# ஒக்ரோபர் புரட்சியின்–நூற்றாண்டை முன்னிட்டு கவிதை, கட்டுரைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.11

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் (ரஷ்ய சோசலிசப்) புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக தேசிய அளவில் நடத்தப்படும் கவிதை, கட்டுரைப் போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. ஜீ.சி.ஈ. உயர்தர மணவர்கள் ஒரு பிரிவாகவும், பாடசாலை மாணவர்கள் அல்லாத ஏனையோர் திறந்த பிரிவாகவும் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.

***கவிதை :*** 'ஆஹா என்று எழுந்தது பார் யுகப்புரட்சி' என்ற தலைப்பில் மாணவர்கள் எ4 தாளின் ஒரு பக்கத்திலும், திறந்த பிரிவினர் எ4 தாளின் இரண்டு பக்கங்களிலும் உள்ளடங்குமாறு தயாரித்தல் வேண்டும்.

***கட்டுரை :*** மாணவர்கள் 'மனிதம் உயர உழைப்போம்' மற்றும் 'இலாபப் பசிக்கு இரையாகும் இயற்கைச் சூழல்' ஆகிய தலைப்புகளில் யாதாயினும் ஒன்றினைத் தெரிவு செய்து 300 சொற்களுக்குக் குறைவுபடாத வகையில் தயாரித்தல் வேண்டும். திறந்த பிரிவினர் 'ஒக்ரோபர் புரட்சியும் இன்றைய உலகும்', 'சோசலிசப் புரட்சியும் மனித உரிமைகளும்' ஆகிய தலைப்புகளில் யாதாயினும் ஒன்றினைத் தெரிவு செய்து 500 சொற்களுக்கு குறைவுபடாத வகையில் தயாரித்தல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் சுயமாகப் போட்டியாளர்களால் எழுதப்பட்டவையாகவும், ஏலவே பிரசுரிக்கப்படாத வையாகவும் அமைதல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பாக பதிவுத் தபாலில் 'தேசிய கலை இலக்கியப் பேரவை, இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, யாழ்ப்பணம்.' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள பேராசிரியர் க.கைலாசபதி நினைவு நிகழ்வில் வைத்து வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 07700 27621, 07184 73 926, 0765283 003 ஆகிய அலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் கேட்டுக்கொள்கின்றனர். (எ)



தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நடத்தப்பட்ட உலக குடியிருப்பு தினக் கட்டுரைப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி வேணுகோபாலவாணிதாசன் யுவஸ்திகா தேசிய மட்டத்தில் பங்குபற்றி முதலாம் இடத்தினைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். (எ)

# வியாபாரச் செயற்பாடுகளை மாகாணசபைக்குக் கீழ் கொண்டு வர புதிய சட்டம் வடக்கில்

யாழ்ப்பாணம்.நவ.11

வடக்கில் வியாபாரத்தினை மேற்கொள்பவர்களின் நடவடிக்கைகளை வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டம் மூலம் மாகாண சபைக்கு உட்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என மாகாண இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாணத்தில் பல்வேறு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான அனுமதிகள், பதிவுகள், நிதி நடவடிக்கைகள் என்பன பிரதேச செயலங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன் வருமானம் நேரடியாக கொழும்பு அமைச்சுக்குச் செல்கின்றது. எனவே பெறப்படும் வருமானத்தை வடக்கு மாகாண சபைக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்தப் புதிய நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அதாவது வடக்கு மாகாணத்தில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் புதிதாக வியாபாரம் மேற்கொள்ள இருப்பவர்கள் ஆகியோரின் பதிவுகள் வடக்கு மாகாண சபையின் கீழ் நடைபெறவுள்ளது. இதன் மூலம் பெறப்படும் வருமானம் வடக்கு மாகாண சபைக்குப் பயன்படுத்தும் வகையில் அமையவுள்ளது.

ஆகவே இதனை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண சபைக்கு உட்பட்ட நியதிச் சட்டம் அவசியம். ஆகவே குறித்த சட்டம் தயாரிக்கப்பட்டு தற்போது நியதிச் சட்டப் பரிசீலினைக் குழுவுக்குப் பரிசீலினைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் பரீசீலினைகள் நிறைவடைந்த பின்னர் ஆளுநரின் அனுமதியின் பின்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதன் பின்னர் வடக்கு மாகாணத்தில் வியாபாரம் சார்ந்த அனைத்துப் பதிவுகளும், மாகாண சபைக்கு உட்பட்ட திணைக்களத்தின் ஊடாக நடைபெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# 2 கிலோ போதைப் பொருள் (தூள்) வவு. பேருந்து நிலையத்தில் மீட்பு

## ஹெரோயினின் மூலப் பொருளாக இருக்கலாம் எனச் சந்தேகம்



யாழ்ப்பாணம், நவ.11

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குக் கடத்திச் செல்லப்பட்ட 2 கிலோ போதைப் பொருள் நேற்று முன்தினம் வவுனியாவில் கைப்பற்றப்பட்டது. அதைக் கடத்திச் சென்ற நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பிரதி பொலிஸ் மா அதிபர் ரி. எம். எஸ். எம். தென்னக்கோன் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாந்து ஆகியோரின் தலைமையில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஏ. ஆர். மஹிந்த தலைமையிலான பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா பேருந்து நிலையத்திலும் அவர்கள் சோதனையிட்டனர். இதன் போதே குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டது. யாழ்ப்பாணம், நாவற்குழிப் பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரொருவரே அதைக் கடத்திச் சென்றது தெரியவந்தது. அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளில்; அந்தத் தூள் ஹெரோயினின் மூலப் பொருளாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. எனவே அதன் மாதிரி போதை ஒழிப்பு தலைமைப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பரிசோதனையின் பின்னரே அது எந்த வகையான போதைப் பொருள் என்பதை உறுதிப்படுத்த முடியும் என தெரிவித்த பொலிஸார் சந்தேகநபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் எனவும் தெரிவித்தனர்.

வவுனியா பேருந்து நிலையத்தில் நாளுக்கு நாள் போதைப்பொருள்கள் மீட்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிக் கடத்தப்படுகின்ற போதைப் பொருள்களே மீட்கப்படுகின்றன என்று பொலிஸார் கூறுகின்ற னர். ஆனால் அது தொடர்பான போதிய விளக்கங்களை அவர்கள் வழங்கவில்லை. அது தொடர்பான தொடர்ச்சியான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. போதைப் பொருள்கள் மீட்கப்பட்டால் எங்கிருந்து வந்தது. அதனுடைய மூலம் யார் என்பது இன்று வரை தெரியாமலேயே உள்ளது. இதற்கு பின்னால் உள்ளவர்களைப் பொலிஸார் வெளிப்படுத்தாது விடில் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் அனைத்துக்கும் பொலிஸாரே பொறுப்பேற்க வேண்டும் என மாவட்டத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். (எ-21)

# யாழ்ப்பாண நபரொருவர் வவுனியாவில் கைது

வவுனியா, நவ.11

வெளிநாட்டிலிருந்து வந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற நபர் ஒருவரை வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து சோதனை மேற்கொண்ட பொலிசார் அவரிடம் மதுபானம், சிகரட் என்பனவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கட்டார் நாட்டிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை இலங்கை வந்த யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வெளிநாட்டு மதுபானம் மற்றும் இலங்கை விமான நிலையத்தில் வாங்கிய 10 பெட்டி சிகரட் என்பனவற்றை எடுத்துச் சென்றபோது வவனியா மத்திய பேருந்து தரிப்பிடத்தில் வைத்து போதை ஒழிப்பு பொலிசார் சோதனை மேற்கொண்டபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என தெரிவித்துள்ளனர். குறித்த நபரை தற்போது யாழ்ப்பாணம் நோக்கிச் செல்ல அனுமதித்துள்ளதுடன் 14 ஆம் திகதி வவுனியா நீதிமன்றத் துக்கு வருமாறும் அறிவித்துள்ளனர்.

கடந்த பல வருடங்களின் பின்னர் தனது தாய்நாட்டுக்கு வந்த குறித்த யாழ்ப்பாண இளைஞர் இரண்டு மதுபானப் போத்தல்கள் மற்றும் இலங்கை விமான நிலையத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 10 பெட்டி சிகரட் என்பனவற்றை எடுத்துச் சென்றுள்ளார். விமான நிலையத்தில் குறித்த மதுபானப்போத்தல்கள், சிகரட் என்பனவற்றை விடு வித்த போதும் வவுனியாவில் பொலிசார் இவற்றைக் கைப்பற்றியுள்ளது தனக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என குறித்த இளைஞர் தெரிவித்துள்ளார். (எ)

# தொன்மையும் மேன்மையும் கொண்டது சைவ சமயம்

## பேராசிரியர் மா. வேதநாதன்

யாழ்ப்பாணம், நவ. 11

தமிழர் தம் சமயமான சைவம், தமிழ்மொழி போல் தொன்மையும் மேன்மையும் கொண்டது. தொல்காப்பியம், மணிமேகலை முதலிய நூல்களில் அதன் தொன்மையையும் மேன்மையையும் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 57 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பேராசிரியர் மா. வேதநாதன் தெரிவித்திருந்தார். இந்தவிழா கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றிருந்தது.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

சைவ சமயத்தை அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் வளர்த்து வருகின்றது. சங்கம், இலங்கைரீதியாக மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் சைவத் தமிழர்களிடையேயும் இளஞ் சைவப்புலவர் சைவப்புலவர் தேர்வுகளை வருடா வருடம் நடத்தி வருகிறது. புலவர் என்பது மிகத் தொன்மையான சொல். சங்க நூல்களில் இதனைக் காணலாம். 'மணிமேகலை' எனும் நூல் தான் முதன் முதலில் 'சைவ வாதி' எனக் குறிப்பிடுகிறது. இந்தச் சைவ வாதிகள் தான் புலவர் குழு எனக் குறிப்பிடுகிறது. சைவசமய வாதிகள் சைவத்தை வளர்ப்பதற்காக மிகத் தொன்மையான காலத்தில் பிற மதங்களுடன் வாதம் செய்துள்ளனர். அத்தகைய தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தையும் நோக்கலாம். இந்தச் சங்கம் சைவப் புலவர் குழுவைக் கூட்டத்தை உருவாக்கி வருகிறது. இந்தக் குழாம் சைவவாதிகள் போலச் செயற்பட்டுச் சைவத்தை வளர்க்க வேண்டும். இந்தவருடம் சைவசமயத்துக்குரிய எழுச்சிமிகு வருடமாக நாம் பார்க்கலாம். இந்த வருடத்திலே தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அனைத்துலக 2ஆவது சைவ மாநாட்டைச் சிறப்பாக நடத்தியிருந்தது. சைவ மகாசபை சைவ இளைஞர் மாநாட்டை நடத்தியிருந்தது. சைவ பரிபாலன சபை சைவ மாநாட்டை நடத்தியிருந்தது. மன்னாரில் இந்துசமய மாநாடு நடைபெற்றிருந்தது. இவை அனைத்தும் இந்த மண்ணில் நாவலரின் பின் சைவ எழுச்சி பெறுவதைக் காட்டுகின்றன என்றார். (எ-28)

# மரநடுகை மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான ஓவியப்போட்டி

யாழ்ப்பாணம், நவ.11

வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப்போட்டி நடைபெறவுள்ளது. மரம் நடுகை மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வடக்கு மாகாண சகல வலயங்களிலும் இந்த நடவடிக்கை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரனால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த போட்டி இளநிலைப்பிரிவு (தரம் 6முதல் 8) மாணவர்களுக்கிடையே 'மரங்களின் சுற்றுச் சூழலின் பாதுகாவலர்கள்' எனும் கருப்பொருளின் அடிப்படையில் நடத்தப்படவுள்ளது.

வெற்றி பெறுபவர்களுக்கு, 1 ஆம் இடம் ரூபா 3000, 2 ஆம் இடம் ரூபா 2000, 3 ஆம் இடம் ரூபா 1000, ஆறுதல் பரிசில்களாக ஐவருக்கு ரூபா 500 வீதம் வழங்கப்பட வுள்ளன. ஆக்கங்கள் யாவும் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், விவசாய அமைச்சுக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (எ)

# வடக்கு மாகாணத்தில், 2 லட்சத்து 75000 தென்னைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், நவ. 11

நடப்பு ஆண்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டத்திலும் மொத்தமாக 2 லட்சத்து 75 ஆயிரம் தென்னைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன என தென்னை அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் வைகுந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாது:

நடப்பு ஆண்டில் குறித்த 3 மாவட்டத்திலும் 3 இலட்சம் தென்னை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டு நாற்று மேடைகளும் அமைக்கப்பட்டன. இருப்பினும் மேற்குறித்த எண்ணிக்கைத் தென்னங் கன்றுகளே மிகத் தரமான கன்றுகளாக இனம் காணப்பட்டன. எஞ்சியவை சற்று தரமற்றவையாக கானப்பட்டமையினால் விநியோகம் செய்யப்படவில்லை. இந்த விநியோகம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதனடிப்படையில் எமது இலக்குக்கு உட்பட்டு விநியோகம் இடம்பெற்றது. இதே நேரம் இதில் நேரடியாக மக்களுக்கும் விநியோகித்த அதேநேரம் மாவட்டச் செயலகம் உள்ளிட்ட அரசதிணைக்களங்களின் கோரிக்கைக்கும் அவை வழங்கப்பட்டன. அதில் மாவட்டச் செயலகங்கள் பெற்ற தென்னங்கன்றுகளில் அதிகமானவை பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களுக்கே விநியோகம் செய்யப்பட்டன. இதே நேரம் புதிதாக தென்னம் செய்கையை மேற்கொள்பவர்களில் வறுமை நிலையில் இருப்போரை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் 600 ஏக்கர் நிலத்துக்கான குழு தோண்டலிற்கான கொடுப்பனவையும் நாம் வழங்கியிருக்கின்றோம். அந்த வகையில் ஒரு ஏக்கருக்கு 41 தென்னங்கன்றுகள் நடமுடியும்.

அந்த வகையிலும் 24 ஆயிரத்து 500 தென்னைகளை நட ஒரு குழிக்கு 100 ரூபா வீதம் 25 லட்சம் ரூபா பணமும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 250 ஏக்கருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 230 ஏக்கருக்கும், யாழ்ப்பாணத்தில் 120 ஏக்கருக்கும் இந்த மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதே வேளை இராணுவத்தினரும் தென்னங்கன்றுகளை கோரினர். மொத்தம் 4 ஆயிரத்து 400 கன்றுகள் படையினருக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது என்றார். (எ-101)

# மருத்துவமனைகளின் வளங்களை நிறைவு செய்தாலே தரமுயர்த்தல் பற்றி சிந்திக்கலாம்

வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் பௌதிக விருத்தி மற்றும் ஆளணிப் பற்றாக்குறை ஆகியவற்றை நிறைவு செய்த பின்னர் மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவது பற்றி கவனத்தில் கொள்வது சிறப்பாக அமையும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் சி. திருவாகரன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாணத்தில் உள்ள சில மருத்துவமனைகளை தரம் உயர்த்துவது பற்றி கொழும்பு அமைச்சுக்குப் பிரேரணை முன் வைத்தோம். அமைச்சு சில மருத்துவமனைகளைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்திருந்தது. அந்த வகையில் தற்போது புதுக்குடியிருப்பு, மல்லாவி, முருங்கன், ஆகிய மருத்துவ மனைகள் ஆதார மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மாங்குளம் மருத்துவ மனை தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

ஏனைய மருத்துவமனைகளைத் தரம் உயர்த்த அமைச்சு நடவடிக்கை எடுப்பதற்கு முதல் அந்த மருத்துவமனைகளில் உள்ள கட்டடம், மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆளணி வளங்கள் என்பவற்றை இயலுமான வரை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த வளங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் தரம் உயர்த்துவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது இலகுவாக அமையும் என்றார். (எ-ரி)

# தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தனித்துப் போட்டியிடத் தீர்மானம்

செல்லையா விஜயரட்ணம் (இ.மு.ச.நீ) தலைமையிலான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர், எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலை முன்னணியினர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஸ்தாப கரும் தலைவருமாகிய செல்லையா விஜயரட்ணம் தலைமையில் யாழ்ப்பாணம் மாநகரசபையிலும் மற்றும் வலிகாமம் தென்மேற்கு நல்லூர், பூநகரி ஆகிய பிரதேசங்க ளில் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளது என தெரிவிக்கப்பட்டது. (எ)

### கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில்

# டெங்குத் தாக்கம் 4 மடங்காக அதிகரிப்பு

கொழும்பு, நவ. 11

நாடு முழுவதிலும் இந்த ஆண்டு இதுவரையில் ஒரு இலட்சத்து 67 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். 395 பேர் உயிரிழந்துள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நாடு முழுவதிலும் 55 ஆயிரத்து 150 நோயாளர்கள் இனம் காணப்பட்டிருந்தனர். 97 உயிரிழப்புக்கள் பதிவாகியிருந்தன. கடந்த ஆண்டுத் தரவுகளுடன் ஒப்பிடும் போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் மூன்று மடங்கு அதிகரிப்பை காண முடிகின்றது. உயிரிழப்புகளும் நான்கு மடங்காக அதிகரித்துள்ளன.

2010ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இந்த ஆண்டிலே கூடுதலான டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். கூடுதலான டெங்கு உயிரிழப்புக்களும் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டு மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தொடர்ச்சியாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்டன. ஓகஸ்ட் மாதத்திற்கு பின்னர் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து. தற்போது மழையுடன் கூடிய கால நிலை காரணமாக டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு கூறுகின்றது. (5)

## அடுத்தாண்டும் போர்க் கப்பல்கள் கொள்வனவு

### இலங்கைக் கடற்படை தகவல்

கொழும்பு, நவ. 11

கடலோரப் பாதுகாப்பைப் பலப்படுத்த கடற்படை நவீன போர்க் கப்பல்களைக் கொள்வனவு செய்யும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

இந்த ஆண்டில் மூன்று கடலோரப் பாதுகாப்புக் கப்பல்களை வாங்கியுள்ள நிலையில் அடுத்த ஆண்டில் இந்தியா, ஜப்பான், சீனா மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் புதிய ரக கப்பல்களைக் கொள்வனவு செய்யவுள்ளது.

இலங்கைக் கடல் எல்லையில் அதிகளவில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் ஆள்கடத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல் என்பவற்றைக் கட்டுப்படுத்த இலங்கைக் கடற்படை செயற்பட்டு வருகின்றது.

கடல் எல்லைப் பாதுகாப்பை உறுதிப்படுத்த புதிய பாதுகாப்பு கப்பல்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (5.31)

## பல்கலைக்கழக நிர்வாக பதவி வெற்றிடங்கள்

கொழும்பு, நவ. 11

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்களில் நிலவும் உதவிப் பதிவாளர், உதவி நிதியாளர், உதவிக் கணக்காளர், உதவி உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய பதவிகளுக்கும், இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைக்கு உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி நாளைமறுதினம் திங்கட்கிழமை.

போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்டு முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளமூடாக வெளியிடப்படும்.

நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெறும் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகத் தேர்வுகளை இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடத்தி நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே உயர்கல்வி நிறுவனங்களில் பணிபுரிவோர், போதிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதுடன், குறிப்பிட்ட பதவிக் காலத்தையும் நிறைவு செய்திருப்பின் அந்தந்த நிறுவனத் தலைவர்களுக்கூடாக விண்ணப்பிக்க முடியும்.

வெளிவாரியாக விண்ணப்பிப்போர், பொது நிர்வாகப் பட்டப்படிப்பின் டிப்ளோமா அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும் என்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான உச்ச வயதெல்லை 30 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களையும், விண்ணப்ப படிவத்தையும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் www.ugc.ac.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (5)

## ஒப்பந்தங்களின் முறிப்பே பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு காரணமா?

### *அமைச்சரவை உபகுழு ஆய்வு*

கொழும்பு, நவ. 11

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பெற்றோலைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்கள் மூன்றை இல்லாமல் செய்தமையே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பெற்றோல் தட்டுப்பாட்டுக்குக் காரணமா என்பது தொடர்பில் அமைச்சரவை உப குழு ஆராயவுள்ளது.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி ஒப்பந்தங்களை இல்லாமல் செய்வது தொடர்பான யோசனையை அமைச்சரவையும் அங்கீகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தங்கள் இல்லாமல் செய்யப்படுகின்றபோது களஞ்சியங்களில் எரிபொருள் உரிய அளவில் பேணப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவால், அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, அநுரபிரியதர்சன யாப்பா, சரத் அமுனுகம உள்ளிட்ட மூவரடங்கிய அமைச்சரவை உப குழுவால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (5)

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வந்த சோதனை

நாடாளுமன்ற உறுப்பினர்களின் இரட்டைக் குடியுரிமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது. இது தொடர்பில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் சத்தியக் கடதாசிகள் பெற்றுக்கொள்ளுமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் பவ்ரல் அமைப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் ஆக்கப்பட்டதைத் தொடர்ந்து, இது தொடர்பிலான சர்ச்சைகள் எழுப்பப்பட்டு வருகின்றது. இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொண்டுள்ளனரா இல்லையா என்பது குறித்து அறிந்து கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் சத்தியக்கடதாசிகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## இரட்டைக்குடியுரிமையை மறைத்தால் சிறைத்தண்டனை

### *அமைச்சர் மகிந்த சமரசிங்க யோசனை*

கொழும்பு, நவ. 11

இரட்டைக்குடியுரிமை உள்ளதை மறைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராவது இனியும் செயற்பட்டால் அவர்களைப் பதவி நீக்குவதுடன் மாத்திரமல்லாது, சிறையிலும் அடைக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.



சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருக்க முடியாது என்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் எல்லோரும் அறிந்துள்ளனர். இனியும் யாரும் அதனை மறைத்துச் செயற்பட முடியாது.

கீதா குமாரசிங்க இரட்டைக் குடியுரிமையுடன் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவது சட்டவிரோதம் என்று தெரிவித்து மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், நீதிமன்றம் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாது என்று தீர்ப்பளித்திருந்தது. மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை உயர் நீதிமன்றமும் உறுதிப்படுத்தித் தீர்ப்பளித்திருந்தது. கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போவதுடன் நாடாளுமன்றப் பதவி மூலம் அவர் பெற்றுக்கொண்ட அனைத்துச் செலவினங்களையும் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தீர்ப்பைத் தெரிந்து கொண்டே, இரட்டைக்குடியுரிமை இருப்பதை யாராவது நாடாளுமன்றத்துக்கு மறைத்தால் அவர்களுக்கு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மாத்திரம் போதாது. அவ்வாறானவர்களுக்கு சிறைத்தண்டனையும் வழங்கப்படவேண்டும் - என்றார். (5.31)

## பிணைமுறி ஆணைக்குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் யார்?

### *மைத்திரியிடம் விளக்கம் கோர ஐ.தே.க. தீர்மானம்*

கொழும்பு, நவ. 11

சர்ச்சைக்குரிய மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கான ஆணைக்குழுவை நிறுவியமைக்காக, மைத்திரிபால சிறிசேனவை எதிர்க்கின்றவர்கள் யார் என்பதை அறிவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரச தலைவருடன் சந்திப்பொன்றை நடத்தவுள்ளனர் என்று அந்தக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடத்திய கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாதுலுவாவே சோபித தேரரின் நினைவு தின நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரையின் விளக்கத்தைக் கேட்டறியும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தோம்.

பிணைமுறி மோசடி விவகாரத்தைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவை நியமித்தமைக்கு யார் எதிர்ப்பு விடுத்தார்கள்?, எவ்விடத்தில் வைத்து எதிர்ப்புக் கருத்து விடுக்கப்பட்டது?, எந்த நேரத்தில் அவ்வாறான ஒரு செயற்பாடு இடம்பெற்றது? உள்ளிட்ட தகவல்கள் எமக்கு அவசியப்படுகின்றன. அதனை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமே நேரடியாகக் கேட்டறிவதற்குநாம் இவ்வாறானதொரு பேச்சை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இது தொடர்பான கடிதத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு இவ்வாரத்திலேயே அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (5)

## இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டை ஐ.நா. கவனத்தில் எடுக்கும்

கொழும்பு, நவ. 11

இலங்கை இராணுவத்துக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் கவனத்தில் கொள்ளப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் இதனைத் தெரிவித்துள்ளார்.

மைத்திரி அரசின் ஆட்சியிலும் தமிழர்கள் மீதான சித்திரவதைகள் தொடர்வதாக, 52 பேரின் சாட்சியங்களை அடிப்படையாக வைத்து அசோசியஸ்ட் பிரஸ் அறிக்கை வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், இராணுவத்தினர் சித்திரவதைகளு டன் தொடர்புபட்டுள்ளனர் என்று குற்றச்சாட் டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றன. என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (5)

## *அம்பாந்தோட்டையில் சீனா:*

## எந்தக் கவலையும் எங்களுக்கு இல்லை

### இந்திய கடலோரப் பொலிஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீனாவின் தலையீடுகள் குறித்து, இந்தியக் கடலோரப் பொலிஸ் கவலை கொள்ளவில்லை என்று இந்திய கடலோரப் பொலிஸ் படையின் பணிப்பாளர் ராஜேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

'டைம்ஸ் ஒவ் இந்தியா' நாளிதழுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனா 99 ஆண்டுகள் குத்தகைக்குப் பெற்றுக் கொண்டிருப்பது இந்தியாவுக்கு என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்று இந்தியக் கடலோரப் பொலிஸ் படையின் பணிப்பாளர் ராஜேந்திர சிங்கிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு, நாம் இலங்கையுடன் புரிந்துணர்வு உடன்பாடு செய்திருக்கிறோம். சீனாவின் தலையீடுகளால் எமது உறவுகளில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று அவர் பதிலளித்துள்ளார். (5)

# இலங்கையில் 5 லட்சம் பெண்களுக்கு நீரிழிவு

## சுகாதாரப் பணிப்பாளர் ஜயசுந்தர

கொழும்பு, நவ. 11

வீடுகளுக்கு வெதுப்பக உற்பத்திப் பொருள்களைக் கொண்டு சென்று விற்பனைசெய்யும் கலாசாரம் பெண்களை ஆரோக்கியமற்றவர்களாக்கியுள்ளது. நாட்டில் 5 லட்சம் பெண்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சுகாதாரப் பணிப்பாளர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஆரோக்கியமான பெண்கள் ஆரோக்கியமான நாடு' எனும் கருப்பொருளில் எதிர்வரும் 14 ஆம் திகதி உலக நீரிழிவு தினம் கொண்டாடப்படவுள்ளது. நாட்டின் முதுகெலும்பாக உள்ள பெண்களை ஆரோக்கியமற்றவர்களாக மாற்றும் இன்னுமொரு கலாசாரம் நாடு முழுவதும் மிக மெதுவாகப் பரவி வருகின்றது. முளையிலேயே கிள்ளியெறியவேண்டும்.

நாட்டின் சனத்தொகையில் 52 சதவீதம் பெண்களே உள்ளனர். நாட்டின் பொருளாதாரத்திலும் அவர்களின் பங்களிப்பே அளப்பரியது என்பது வெளிப்படை. இவர்களுக்கு நோயாபத்துக்கள் ஏற்பட்டு அவர்கள் செயலிழந்தால் நாட்டின் பொருளாதாரமும் பாதிப்படையக் கூடும்.

200 மில்லியன் பெண்களுக்கு நீரிழிவுத் தாக்கம் உள்ளதாக உலக சுகாதார ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் 5 இலட்சம் பெண்களில் நீரிழிவு தாக்கமுள்ளதாகத் தெரியவருகின்றது. கொழும்பை எடுத்துக்கொண்டால் நூற்றுக்கு 18 வீதம் நீரிழிவுத் தாக்கமுள்ளது. அதிகளவாக கர்ப்பகாலத்திலேயே பெண்கள் நீரிழிவுக்குள்ளாகின்றனர் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ஐந்தில் இருவருக்கு கர்ப்பகாலத்தில் நீரிழிவு தாக்கம் ஏற்படுவதாகவும் அதில் ஒருவர் உயிரிழக்கும் வரை இதைக் காவிச்செல்லும் நிலையும் ஏற்படுகின்றது.

பெண்கள் அதிகளவாக மாமிச உணவுகளைத் தவிர்ப்பதைக் குறைத்திட வேண்டும்.

பானங்களில் மாத்திரம் சீனியின் அளவைக் குறிப்பிடாமல், நாம் உட்கொள்ள எடுக்கும் அனைத்து விதமான உணவு வகைகளிலும் அதில் உள்ள கலோரியின் அளவைக் குறிப்பிட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

அதிளவான சீனியை உள்ளடக்கிய உணவுகளுக்கு வரி செலுத்தும் திட்டத்தை நாடாளுமன்றத்தில் கலந்துரையாடுமாறும் கேட்டுக் கொள்ளவுள்ளோம்.

எமது நாட்டில் நோயற்ற சமூகமாக மாற்றி வரும் வேளையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் சுகாதார சவாலுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இவர்களின் நுழை விசைவு நடவடிக்கையின் போது சுகாதாரப் பரிசோதனைகளுக்காகக் கட்டணம் அறவிடப்பட்டு அவர்கள் சுகாதார பரிசோதனைகளின் பின்னர் நாட்டில் பிரவேசிக்க அனுமதிக்க கோரவுள்ளோம்.

ஹோட்டல்களில் உணவு முறைகள் குறித்து அவதானம் செலுத்தப் படவுள்ளது. அவர்கள் பொது மக்களுக்கு போசாக்கான உணவுகள் தருவிக்கிறார்களா என்பது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாம் இவற்றுடன் விளம்ப ரங்கள் குறித்தும் அவதானத்தை செலுத்தவுள்ளோம். பொருள்களின் தரம், அவற்றினால் ஏற்படும் பக்கவிளைவுகள், போசாக்கு மற்றும் சுத்தம் குறித்தும் எம்மால் அவதானம் செலுத்தப்படவுள்ளது. 2025ஆம் ஆண்டு இலங்கை வளமிக்க நாடாக மாறும் என்ற தலைமை அமைச்சரின் கூற்றுப் படி, இலங்கையை ஒரு போசாக்கான நாடாகவும் மாற்றும் செயல்திட்டங்கள் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார். (5.31)

# சிறப்பு நீதிமன்றுக்கு சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, நவ. 11



அரசின் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட சிறப்பு நீதிமன்றம் நாட்டுக்குத் தேவையற்றது என்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் யு.ஆர். டி.சில்வா தெரிவித்தார்.

அரசின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றம் நாட்டுக்குத் தேவையற்றது. ஏற்கனவே உள்ள நீதிமன்றங்களை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளே தற்போது தேவையானவை.

வழக்குகள் தாமதமாவதைத் தவிர்ப்பதற்கு வேறுநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். புதிதாக நீதிமன்றங்கள் உருவாக்கப்பட வேண்டியதில்லை. இது சட்டத்துறையில் பல சிக்கல் நிலைமைகள் உருவாகுவதற்கு வழியமைக்கும் - என்றார். (5)

# எரிபொருள் சூத்திரம் மார்ச்சிலேயே வரும்

## மங்கள தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11



எரிபொருள் விலைக்கான புதிய சூத்திரமொன்றை அடுத்த வருடம் மார்ச் மாதம் அறிமுகப்படுத்தவுள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'அரசின் வணிக மறுசீரமைப்பு செயல்முறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். 2019ஆம் ஆண்டளவில் அரச வங்கிகள் தனது மூலதனத்தை சார்ந்த நிறுவனங்களாக மாற்றப்படும்.

அத்துடன் எரிபொருளுக்கான புதிய சூத்திரம் அடுத்த வருடம் மார்ச் மாதம் அறிமுகப்படுத்தப்படும்' - என்றார். (5)

# ஈருருளியில் வருவதற்குகூட அனுமதியில்லையா?

## மகிந்தவின் கேள்வி

கொழும்பு, நவ. 11

நாடாளுமன்றத்துக்கு ஈருருளியில் (சைக்கிள்) வருவதற்குக் கூட அனுமதிக்கின்றார்கள் இல்லை. நிலமை மோசமடைந்து விட்டது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்துக்கு ஈருருளியில் நேற்றுமுன்தினம் வருகை தந்தமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் பொதுமக்களின் அவலத்தினை வெளிப்படுத்தும் வகையில் ஈருருளியில் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்தோம். அதற்கு கூட அனுமதிக்கவில்லை. நிலமைகள் மிகவும் மோசமடைந்து விட்டன - என்றார்.

மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச, அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவை அரசு சில்லறைத்தனமாக நடத்துகின்றது. அவர் துறைமுக அமைச்சராக இருக்கின்ற போது துறைமுகங்களை விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு வெளியிட்டார். அந்த அமைச்சிலிருந்து மாற்றம் செய்தார்கள். தற்போது தரம் குன்றந்த பெற்றோலை இறக்குமதி செய்வதற்கு எதிர்ப்பு வெளியிட்டார். பெற்றோல் தட்டுப்பாட்டினை ஏற்படுத்தி அவருக்கு நெருக்கடி கொடுக்கின்றார்கள்.

பொதுமக்கள் பெற்றோலின்றி நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ளனர். அவர்களின் பிரச்சினைக்கு தீர்வினை வழங்குவதற்கு திராணியற்ற நிலையில் பெற்றோல் தாங்கிய கப்பல் வருகின்றமையை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை செய்தியாக வெளியிடுகின்ற நிலைமைக்குஅரசுதரம் குறைந்து சென்றுள்ளது - என்றார். (5.31)

# சீனப் புகையிலைத் தூளுடன் அந்த நாட்டவர்கள் ஐவர் கைது

கொழும்பு, நவ. 11

சீனாவில் தயாரிக்கப்பட்ட புகையிலை கலவை அடங்கிய தூள் மற்றும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் ஐந்து சீனர்கள், கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற சிறப்புத் தகவலுக்கு அமைவாக நேற்றுக் காலை 7.45 மணிக்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வானூர்தி நிலையத்தின் நாட்டுக்குள் பிரவேசிக்கும் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின் போது இவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் 31 வயதுக்கும் 57 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். அவர்கள் தனித்தனியாக தமது பயணப் பொதிகளில் மறைத்து சீனாவில் இருந்து புகையிலைத் தூள் மற்றும் வெளிநாட்டு சிகரெட்டுக்களை கடத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது. கைப்பற்றப்பட்ட கலவை சேர்க்கப்பட்ட சீனப் புகையிலைத் தூள் 3 கிலோ வரை இருந்ததாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (5.31)

# புதையலிலிருந்து மாணிக்கக்கல் மீட்பு

புதையலிருந்து 300 கிராம் எடையுடைய மாணிக்கக் கல் மீட்கப்பட்டுள்ளது.

நவகத்தேகம வன்னியாகம காட்டுப் பகுதியில் இந்தப் புதையல் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. மாணிக்கக் கல்லை நவகத்தேகம பொலிஸார் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட மாணிக்கக் கல்லின் பெறுமதியை மதிப்பீடு செய்ய, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு, கல்லை அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

புதையல் தோண்டிய சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (5)

# இலங்கையர்கள் 19பேர் இந்தோனேசியாவில் கைது

கொழும்பு, நவ. 11



நுழைவிசைவு நடைமுறையை மீறிய குற்றச்சாட்டில் 19 இலங்கையர்கள் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளாகச் சென்ற அவர்கள், லிப்ப என்ற கிராமத்தில் தங்கியிருந்த போதே கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றுலாப் பயணிகளாக சென்ற அவர்கள், ஹோட்டலில் தங்குவதற்குப் பதிலாகக் கடந்த மூன்று தினங்களாக வீடுகளில் தங்கியிருந்துள்ளனர்.

அதிகாரிகள் விசாரணை செய்த போது தாம் இந்தோனேசியாவில் நிரந்தர நுழைவிசைவைப் பெற்றுள்ளதாக இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் நிமித்தம் 19 இலங்கையர்களினதும் கடவுச்சீட்டுக்கள் இந்தோனேசிய அதிகாரிகளால் முடக்கப்பட்டுள்ளது. (5)

# தாயின் சடலத்துடன் தனிமையிலிருந்த 1 1/2 வயதுக் குழந்தை

## அம்பலாங்கொடவில் நெஞ்சுருக்கும் சம்பவம்

கொழும்பு, நவ. 11

மர்மமான முறையில் உயிரிழந்த தாயின் சடலத்துக்கு அருகே எதுவுமே அறியாத அவரது ஒன்றரை வயதுப் பெண் குழந்தை 2 நாள்களாக இருந்துள்ளது என்று அம்பலாங்கொடப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொட, மாதம்பாகம, பிரதேசத்தில் வசிக்கும் விமுசிகா தில்கானி (வயது 22) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் கடற்றொழிலாளி. அவர் கடந்த முதலாம் திகதி ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்றுள்ளார். அந்தப் பெண் தாயாரின் வீட்டுக்குச் சென்று தங்கியுள்ளார். அங்கிருந்து கடந்த செவ்வாய்க் கிழமை அந்தப் பெண் தனது குழந்தையுடன் வீடு திரும்பியுள்ளார். வீடு வந்தடைந்ததும் அது தொடர்பில் தாயாருக்குத் தொலைபேசியில் அந்தப் பெண் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் கடந்த புதன் மற்றும் நேற்று முன்தினம் வியாழக் கிழமை 2 நாள்களாக அந்தப் பெண்ணிடமிருந்து எந்தவொரு அழைப்பும் தாயாருக்குக் கிடைக்கவில்லை. தாயாரும் தொடர்பு கொண்ட போது பெண்ணின் அலைபேசி இயங்கவில்லை என்பது தெரியவந்தது. பதற்றமடைந்த பெண்ணின் தாயார், மகளின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் சென்றுள்ளார். வீட்டுக்குள் சென்றதும் அவர் அதிர்ச்சியடைந்தார். அவரது மகள் கட்டிலில் சடலமாகக் காணப்பட்டார். அவரது மூக்குப் பகுதியால் குருதி வெளியேறியிருந்தது. ஒன்றரை வயதுப் பேத்தி தாயாரின் சடலத்துக்கு அருகில் இருந்துள்ளார்.

சம்பவம்தொடர்பில்அம்பலாங்கொட பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (5)

மாவட்டம் மாற்றி

# பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு உயர்கல்வி அமைச்சின் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 11

வெட்டுப்புள்ளி குறைந்த மாவட்டங்களில் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தால் அவர்களின் பல்கலைக்கழக அனுமதி உடனடியாக நீக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், கொழும்பு, கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் மருத்துவப்பீட பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுகொள்வதற்கான வெட்டுப்புள்ளி குறைந்த மன்னார் மாவட்டத்தில் உயர்தரத்திற்குச் சேர்ந்து பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகின்றனர்.

இதன் காரணமாக மன்னார் மாவட்ட மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி பறிபோகின்றதல்லவா?, என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே உயர்கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வெட்டுப்புள்ளி குறைந்த மாவட்டங்களில் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர்தரத்திற்குத் தோற்றி பல்க



லைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பின் அவர்களின் பல்கலைக்கழக அனுமதி உடனடியாக நீக்கப்படும் - என்றார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பான விபரங்களைத் திரட்டுமாறும் உத்தரவிட்டார். (5)

# வில்பத்து காடழிப்புக்கு எதிரான மனு மீதான விவாதம் பெப். 8 இல்

கொழும்பு, நவ. 11

வில்பத்து சரணாலயத்தின் வடக்குப் பகுதியில் இடம்பெறும் காடழிப்பு மற்றும் வீடமைப்புத் திட்டத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனு (ரிட்) தொடர்பான விவாதத்துக்கான தினமாக, பெப்ரவரி 8ஆம் திகதியை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுக் குறித்தது.

இந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் நீதியரசருமான எல்.டி.பி.தெஹிதெனிய மற்றும் நீதியரசர் சிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, மேற்குறிப்பிட்ட திகதி அறிவிக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் நீதிக்கான நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், சுற்றாடல் அதிகார சபையின் காப்பாளர் நாயகம், வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், காணிகள் ஆணையாளர் நாயகம், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், மன்னார் மா்வட்ட செயலர், கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வில்பத்து சரணாலயத்தில் காடழிப்பு, வீடமைப்புத் திட்டம் என்பன அமைக்கப்படுவதாகவும், மன்னார் மாவட்டத்துக் குட்பட்ட மடு, பெரியமடு, பிரதேசங்களிலும் காடழிப்பு இடம்பெறுவதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

வில்பத்துப் பகுதியில் 2 ஆயிரம் ஏக்கரும், மடு, பெரியமடு பகுதிகளில் ஆயிரம் ஏக்கரும் அழிக்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரணாலயத்தில் அழிக்கப்பட்ட பகுதியில் அமைச்சர் ரிசாத் பதியுதீனால், ஆயிரத்து 500 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனத்தைக் காப்பதற்கான நடவடிக்கை எடுக்கக் கோரியும், மீள் மரநடுகைக்கு உத்தரவிடக் கோரியுமே மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (5)

**மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தினால் யாழ்ப்பாணம் பொன்னாலை பருத்தித்துறை வீதி (ஏபி21) அபிவிருத்தி (ஓட்டுமடம் நாவாந்துறை சந்தியிலிருந்து பொன்னாலை சந்தி வரை 11.5Km)**

யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை (AB21) வீதியின் ஓட்டு மடம் நாவாந்துறை சந்தியிலிருந்து பொன்னாலை சந்தி (11.5Km) வரையுள்ள பகுதியானது பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தினால் அபிவிருத்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் வீதி அபிவிருத்திக்கு தேவையான வீதியின் இரு மருங்கிலும் உள்ள காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள், காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் சுவீக ரிக்கப்படும் காணிகளுக்கான நஷ்ட ஈடானது 1980 ஆம் ஆண்டு காணி சுவீகரிப்புச் சட்டத்திற்கு அமைவாகவும் 2013 ஆம் ஆண்டின் LARC இற்கு அமைவாகவும் வழங்கப்படும். இக் காணி சுவீகரிப்புக் கான முதற் சுவட்டுப்படம் தயாரிப்புக்கான அளவையிடல்கள் நவம்பர் மாதம் நடுப்பகுதி தொடக்கம் நடைபெறும் என்பதுடன் குறித்த வீதியின் இரு மருங்கிலும் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளின் எல்லைகளை நவம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்பாக தெளிவான தற்காலிக வேலிகள் மூலமோ, வேறு அடையாளங்கள் மூலமோ உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மற்றும் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்கான உறுதிப் பத்திரங்களையும் நில அளவைப் படங்கள் இருப்பின் அவற்றையும் தங்களது பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள். மேலும் பிரிவு 2 இன் கீழான அறிவித்தல்கள் காணிகளில் காட்சிப்படுத்துவற்கான நடவடிக் கைகள் பிரதேச செயலாளர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அனைத்து காணி உரிமையாளர்களும் இது தொடர்பாகக் கவனம் செலுத்து மாறும் மேலதிக தகவல்களுக்காக தங்களது கிராம சேவையாளர், பிரதேச செயளலாளர், நில அளவை திணைக்களம் யாழ் அலுவலகம் மற்றும் மூலோபாய நகர அபிவிருத்தி திட்டத்தை (021 221 6383) தொடர்புகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். குறித்த வீதி அபிவிருத்திக்கு தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**செயற்திட்ட பணிப்பாளர்.**
**மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டம்.**

# கீதாவின் இடத்துக்கு பியசேன கமகே

## நேற்றுச் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, நவ. 11

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக பியசேன கமகே, சபாநாயகர் கரு ஜயசூரிய முன்னிலையில் நேற்றுச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க நாடாளுமன்ற அங்கத்தவர் உரிமையை இழக்கப்பட்டதாக உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைவாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கே பியசேன கமகே தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காலி மாவட்டத்தில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் 6ஆவது இடத்தில் கீதா குமாரசிங்கவும், 7ஆவது இடத்தில் பியசேன கமகேவும் இருந்தனர். விருப்பு வாக்கு அடிப்படையில் கீதா குமாரசிங்கவுக்கு அடுத்த இடத்தில் பியசேன கமகே இருந்தமையாலேயே தற்போது ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பியசேன கமகேயை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்தல் ஆணைக் குழு அறிவிக்க முடியாது என்று மகிந்த அணியினர் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

**வேலையாள்கள் தேவை**

- Technical officer NCT Civil Engineering /Quantity Surveying (Minimum 2 years Experience)
- Technical Assistant (Minimum 1 year Experince)

**தொடர்புகளுக்கு :- 076 866 3944**
மின்னஞ்சல் :- Shaganaconstruction @hotmail .com

# மைத்திரி – ரணில் ரகசிய சந்திப்பு கொழும்பு அரசியலில் பரபரப்பு

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இரண்டாவது தடவையாக நேருக்கு நேர் மூடிய அறைக்குள் சந்தித்துப் பேச்சு நடத்தியிருப்பது அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பில் அரச தலைவர் மைத்திரிபாலவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு சுமார் ஒருமணி நேரத்துக்கும் அதிகமாக நடைபெற்றுள்ளது.

கொழும்பு அரசியலில் உருவாகியுள்ள முக்கிய பிரச்சினைகள் பெற்றோல் தட்டுப்பாடு, பிணைமுறி மோசடி விவகாரம், அரசுக்கு எதிராக ஊடகங்களில் வரும் விமர்சனங்கள் குறித்து இருவரும் கடும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டனர் என்று முக்கிய அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிந்தது.

மாதுளுவாவே சோபித தேரரின் நினைவுத் தூபிக்கான அடிக்கல் நடும் விழாவில் கலந்துகொள்ள முன்னரே அரச தலைவர் மைத்திரிபால இந்தச் சந்திப்பை தலைமை அமைச்சர் ரணிலுடன் நடத்தியிருந்தார். அந்த நிகழ்வில் அரசின் செயற்பாடுகள் தொடர்பில் கடும் விமர்சனத்தை அரச தலைவர் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

**பணிப்பெண் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. தொடர்பு - 077 2626 944

**வீடு விற்பனைக்கு**

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு பின்புறமாக ஆறு பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 9111685, 077 7897002**

**தவறிவிட்டது**

ச.சிவகுமாரன் என்பவருடைய அடையாள அட்டை (53031 2771V) சாவகச்சேரியில் தவறவிடப்பட்டு விட்டது விபரம் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்பு :- 076 604 0057**

Ministry of National Integration and Reconciliation
**தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு**

Financing and Construction of 50,000 Permanent Brick and Mortar Type Houses for Conflict Affected Displaced Families in the Northern and Eastern Provinces in Sri Lanka

**இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 50,000 நிரந்தர கல் வீடுகளை நிர்மாணித்தலும் நிதி ஈட்டலும்**

Request for Proposal (RFP)
**முன்மொழிவுகளுக்கான கோரிக்கை**

**To All Bidders**
**சகல கேள்விதாரர்களுக்கும்**

The Bid Submission Date has been extended up to 27th November 2017 (up to 2.00 p.m)

Brick and Mortar Type Construction can also use Cement Sand Blocks (Hollow and Solid) as an alternative in areas where bricks are in short supply.

Addendum with revision for quality, low-cost houses has been issued on 8.11.2017

**Secretary**
**Ministry of National Integration and Reconciliation**
**No.34, Narahenpita Road,**
**Nawala, Sri Lanka.**

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கில் அபயகோனிடம் சாட்சியம் பெறுக!

## நீதிமன்றம் பணிப்பு

முன்னாள் கூட்டுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கில், அரச தலைவரின் முன்னாள் செயலர் பி.பி.அபேகோனிடம் சாட்சியம் பெறுமாறு, லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவைக் கொழும்புப் பிரதான நீதிவான் நீதிமன்றம், நேற்றுப் பணித்தது.

2010ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சொத்துகளையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்தாததன் காரணமாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டனுக்கு எதிராக, இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

1975ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சொத்துகள் பொறுப்புகள் தொடர்பில் வெளிப்படுத்தும் சட்டத்தின் 9ஆவது பிரிவின் கீழ், இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரச தலைவரின் முன்னாள் செயலர் பி.பி. அபேகோன் மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதியில், அரச தலைவர் செயலகத்தின் சொத்துகள் பொறுப்புகள் தொடர்பான பிரிவில் பணியாற்றிய அதிகாரியிடம் சாட்சியம் பெறுமாறு. இலஞ்ச ஆணைக்குழுவைப் பிரதான நீதிவான் பணித்தார். வழக்குத் தொடர்பில் பிரதிவாதிகள் தரப்பால் மேற் கொள்ளப்பட்டுள்ள ஆட்சேபனை தொடர்பான உத்தரவுக்கு மேலும் வலுவாக அமையும் என்று அறிவித்த நீதிவான், உத்தரவுக்கான தினமாக ஜனவரி 11ஆம் திகதியைக் குறித்தார். (5)



30 வருட நீங்கா நினைவு

அமரர் கந்தையா சச்சிதானந்தன் BSc

அன்னை மண்ணில் 15.06.1943 மனது நீங்கா நாளில் 14.11.1987

இன்னமும் நினைவிற்கொள்ளும்
பாசமிகு துணைவி, மகள், மகன்மார், சகோதரி,
மருமகன், மருமக்கள், நிழற்படத்தில் உணர்வு
கொள்ளும் பேரக்குழந்தைகள்

புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சிதம்பரம்
இராசலிங்கம் (J.P)
(ஓய்வு பெற்ற ஊழியர்.
ஆதார வைத்தியசாலை.
தெல்லிப்பழை)



தோற்றம் 25.01.1934 மறைவு 07.11.2012

தலைவனாய் தரணிபோற்றும்
தந்தையாய் நிலந்தனிலே என்றும்
நினைவோடு வாழ்ந்தவரே
நிலையாக நினைவுகளில்
வாழுகின்ற நீதவானே
நிறைந்ததுவோ ஐந்தாண்டு?....
சென்றிடினும் வாழ்நாளில் எம்
சிந்தையில் வாழ்வீரே !

உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி :
V.C.C மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி :
தேவாலய வீதி,
சங்கானை.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 06 . 09 . 1967

மறைவு 14 . 10 . 2017

## அமரர் சதாசிவம் ஜெயபாலசிங்கம்

கடந்த 14.10.2017 சனிக்கிழமையன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சதாசிவம் ஜெயபாலசிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு வீட்டுக்கிருத்தியக் கிரியை கள் எதிர்வரும் 13.11.2017 திங்கட்கிழமை முற்பகல் 11 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துளு அம்மன்கோயிலடி,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்:

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் டிசெம்பர் 6இல் தீர்ப்பு

கொழும்பு, நவ. 11

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அநுருத்த பாதெனியவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பான மனுவின் உத்தரவு, டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி வழங்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

இந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் நீதியரசருமான எல்.டி.பி.தெஹிதெனிய மற்றும் நீதியரசர் சிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, மேற்படி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளார் பேராசிரியர் சரத் விஜேசூரிய, புறவெசிபலயவின் இணை ஏற்பாட்டாளர் காமினி வெயங்கொட ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், அநுருத்த பாதெனிய பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

தொழில்நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவகத்தின் (சைட்டம்) மருத்துவப் பட்டதாரிகள், இலங்கை மருத்துவச் சபையில் தம்மைப் பதிவு செய்ய முடியும் என்று இந்த ஆண்டு ஜனவரி 31ஆம் திகதியன்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

சைட்டம் நிறுவகத்தில் பயின்ற மருத்துவப் பட்டதாரிகளால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவுக்கே மேன்முறையீட்டு நீதிமன்றத்தால், தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பு தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளிப்படையாக விமர்சித்திருந்ததுடன், ஏப்ரல் 7ஆம் திகதி நடத்தப்பட்ட பேரணியின் போது, தீர்ப்புத் தொடர்பிலும், நீதிபதிகள், சட்டமா அதிபர் தொடர்பில் அவதூறான கருத்துக்கள் வெளியிடப்பட்டது என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பைச் செல்லுபடியற்றதாக்க வேண்டும் என்று, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் நாலிந்த சொய்சா, ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கூறியுள்ளார் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது இந்தச் செயற்பாட்டால், ஏனைய அதிகார சபைகளும் நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுக்க வாய்ப்புள்ளதுடன், இது நீதிக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பில் பிரதிவாதிக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரியுள்ளனர்.

மனுதாரர் சார்பில், சட்டத்தரணி சித்தானந்த லியனகேயின் அறிவுறுத்தலுக்கமைய சட்டத்தரணி உபுல் ஜயசூரிய முன்னிலையானார். பிரதிவாதி சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி காமினி மாரப்பனவுடன் சட்டத்தரணி நவின் மாரப்பன முன்னிலையாகியிருந்தார். (5)

# 1 ½ லட்சம் மில்லியன் ரூபா கடன் 2016இல் அரசு பெற்றது

## பிரதி அமைச்சர் சபையில் தகவல்

2016ஆம் ஆண்டு கூட்டு அரசு உள்நாடு, பன்னாட்டு ரீதியில் ஒன்றரை லட்சம் மில்லியன் ரூபா கடனைப் பெற்றுக் கொண்டுள்ளது எனத் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதாரப் பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வியின் போது மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, 2016ஆம் ஆண்டு அரசு பெற்றுக்கொண்ட மொத்தக் கடன் தொகை எவ்வளவு?, என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வியெழுப்பினார். இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர், 2016ஆம் ஆண்டு ஒன்றரை இலட்சம் மில்லியன் ரூபா கடன் தொகையை உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கடன் வழங்குநர்களிடம் இருந்து கூட்டு அரசு பெற்றுக் கொண்டுள்ளது. -என்றார். (5)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்



அமரர்
## கணபதிப்பிள்ளை அன்னலிங்கம்

தோற்றம் 20.02.1951 மறைவு 12.10.2017

திங்கள் ஒன்றென்ன ஆயிரம்தான் ஆனாலும்
ஆறாது எங்கள் துயர் காயாது எங்கள் கண்ணீர்!!
எம் குடும்பத்து மெழுகுவர்த்தியே
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
எங்கள் ஊரே இருட்டாகி விட்டதப்பா!!

அன்பும் அறிவும் கொண்ட அழகான அதிஷ்டதேவனே!
கேட்டவர்க்கெல்லாம் வாரிவழங்கும் கொடை வள்ளலே!
தோழமைக்குத் தோள்கொடுக்கும் வீராதி வீரனே!!
உம் இன்முகத்திற்கு இவ்வுலகில் ஈடிணை இல்லையப்பா!!

கோபுரமாய் உயர்ந்தீர்கள் காலம் ஏனோ சரிந்ததப்பா
நல்லவனாய் திகழ்ந்தீர்கள் சொர்க்கம் ஏனோ அழைத்ததப்பா
கனவெல்லாம் பலித்துவர சதி வந்து பறித்ததப்பா
ஊரெல்லாம் உம் செய்தி இடியாய் வந்து விழுந்ததப்பா

நாமெல்லாம் வேண்டும் வரம் ஒன்றே ஒன்றே அப்பா
எம் வம்சத்தில் வாரிசாக மீண்டும் வந்திடுங்கள் அப்பா
உங்கள் ஆருயிர் மனைவியும், அன்பான பிள்ளைகளும்
உங்களுக்காக கண்ணீருடன் காத்திருக்கின்றோம்



எமது அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.11.2017) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் இன்பர்சிட்டியிலுள்ள அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக் கிரியைகள் அன்னாரின் இல்லத்திலும் இடம்பெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைப்பதோடு, எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், ஊடகங்கள் வாயிலாக அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் சகல உதவிகளையும் முன்வந்து செய்த உள்ளங்களுக்கும் மற்றும் இன்றைய தினம் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்.

காண்டீபன் விளையாட்டுக்கழகம் அருகில்,
இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

### தலைமை அமைச்சரின் ஆலோசகருடன் வடக்கின் 5 மாவட்டங்களின் செயலர்களும்

# வடக்கு அபிவிருத்திகள் தொடர்பில் கலந்தாய்வு

முல்லைத்தீவு, நவ.11

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 10 அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான சிறப்புச் சந்திப்பு நேற்று முல்லைத்தீவில் நடைபெற்றது. தலைமை அமைச்சரின் ஆலோசகர் சரித்த ரத்வத்த மற்றும் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்ட செயலர்களும், வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மேலதிக மாவட்ட செயலர்களும் அதில் பங்கேற்றனர்.

முல்லைத்தீவில் அடுத்து ஆண்டு விசேட திட்டங்களாக வட்டுவாகல் பாலம் சீரமைப்பு, ஆயிரத்து 905 ஏக்கர் மர முந்திரிகைத் தோட்டம் அமைத்தல் என்பது தொடர்பாக ஆராயப்பட்டது. மரமுந்திரிகைத் தோட்டத்துக்காக 72 ஆயிரம் மர முந்திரிகை விதைகள் வழங்கப்படும் என்றும், முதற்கட்டப் பணிகளுக்காக 7.2 மில்லியன் ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நடுகைக் காலத்தில் இருந்து 3 ஆண்டுகளில் கிடைக்கும் மரமுந்திரிகையை அப்படியே சந்தைப்படுத்தினால் உற்பத்தியாளர்கள் குறைந்த இலாபத்தையே ஈட்டமுடியும். மரமுந்திரிகையை பதப்படுத்தி விற்பனை செய்தால் அதிக இலாபத்தைப் பெறமுடியும். மாவட்டத்தில் அதற்கான நிலையம் அமைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு வீதிச்சீரமைப்புக்கு 2 ஆயிரம் மில்லியன் ரூபாவும், மருதங்கேணியில் 50 ஏக்கர் மரமுந்திரிகைத் திட்டம், லகூன் சீரமைப்பு, ஆறுமுகம் திட்டத்தின் கீழான உப்பாறு, வடமராட்சியில் நன்னீர் தேக்கத் திட்டம் என்பவற்றுக்கான அளவீட்டுப் பணிகளை மேற்கொண்டு திட்டங்களை விரைவுபடுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணம், தீவகப் பகுதியில் போருக்கு முன்னர் பல்லாயிரக்கணக்கான மக்கள் புகையிலைச் செய்கை மேற்கொண்டனர். தற்போது புகையிலைச் செய்கை தடுக்கப்பட்டுள்ளது. அந்த மக்களுக்குத் தற்போது போதிய வருமானம் இல்லை. குறைந்தளவு மக்களே தற்போது அங்குள்ளனர். வருமானத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் அந்தப் பகுதிக்கு மக்களை மீள அழைக்கலாம். தீவுப் பகுதி மக்களுக்கும் மர முந்திரிகைத் திட்டத்துக்கான விதைகளையும், மானியத்தையும் வழங்கவேண்டும். அறுவடை நெருங்கும்போது அங்கும் ஒரு பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன அதிகாரிகள் அந்தப் பகுதிக்கு அனுப்பப்படுவர். அங்கு மரமுந்திரிகைச் செய்கை செய்ய முடியுமா என்பது தொடர்பாக ஆராயப்படும். செய்கைக்கு உகந்த நிலம் இருப்பின் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தலைமை அமைச்சரின் ஆலோசகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் முதல் முருகண்டி வரையான ஏ-9 வீதிக்கு மாற்று வீதி அமைப்புக்கும், அதை தார்ப்படுக்கை வீதியாக அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்காக ஆயிரத்து 665 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. ஆயிரம் மர முந்திரிகைத் திட்டம், கிளிநொச்சி பொருட்ச் சந்தைக் கட்டட அபிவிருத்தி என்பன போன்ற திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

(ற-101)



யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் நினைவு தினம் நேற்று சாவகச்சேரியில் நடைபெற்றது. பிரதேச சபைச் செயலகத்தில் உள்ள அவரது சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தனின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது என்று கூறப்பட்டது. (ற-9,ரி4)

## மதில் வீழ்ந்து ஒருவர் சாவு

கந்தளாய், நவ.11

கந்தளாயில் நகர் பகுதியில் மதில் சுவரொன்று இடிந்து வீழ்ந்து அதில் சிக்குண்டு ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

கிண்ணியா வில்வெளிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஹபீபுல்லா (வயது-32) என்பவரே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குடி தண்ணீர் குழாய் திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்த போது அருகிலிருந்த மதில் சுவர் இடிந்து விழுந்தது என்று கூறப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கந்தளாய் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

## புதிய நகரசபைக்காக நேற்றுக் கவனவீர்ப்பு




மட்டக்களப்பு, நவ.11

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடிப் பாலம் முதல் மஞ்சத்தொடுவாய் வரையான பகுதியை நகர சபையாக உருவாக்கக் கோரியும், காத்தான்குடி நகர சபையுடன் இணைப்பதை நிறுத்தவேண்டும் என்றும் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கல்லடி, உப்போடை சிவானந்த விளையாட்டு மைதானத்துக்கு முன்பாகக் கூடிய மக்கள் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தினர்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவி உட்பட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள், மகளிர் சங்க உறுப்பினர்கள், இளைஞர் கழக மற்றும் விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ற-ரி4)

## வவுனியாவில் தொழிற் சந்தை

வவுனியா, நவ.11

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தின் ஏற்பாட்டில் தொழிற் சந்தை ஒன்று நேற்று ஆரம்பமானது. இன்றும் இடம்பெறுகிறது.

வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் தலைமையில் நடந்த ஆரம்ப நிகழ்வு காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை நடைபெற்றது.

இலங்கையின் பிரபலமான 30க்கு மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் நேரடியாக பங்குகொண்டுள்ளன. வேலை வாய்ப்புக்களும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)





## டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்

வவுனியா, நவ.11

டெங்கு தொற்றற்ற வவுனியாவை உருவாக்குவோம் எனும் தொனிபொருளில் வவுனியா நகரப் பகுதிகளில் நேற்றுத் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வவுனியா நகர சபையுடன் வவுனியா நகர சிறு வியாபாரச் சங்கமும் வவுனியா பொலிஸாரும் இணைந்து அதை ஏற்பாடு செய்தனர். (ற)


## மாணவர் மதிப்பளிப்பு

கிளிநொச்சி, நவ.11

புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த கிளிநொச்சி பிரதேச மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் த. கணேசநாதனின் ஒத்துழைப்புடன் 25 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிகன்ன மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-26,ரி4)



சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடமாடும் நூலக சேவை நேற்று விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது. நிகழ்வில் வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு காட்சிக்கூடத்தை திறந்தார். (ற-ரி4,9)



# ஏமன் எல்லைகளை மூடியது கூட்டுப்படை

## பஞ்சம் இரட்டிப்பாகும் என எச்சரித்தது ஐ.நா. சபை



சனா, நவ. 11
ஏமனின் எல்லைகள் சவூதி தலைமையிலான கூட்டுப் படையால் மூடப்பட் டுள்ள நிலையில், எல்லைகளைத் திறக்காவிட்டால் ஏமன், உலகம் கண்டிராத பெரும் உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ளும் என்று எச்சரித்தது ஐ.நா. சபை.

ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹௌதி ஆயுதக் குழுவுக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயல்படுகிறது. ஹௌதி ஆயுதக் குழுவுக்கு ஈரான் ஆதரவு வழங்குகிறது.

ஹௌதி ஆயுதக் குழுவின் பகுதிகளுக்குள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது சவூதி அரேபியா. சவூதி அரேபியாவின் ரியாத் வானூர்தி நிலையத்தைக் குறிவைத்து கடந்த சனிக்கிழமை ஏவுகணை வீசப்பட்டது. ஹௌதியிடம் தொலை தூரத்துக்குச் செல்லவல்ல ஏவுகணைகள் இல்லை.

எனவே இந்த ஏவுகணைத் தாக்குதல் ஈரானால் நடத்தப்பட்டிருக்கலாம் அல்லது ஈரானால் ஹௌதி ஆயுதக் குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கலாம் என்று சவூதி தலைமையிலான கூட்டுப்படை சந்தேகம் தெரிவித்தது.

எனவே, ஈரானில் இருந்து ஹௌதி ஆயுதக் குழுவுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமாயின் ஏமன் தனது எல்லைகளை மூட வேண்டும் என்றும் கூட்டுப்படை உத்தரவிட்டது. இதையடுத்து தனது எல்லைகளைமூடியது ஏமன்.

ஒருநாட்டில் போர் நடைபெற்றிருக்கொண்டிருக்கும் போது, அந்த நாட்டின் எல்லைகளை மூடுதல் பன்னாட்டுச் சட்டதிட்டத்துக்கு விரோதமானது என்று ஐ.நா. சபை ஏற்கனவே எச்சரித்திருந்தது.

இந்த நிலையில், 'எல்லைகள் மூடப்பட்டமையானது ஏமனில் வரலாறுகாணாத உணவுப்பஞ்சத்தை உண்டு பண்ணும்' என்று தற்போது தெரிவித்துள்ளது ஐ.நா. சபை. (ம)



## சக்திவாய்ந்த தலைவராக உருவாகிறார் பின் சல்மான்

உலகின் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவராக சவூதி அரேபியாவின் பட்டத்துத்து இளவரசர் முகமது பின் சல்மான் உருவெடுத்து வருகிறார்.

சவூதி அரேபிய மன்னர் சல்மான், முகமது பின் சல்மானை பட்டத்து இளவரசராக அறிவித்த பின்னர் அவர் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். பின் சல்மானின் முக்கிய திட்டங்கள் மூன்று. ஒன்று, பழமைவாத நாடு என்று அடையாளப் படுத்தப்பட்டிருக்கும் சவூதியை அந்தக் கோட்பாட்டில் இருந்து வெளியே கொண்டுவருவது. இரண்டாவது, ஊழல் இல்லாத சவூதியை உருவாக்குவது. மூன்றாவது, சவூதியின் முக்கிய வருவாய் எரிபொருளில் மட்டும் தங்கியிருத்தல் அல்லாமல் ஏனைய துறைகளிலும் பரம்பலடையச் செய்வது.

தனது திட்டங்கள் வெற்றியளிக்கும்படியான செயற்பாடுகளையும் பின் சல்மான் கடைக்கொண்டு வருகிறார். இதனால் சவூதியின் சக்தி மிகுந்த தலைவராக மட்டுமல்லாது உலகின் சக்தி மிகுந்த தலைவராகவும் பின் சல்மான் உருவெடுத்து வருகிறார். (ம)

## கொலம்பியாவில் நிலச்சரிவு இடர்; 4 பேர் உயிரிழப்பு



போகோட்டா, நவ. 11
கொலம்பியாவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி நால்வர் உயிரிழந்தனர்.

கவ்கா மாகாணத்திலேயே இந்த நிலச்சரிவு ஏற்பட்டது. கடந்த சில நாள்களாக பெய்து வரும் கனமழை காரணமாகவே இந்த நிலச்சரிவு ஏற்பட்டது. நிலச்சரிவு இடரில் சிக்கி நால்வர் உயிரிழந்தனர். மேலும் 11பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடம் என்றும் சொல்லப்படுகிறது.

கொலம்பியாவின் புட்டுமயோ மாகாணத்தில் கடந்த ஏப்ரலில் ஏற்பட்ட நிலச்சரிவில் 300இக்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சிகரெட் விற்பனைக்கு வத்திக்கானில் வந்தது தடை

உரோம், நவ. 11
இத்தாலியில் உள்ள வத்திக்கான் நகரில் சிகரெட் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவை பாப்பரசர் பிரான்சிஸ் பிறப்பித்துள்ளார்.

இத்தாலியில் உள்ள வத்திக்கான் நகரம் கத்தோலிக்கர்களின் தலைமையகமாகத் திகழ்கிறது. இது பாப்பரசரின் ஆளுகையின் கீழ் உள்ளது. இந்த நகரில் சிகரெட் விற்பனைக்குத் தடை விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளார் பாப்பரசர் பிரான்சிஸ்.

புகைத்தலால் ஆண்டுக்கு 70 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என சமீபத்தில் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தது. மேலும் கடந்த 2015ஆம் ஆண்டு வெளியான ஒரு புத்தகத்தில் வத்திக்கானுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 150 கோடி ரூபா மதிப்பிலான சிகரெட் விற்பனை நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பிலிப்பைன்ஸின் முன்னாள் அதிபர் மீது ஊழல் வழக்கு

மணிலா, நவ. 11
பிலிப்பைன்ஸின் முன்னாள் அதிபர் பெனிக்கோ அகினோ மீது ஊழல் உள்ளிட்ட ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பிலிப்பைன்ஸின் முன்னாள் அதிபர் பெனிக்கோ அகினோ. இவர் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை அதிபராக இருந்தார். கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம், தெற்கு மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஆயுதக் குழுக்கள் மீது தாக்குதல் நடத்த பிலிப்பைன்ஸ் இராணுவத்தை அனுப்பிவைத்தார். ஆயுததாரிகளால் 44 இராணுவத்தினர் கொன்றுகுவிக்கப்பட்டனர். இது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. அதிபரின் தவறான உத்தரவே இந்த அசம்பாவிதத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பிலும் சில ஊழல் மோசடிகள் தொடர்பிலும் அகினோ மீது தற்போது குற்றச்சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (ம)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
25 . 05 . 1936

உதிர்வு
06 . 11 . 2012

அமரர்
சின்னத்தம்பி சண்முகநாதன்
(ஓய்வு நிலை அதிபர் J.P)

திதி : 11.11.2017

அன்புக்கோர் இலக்கணமாய்
ஆதரவு காட்டுவதில் அன்னையாய் பாசத்தோடு
பார்த்து பார்த்து எமை வளர்த்த பாசமிகு தந்தையே !
பாரினில் உங்களைப் போல
இனியார் இருக்கிறார் எங்களுக்கு ?
ஐந்தாண்டென்ன !
ஆயிரம் யுகங்கள் தான் சென்றாலும்
ஆறாது எம் துயரம் எம்மை விட்டு போகாது
உங்கள் நினைவுகள்
உங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

43/4, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.




அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் அண்மையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 27 பேர் உயிரிழந்த நிலையில், அவர்களுக்கு டெக்சாஸின் பல இடங்களிலும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. (ம)

## புதுடெல்லியில் காற்று மாசு



இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் அதிகளவில் காற்று மாசடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கடந்த சில மாதங்களாக காற்று மாசுபாடால் பெரும் இன்னல்களைச் சந்தித்து வருகிறது புதுடெல்லி. பண்டிகைக் காலங்களில் பட்டாசுகள் வெடித்துக் கொண்டாடுவதற்குத் தடை விதிக்கும் அளவுக்கு புதுடெல்லியில் காற்று மாசு அதிகரித்துள்ளது. அண்மைக்காலமாகவும் அங்கு காற்று மாசு துரிதமாக அதிகரித்து வருகிறது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதனால் அதிகளவான வீதிவிபத்துக்களும் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து அடுத்த சில தினங்களுக்கு புதுடெல்லியில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வடகொரியாவுக்கு எதிராக சீனா நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

## பீஜிங்கில் வைத்து வலியுறுத்தினார் ட்ரம்ப்

பீஜிங், நவ. 11

"வடகொரியாவுக்கு எதிராக சீனா காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தற்போது ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். தனது சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாக அவர் சீனாவுக்கும் சென்றிருந்தார். அங்கு நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.

"வடகொரியாவின் அணுஆயுத அச்சுறுத்தல்களைத் தவிர்க்க சீனா உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நேரம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. நாம் வேகமாகச் செயற்பட வேண்டும். வடகொரியாவின் அச்சுறுத்தல்களைத் தடுக்க சீனா உடனடி நடவடிக்களை எடுக்க வேண்டும். பிற நாடுகளைக் காட்டிலும் சீனா இதில் சிறப்பாக செயற்படும்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.



பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி தொடர்ந்து பல ஏவுகணைகளைச் சோதித்து வருகிறது வடகொரியா. அந்த நாடு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும் ஐதரசன் குண்டுச் சோதனைகளையும் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் சோதித்திருந்தது. ஐதசரசன் குண்டுச் சோதனையின்போது 6.3 ரிச்டர் அளவில் நில அதிர்வு ஏற்பட்டது என்றும் சொல்லப்பட்டது. அத்துடன் நின்றுவிடாமல் ஜப்பானின் வான் பரப்புக்கு மேலாகவும் ஏவுகணைச் சோதனைகளை நடத்தியது. இது பல அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் மற்றொரு ஐதரசன் குண்டுச் சோதனையை வடகொரியா மேற்கொள்ளவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகொரியாவைக் கட்டுப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து பல பொருளாதாரத் தடைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.


வடகொரியாவின் மூன்று முக்கிய ஏற்றுமதிகளான நிலக்கரி, இரும்பு, கடலுணவு ஆகியன முடக்கப்பட்டுள்ளன. வடகொரியாவுக்கு ஏனைய நாடுகளில் இருந்து செல்லும் பொருள்களும் முடக்கப்பட்டுள்ளன. எனினும் சீனா தனது மறைமுக ஆதரவை வடகொரியாவுக்கு வழங்கி வருகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சீன விதிகளை மீறினார் ட்ரம்ப்

ட்ரம்ப், தனது சீன சுற்றுப் பயணத்தின் போது அந்த நாட்டின் விதிமுறைகளை மீறியுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ட்ரம்ப், தனது ஆசியப் பயணத்தின் ஒரு பகுதியாக சீனாவுக்கும் சென்றார். சீனாவில் கீச்சகம் (ருவிற்றர்) உள்ளிட்ட சில சமூக வலைத்தளங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதிலும் சமூக வலைத்தளங்களில் அரசியல் கருத்துக்களைப் பதிவிட்டால் அந்த நாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்படும். அந்த அளவுக்கு கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டுள்ளன. ட்ரம்ப், தனது நகர்வுகளை கிச்சகத்தில் பதிவிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். எனவே, சீனாவில் அவர் கீச்சகத்தைப் பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ட்ரம்ப், சீனாவில் இருந்து கொண்டு பல பதிவுகளை வெளியிட்டார். இது பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

"அதிபர் ட்ரம்ப் ருவிட் செய்வதை அதிகம் விரும்புகிறார் என்பதை சீன அதிகாரிகள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். வெளிநாட்டுத் தலைவர்களை வரவேற்கும் போது அனைத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும், அந்த வகையில் அதிபர் ட்ரம்பின் தகவல் பரிமாற்றத்தில் எவ்வித கட்டுப்பாடுகளையும் விதிக்க முடியாது" என சீனாவின் துணை அயலுறவுத்துறை அமைச்சர் ஷெங் செக்குவாங் தெரிவித்தார். (ம)





உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## நம்பிக்கையை சிதைத்துவிட்ட மைத்திரிபால சிறிசேன!

வரவு செலவுத்திட்டத்தில் வடக்குக்கு சில சிறப்புக்கவனிப்புக்கள்கிடைத்திருக்கின்றனஎன்கிற மகிழ்ச்சி நீடிப்பதற்கு முன்பாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தமிழர்களின் தலையில் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். போர்க் குற்ற விசாரணைக்காக எந்தவொரு படையினரையும் எந்தவொருபோர்க்குற்றவிசாரணைநீதிமன்றத்திலும்நிறுத்துவதற்குத் தான் பதவியில் இருக்கும் வரை அனுமதிக்கமாட்டார் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில்உள்ள இராணுவ மருத்துவமனை அரங்கில் நேற்று முன்தினம் மாலை இராணுவ கட்டளை அதிகாரிகள், மற்றும் சார்ஜன்ட், மேஜர் தர அதிகாரிகள் 350 பேரை அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனசந்தித்தார்.அவர்கள்முன்பாகஉரையாற்றும்போது அரசதலைவர் இதனைத் தெரிவித்தார்.

''நாட்டின் தலைவராக நான் இருக்கும் வரைக்கும், எந்தவொரு போர்க்குற்றநீதிமன்றத்தின்முன்னாலும்உங்களைநிறுத்துவதற்கு அனுமதிக்கமாட்டேன் என்று உறுதியர்கக் கூறுகிறேன். இருந்தாலும், தவறு செய்த இராணுவத்தினர், நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதாக இருந்தால், நாட்டின் சட்டங்களுக்கு அமைவாகவே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சில அதிருப்தி அரசியல்வாதிகளும், ஓய்வுபெற்ற இராணுவத்தினரும், படையினரைத் தண்டிக்க நாம் முயற்சி செய்வதாக குற்றம்சாட்டி வருகின்றனர். நான் இந்த நாட்டின் அர்ச தலைவர் என்ற வகையில், வெளிநாட்டு நீதிபதிகள் போன்றவர்களால் எவரையும் விசாரணை செய்ய அனுமதிக்கமாட்டேன்.

ஒரு இறைமையுள்ள அரசு என்ற வகையில், எந்தவொரு தலையீடுகளும் இன்றி, எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆற்றல் இருப்பதாக, ஐ.நாவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கைகள், வதந்திகள் மற்றும் நம் எதிரிகளால் தவறாக வழிநடத்தப்படக்கூடாது, என்னை நம்புங்கள் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். கடந்த காலங்களைப் போலல்லாமல், படையினரின்வெளிநாட்டு நுழைவிசைவுகள் (விசாக்கள்) எதிர்காலத்தில்நிராகரிக்கப்படாது என்றும், உங்களின்வெளிநாட்டுப் பயணங்களுக்கு எந்த தடங்கலும் ஏற்படாமல் உதவுவோம் என்றும் நான் வலியுறுத்திக் கூறுகிறேன்."

இவ்வாறு தனது உரையில் தெளிவாகத் தெரிவித்தார் இலங்கையின் அரசதலைவர். இதன்மூலம் போர்க்குற்ற விசாரணைகளை அவர்அடியோடுநிராகரிப்பதுடன், ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள்சபையில் 2015 ஆம் ஆண்டு அவரது அரசு, தானேமுன்வந்து முன்மொழிந்த தீர்மானத்தில் கூறப்பட்ட, போர்க் குற்ற விசாரணைக்கான கலப்பு நீதிமன்றப் பொறிமுறையையும் அவர் அடியோடு நிராகரித்துவிட்டார். அத்தோடு தமது படையினர் மீது மற்றைய நாடுகளால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களைத் துடைத்து அவர்களைப் புனிதர்களாக அறிவிக்கவும் அவர் முன்வந்துள்ளார்.

நடந்த போர்க் குற்றங்களுக்கு லட்சக்கணக்கான தமிழர்கள் சாட்சிகளாக இருக்கும்போது, அப்படியெதுவும் நடக்கவில்லை என்றும், அத்தகைய குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில்விசாரிப்பதற்குத் தாம்தயாரில்லைஎன்றும் மைத்திரிபால சிறிசேன அறிவித்திருப்பது தமிழர்கள் அவர் மீது வைத்திருந்த மொத்த நம்பிக்கையும் சிதைத்திருக்கிறது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் தமிழர்கள் பன்னாட்டு நீதி விசாரணையைத்தான் கேட்டுவந்தார்கள். கொழும்பு அது முடியாது என்றபோதுதான் இரண்டுக்கும் இடைப்பட்டதாகக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை யோசனை முன்மொழியப்பட்டது. தமிழர்கள்தரப்பிலிருந்தும் பாதிக்கப்பட்ட மக்கள்தரப்பிலிருந்தும் கடுமையான எதிர்ப்பு இருந்தபோதும் இந்தக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கியதும் இந்த வகையில்தான். ஏனெனில் பேச்சு என்று வந்ததன் பின்னர் விட்டுக்கொடுக்காமல் அது நடக்க முடியாது என்பது அதன் கொள்கை.

ஆனால், ஆரம்பம்முதலே இந்தக்கலப்புநீதிமன்றயோசனைக்கு மைத்திரிபால சிறிசேன எதிர்ப்புத் தெரிவித்து வந்தார். ஐக்கிய நாடுகள்மனிதஉரிமைகள்சபையின்தீர்மானம்நிறைவேற்றப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம்கடந்துவிட்டபோதும்மைத்திரி கூறியபடியே கலப்பு நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான பொறிமுறை உருவாக்கத்துக்கான எந்த அறிகுறியையும் காணவில்லை. கொழும்பு இந்தப் போக்கிலேயே சென்றால் அது பன்னாட்டு நீதிவிசாரணையைச் சந்திக்க வேண்டிய அழுத்தத்தை அதிகரிக்கும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர்சயிட்அல்ஹுசைன்எச்சரித்திருந்தார். அதனையும் பொருட்படுத்தாமலேயே, தான் பதவியில் இருக்கும் வரை இத்தகையவிசாரணைகள்நடத்தப்படமாட்டாது என்று அரசதலைவர் அறிவித்திருக்கிறார். ஆக, தமிழர்களுக்குநீதிகிடைக்கவேண்டும் என்றால்மைத்திரிபால சிறிசேனவைப் பதவியிலிருந்து அகற்றுவதைத்தவிர வேறு என்ன வழி தமிழர்களுக்கு இருக்கமுடியும்?

# தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சியே தமிழ் மக்களது எதிர்பார்ப்பு

இரா. இராஜேஸ்வரன்

தேசியம் என்பது, ஒரு இனம், தான் வாழ்வதற்காக நீண்ட காலமாக ஒரு பாரம்பரிய நிலத்தில், தனக்கெனத் தனியான மொழி, பண்பாடு, கலாசாரம், பொருண்மியவளம் என்பவை கொண்டதாக இயங்குதல் என்பதாகும்.

அதன் விரிந்த உண்மையான உட்பொருள், இன்னும் விசாலமானது. குறித்த பாரம்பரிய நிலத்தில், அவர்களின் ஆள்புல எல்லை: ஆகாயம், கடல், வளிமண்டலம், இயல் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், அவர்தம் பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைமைகள் என்று அத்தனை விசேட அம்சங்களும் தேசியத்தின் அர்த்தக் கூறுகளாகும். அதன் மெய்ப்பொருள உணர்த்துவது தான், தமிழர்கள் தனியான தேசிய இனமாகத்தம்மைவெளிப்படுத்துவதற்குக்காரணம்.

### ஈழத்தமிழர்களது தனிப்பெரும் கட்சியாக தன்னை நிறுவிக் கொண்ட தமிழரசுக் கட்சி

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசம் தமிழர்களின் மரபுவழித் தாயக பூமி எனப்படுவதன் அர்த்தம், மேற்சொன்ன அடையாளங்களின் பரிணாமப் படிமுறையாகும். அதாவது தமது அப்பன், அவரது அப்பன், அவரது அப்பன், ஆச்சி, அவளது ஆச்சி, அவளது ஆச்சி எனப் பரம்பரையாக மேற்சொன்ன அடையாளங்களோடு வாழ்ந்து, அதனை உருக்குலையாமல் அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்தி வந்து, எம்மிடம் சேர்த்திருப்பதுதான். எனவே தமிழர்கள் தமது மரபுவழித் தாயக பூமியில், தமிழ் அடையாளங்களோடு தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதால், அவர்களை ஒரு தேசிய இனமாகக் கொள்ளுதல் அவசியம்.

தமிழர்கள் மீதான பாரபட்சப்படுத்தல்கள் முனைப்புப் பெற்று வந்த சுதந்திர இலங்கையின் ஆரம்ப நாள்களில், தமிழர்கள் தனியானதேசிய இனம் என்ற மெய்யான புரிதல்களோடு, ஜனநாயக, அரசியல் மற்றும் அறவழிப் போராட்டங்களை தந்தை செல்வநாயகம் தலைமையிலானவர்கள் முன்னெடுத்திருந்தனர். சி. வன்னியசிங்கம், இ.மு.வி.நாகநாதன் ஆகியோரும் இவர்களில் அடங்கியிருந்தனர். இந்த இ.மு.வி.நாகநாதன் தான், தமிழ் ஈழம் என்றிருந்ததை தமிழீழம் என்று சேர்த்து உச்சரிக்க வேண்டும் என்று பதிவு செய்தவர்.

தமிழரசு ஒன்றை எவ்வாறு நிறுவிக்கொள்ள வேண்டும் என்பதில் தெளிவான செயல் வடிவம் ஒன்று அவர்களிடம் இருந்திருக்கவில்லையாயினும், அதை நோக்கி நகர்வதற்கான உத்வேகத்தையும் பாதையையும் திறந்துவிட்டவர்கள் தமிழ் அரசுக் கட்சியினரே!

1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதியன்று தமிழ் அரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு, அதன் அரசியல் பயணத்தில் 1956 ஆம் ஆண்டில் பண்டாசெல்வா ஒப்பந்தத்தையும், 1965 ஆம் ஆண்டில் டட்லி செல்வா ஒப்பந்தத்தையும், தமிழ் மக்கள் சார்பாக இலங்கை அரசுடன் செய்துகொண்டதன் அடிப்படையில், தமிழர்களின் தவிர்க்கமுடியாத கட்சியாகவும், இலங்கைத் தமிழ் மக்களது பேரம் பேசும் சக்தியாகவும் தமிழ் அரசுக் கட்சி தன்னை நிறுவிக் கொண்டது.

அந்த ஒப்பந்தங்கள் பின்னாளில் சிங்கள மக்களின் பேராதரவோடு சிங்கள ஆட்சியாளர்களால் கைவிடப்பட்டமை வரலாற்றுப் பாடம். தமிழ் அரசுக் கட்சி, (பெடரல் பார்ட்டி) சமஷ்டிக் கட்சி என்றே சிங்கள மக்களால் அறியப்படுகிறது. எனவேதான் 'பெடரல்' என்றதும் அது தனித் தமிழ் அரசொன்றை நிறுவிக் கொள்ளும் ஆட்சி முறைமை என்று இன்றளவும் சிங்கள மக்கள் நம்பவைக்கப்படுகிறார்கள். 1976ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டை பிரகடனத்தின் மூலம் தமிழீழ தனியரசு ஒன்றுக்கான அறைகூவலை தமிழ் அரசுக் கட்சியினால் விடுக்க முடிந்தது. அதனைத் தொடர்ந்து 1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு மக்கள் பெருமளவிலான தமது ஆதரவை தமிழ் அரசுக்கட்சிக்கு வழங்கியதன் மூலம், தனியரசொன்றுக்கான ஆணையை வழங்கினார்கள் என்றே கொள்ள வேண்டும். 1970 களின் பிற்

**ஈழவிடுதலைக்காக பல ஆயுத இயக்கங்கள் தோன்றியிருந்தாலும், தங்களின் கண்ணியமான செயற்பாடு, கடமை தவறாத தன்மை, கட்டிறுக்கமான தலைமை, சோரம்போகா வீரம், சாகத்துணிந்தமனம், சுயகட்டுப்பாடு, ஒழுக்கம் போன்ற நற்பண்புகளால் தமிழீழ விடுதலைப்புலிகளே மக்களின் மனங்களில் நன்மதிப்பையும் பேராதரவையும் பெற்றனர்.**



பாதியில் முனைப்புப் பெற்றிருந்த ஈழப்போராட்ட இளைஞர்களுக்கு, இந்த மக்கள் ஆதரவு பெரும் உட்சாகத்தையும்மனோதிடத்தையும்கொடுத்தது. ஈழவிடுதலைக்காக பல ஆயுத இயக்கங்கள் தோன்றியிருந்தாலும், தங்களின் கண்ணியமானசெயற்பாடு, கடமை தவறாத தன்மை, கட்டிறுக்கமான தலைமை, சோரம்போகா வீரம், சாகத்துணிந்த மனம், சுய கட்டுப்பாடு, ஒழுக்கம் போன்றதமது நற்பண்புகளால் தமிழீழவிடுதலைப்புலிகளேமக்களின் மனங்களில் நன்மதிப்பையும் பேராதரவையும் பெற்றனர்.



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஒருசிலதனிநபர்களின் செயற்பாடுகள்தான் இந்தக் குழப்பங்களுக்குக் காரணம் எனக் கூறி இலகுவாகக் கடந்துபோய்விட முடியாது. இனிவரும் காலங்களில் தமிழ் தேசியத்திற்கு ஏற்படப்போகும் பாரதூரமான பின்னடைவுகளுக்கு தமிழ் தலைமைகள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளாக வேண்டி ஏற்பட்டுள்ளது.

### ரணில்– பிரபா ஒப்பந்தத்தின் விளைவாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு

அதன் பயனாகவே முப்பது ஆண்டுகள் காலத்துக்கும் மேலாக எவராலும் இலகுவில் வீழ்த்திவிட முடியாத இராணுவ பலத்தோடும், பொருண்மிய, மக்கள் பலத்தோடும் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒரு விடுதலைப் போராட்டத்தை நகர்த்திச் செல்ல முடிந்தது: குறித்த காலப்பகுதியில் இலங்கையின் இராணுவ அரசியல் நகர்வுகள் விடுதலைப் புலிகளை முன்னிறுத்தியே நகர்த்தப்பட்டதுண்டு. எனவே மேற்குறிப்பிட்ட அரசியல் தலைமைகளுக்கு வெளித்தெரிகின்ற வகையில் எந்த வேலைத்திட்டங்களும் செயற்பாடுகளும் களத்தில் இருக்கவில்லை.

தந்தை செல்வநாயகத்தின் மூலமும், தமிழ் அரசுக் கட்சியின் மூலமும் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கருத்துருவாக்கத்துக்கு, களத்தில் யதார்த்த பூர்வமாகவும் கொள்கை ரீதியாகவும் செயல்வடிவமும், உயிர்வடிவமும் விடுதலைப் புலிகளால் கொடுக்கப்பட்டன. கோட்பாட்டு ரீதியாக அதன் அர்த்தப் பொதிவுகளைஉலகஅரங்குக்குக்கொண்டு சென்றவர்களில் அன்டன் பாலசிங்கம் முதன்மையானவர்.

இப்படியாக பல நீண்ட செயல்வடிவங்களையும், போரியல் சார் தியாகங்களையும் மேற்கொண்டு, உலக தரிசனத்தோடு, நவீன உலக சிந்தனைகளையும் உள்வாங்கி, மிகச்செறிவாக பல துறைகளிலும், பல வடிவங்களிலும் செயற்பட்டு தமிழ் மக்களின் மனங்களில் ஆழமாக பதியம் வைக்கப்பட்ட தமிழ்த் தேசிய எண்ணக்கருவை, அடுத்த கட்டமாக தோள்களில் தாங்கிக் கொள்பவர்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இருந்தனர்.

2002 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ரணில்-பிரபாஒப்பந்தத்தின்விளைகனியாகவும், அமர ஊடகர் தர்மரட்ணம் சிவராமின் அயராத ஊடாட்டத்தின் பலனாகவும், விடுதலைப் புலிகளின் அங்கீகாரத்தோடும் தமிழர்களுக்கு கிடைத்ததுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

### தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிடம் தமிழ் மக்கள் எதிர்பார்த்தவை ஏமாற்றமாகின

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்பவை இணைந்ததே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி ஆயுத மோதல்களின் மௌனிப்பின் பின்னரான காலப்பகுதியிலிருந்து தமிழ் மக்கள் தங்களது ஏகோபித்த அரசியல் தலைமைகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஏற்றுச் செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால் 2015 ஜனவரி 08ஆம் திகதிய தலைவர் தேர்தலையடுத்து கூட்டு அரசின் பின்னரான காலப்பகுதியில்தமிழ்மக்களுக்கும்தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையிலான இடைவெளித் தூரம் பாரதூரமாகிப் போனதுதான் துரதிர்ஷ்டமாகும்.



தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த தமிழீழ தனியரசுக் கனவு சிதைக்கப்பட்டதன் பின்னர், வடக்கு, கிழக்கு இணைந்த தமது தாயகப் பிரதேசத்தில், தனித்துவமான அடையாளங்களுடனும், சுயநிர்ணய உரிமையுடனும் கூடியதான ஒரு தீர்வை எதிர்பார்த்தே, தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்திருந்தனர்.


### தமிழ் தலைமைகளை ஏமாற்ற முயலும் ஆட்சித் தரப்புக்கள்

அதில் எதுவொன்றும் அங்குலம் கூட நகராத நிலையில், அதற்கு மாறான தமிழ் மக்கள் விரும்பாத தகாத விடயங்களை அரசு புதிது புதிதாகத் திரைநீக்கம் செய்து வருகிறது. உதாரணமாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வைக் கொடுக்காமை, அரசியல் கைதிகளை விடுவிக்காமை, கடல் நிலம் சார் பொருளாதாரத்தை இராணுவம் தம் வசப்படுத்தி இருத்தல், உண்மையைக் கண்டறியவும், மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் உண்மையாக செயற்படாமை, மீள்கட்டுமான வாழ்வாதார மேம்பாடுகளை மேற்கொள்ளாமை, திட்டதிட்டமிட்ட குடியேற்றம், பௌத்த மயமாக்கல் என நீண்டு செல்லும் பட்டியல் உண்டு. இதில் விசேடம் என்னவெனில் அரசின் இத்தகைய செயற்பாடுகளுக்கு தமிழ்த் தலைமைகள் ஒத்தோடுதல் அல்லது மௌனமாக இருத்தல் என்ற துலங்கல்களை காட்டிக் கொண்டிருப்பதால், மக்கள் பெரும் சினம் கொண்டுள்ளனர்.

அதன் அறுவடைகளை எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலிலும், மாகாணசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் எம்மால் காணக் கூடியதாக இருக்கும். அதன் பெரும் பயன்களை தென்னிலங்கைக் கட்சிகளும் முஸ்லீம் கட்சிகளுமே அனுபவிக்கக் கூடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருசில தனி நபர்களின் செயற்பாடுக்ள்தான், இந்தக் குழப்பங்களுக்கு காரணம் எனக் கூறி இலகுவாகக் கடந்து போய்விட முடியாது. இனிவரும் காலங்களில் தமிழ் தேசியத்துக்கு ஏற்படப்போகும் பாரதூரமான பின்னடைவுகளுக்கு தமிழ்த் தலைமைகள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளாக வேண்டி ஏற்பட்டுள்ளது.

ஒரு பொது மனநிலையோடு, மக்கள்நலன் சார்ந்து செயலாற்றுகின்ற செயலூக்கம் மிக்கவர்களாக, தமக்குள் ஐக்கிய படுகின்ற ஒரு கூட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வர வேண்டும் என்பதும், எதிர்காலத்தில் தமிழ்த் தலைமைகள் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு, தமிழ்த் தேசியத்தைப் போசித்து வளர்க்க வேண்டும்என்பதுமேதமிழ்மக்களின்பெருவிருப்பாகும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### மழைக் காலத்தை அவதானத்துடன் எதிர்கொள்வோம்

குடாநாட்டில் தொடர்மழை பெய்து வருவதால் நோய்கள், குறிப்பாகத் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. குறிப்பாக நீர் மூலமாகப் பரவக்கூடிய நோய்கள் தொடர்பாக நாம் அவதானத்துடன் இருக்கவேண்டும்.

நாம் கிணற்று நீரையே எமது சகல தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றோம். தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வெள்ள நீர் அநேகமான இடங்களில் தேங்கி நிற்பதைக் காண முடிகின்றது. இந்த நீரில் நோய்க் கிருமிகள் கலந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிக அளவில் உள்ளன. இதனால் கிணற்று நீரும் மாசடைந்து விடுகின்றது. எம்மில் பலர் அந்த நீரை எடுத்து அப்படியே அருந்துகின்றனர். இதனால் நோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு அதிகரித்து விடுகின்றது. இதைத்தவிர்க்க வேண்டுமானால், நீரைக் கொதிக்க வைத்து அருந்துவதே இலகுவான செயல் முறையாகும். இதற்கு ஏற்படுகின்ற செலவும் கூட மிகக் குறைவானது. ஆனால் எம்மவர்களில் பலர் இந்த நடைமுறையைக் கடைப்பிடிப்பதில்லை.

எம்மில் சிலர் வீதிகளின் ஓரமாக வெள்ள நீர் ஓடிச் செல்லாதவாறு மண்ணைப்போட்டு உயர்த்தி விடுகின்றனர். இதனால் வெள்ளநீர் ஓடிச் செல்ல முடியாது தேங்கி நிற்கின்றது. இத்தகைய வீதிகளைப் பயன்படுத்துபவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும், வீட்டு வளவுகளில் நுளம்புகள் பெருகுவதற்கான சூழ்நிலையை நாமே ஏற்படுத்திவிடக் கூடாது. இதனால் எமக்கு மட்டுமல்ல அயலில் உள்ளவர்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. மழைக்காலம் என்றால் மழை பெய்யத்தான் செய்யும். வெள்ள நீரும் தேங்கி நிற்கவே செய்யும். நாம்தான் அவதானத்துடன் செயற்பட்டு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

பொ. தருமராசா,
தாவடி.

# வாழ்க்கைச் செலவில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து நடவடிக்கை

*வரவு செலவு திட்ட உரையில் நிதி அமைச்சர் எடுத்துரைப்பு*

வாழ்க்கைச் செலவில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவலை நிதி அமைச்சர் மங்கள சமரவீர வெளிப்படுத்தியுள்ளார்.

2018 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கும் போது,

"நடப்பு வருடத்தில் நாட்டில் நிலவிய மோசமான காலநிலையால் விவசாயப் பொருள்களின் உற்பத்தி பாதிப்படைந்தது. அரிசி மற்றும் தெங்கு உற்பத்தி செயற்பாடுகளில் அதிக பாதிப்பு ஏற்பட்டது. இந்த செயல் நிலைகள் அடிப்படை உணவுப் பொருள்களின் விலையில் அதிக தாக்கத்தை செலுத்தியுள்ளன. இதனால் வாழ்க்கைச் செலவில் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் குறைப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு, நெத்தலி, மாசி மற்றும் பருப்பு என்பவற்றின் மீதான இறக்குமதி வரியை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் விதமாக அரசு, கட்டணமின்றி வழங்கப்படும் பொது இட அமைவில் நியாயமான விலையில் பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யும் கடைகள் உருவாக்கப்படவுள்ளன. இங்கு நுகர்வோருக்கு நன்மையபயக்கும் விதமாக குறைந்த விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதனை ஒப்பந்தகாரர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பொருள்களின் விலை நிர்ணயம் மற்றும் தரத்தில் மோசடி செய்வோரிடமிருந்து நுகர்வோரை பாதுகாக்கும் செயற்பாடுகளை நுகர்வோர்





பாதுகாப்புச் சபை உறுதிப்படுத்திக் கொள்ளும்." - என்றார். (ஒ)

## 2018 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்த பார்வை

வரிக் கொள்கை மற்றும் வரி நிர்வாகத்துக்கு அறிமுகம் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள், அரச வருமானச் செயலாற்றுகை தொடர்பில் கணிசமாக மேம்பாட்டினை கண்டுகொண்டுள்ளது. தவிர, 2015 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் அரச வருமானத்தின் போக்கு நிலையான மேல்நோக்கிய மாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

(ஒ)




தகவல் மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்



## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரிப்பு

*ஜூலை மாத உற்பத்தியில் 0.8 வீதமாகப் பதிவு*

2016 ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் ஜூலை மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடு 0.8 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்தத் தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு ஜூலை மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் கடந்த ஜூலை மாத உற்பத்திகளில் 'அடிப்படை உலோக உற்பத்தி பொருள்கள்' 20 வீதமாகவும், 'வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்தி பொருள்கள்' 15.8 வீதமாகவும் மற்றும் 'அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள்' 10 வீதமாகவும் பதிவாகியுள்ளன. இவை உற்பத்தியின் சார்பு கருதி குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. உணவு உற்பத்தியானது ஜூலை மாதத்தில் 2.3 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அதேவேளை கைத்தொழில் உற்பத்திகளில், 'கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்' 22 வீதமாகவும், 'பான வகை' 10.7 வீதமாகவும், 'இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும்' 7.5 வீதமாகவும் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளன.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிக முதன்மையான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளது. இவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன. (ஒ)

# ‘மாதுளை’

## அதிக ஊட்டச்சத்துடைய இயற்கையின் அலங்கார வதுவை



'புனிகேசியே' குடும்பத்தைச் சார்ந்த (Punica granatum) மதுளை. ஈரானைப் பூர்வீக இடமாக கொண்ட தாவரமாக விளங்குகிறது. இத் தாவரம் தமிழில் மாதுளை எனப் பெயர் குறிப்பிடப்படுகிறது. மருத்துவ குணங்களை அதிகம் கொண்டுள்ளது. மாதுளம்பழம், வேறு எந்தப் பழங்களிலும் இல்லாத ஊட்டச் சத்துகளை நிறைவாக கொண்டுள்ளது. அலங்காரத் தாவரமாகவும் சிறப்புறுகிறது. புளிப்புக் கலந்த, இனிப்புச் சுவையான கவரக்கூடிய அதன் மேல்வளரியானது ஒரு பழமாக நுகரப்படுகிறது. மாதுளையில் இருந்து உணவுப் பொருள்கள் தவிர்ந்து அழகுசாதனப் பொருள்கள் மற்றும் நிறமூட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

### சத்தூட்டம்

அதிக போசணை நிறைந்த, உயர்தரமான மாதுளை மக்களிடையே ஒரு மருத்துவப் பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாதுளை நீரில் கரையாத நார்ச் சத்தினை அதிகளவில் கொண்டுள்ளது. இத் தன்மை உணவு சமிபாட்டை சீர்ப்படுத்துவதோடு, குடலிலும் இலகுவாக அசையும். உடல் நிறையை குறைப்பதற்கும், கொழுப்பைக் கட்டுப்படுத்துவதற்கும் உதவுகிறது.

மாதுளையை தினந்தோறும் உண்பதால் நாளாந்த விற்றமின் 'சி' தேவைப்பாட்டின் 17 வீதம் பூர்த்தி செய்யப்படுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியும் குருதிச் சுற்றோட்டமும் அதிகரிக்கிறது.

மாதுளையிலுள்ள நீரில் கரையும் தன்மையுடைய 'தனின்' ( uydrootysable tanimi) மற்றும் 'பிளேவனொயிட்' (Flavonild) காரணமாக் இதய நோய் ஆபத்துக்கள் குறையும், குருதியமுத்தம் கட்டுப்பாட்டில் இருக்கும். புற்றுநோய்க்கு மாதுளைச்சாறு உகந்தது. அத்துடன் புதிய புற்று நோய்க்கலங்கள் உருவாகும் வேகத்தை குறைப்பதுடன், கலங்கள் சிதைவடைவதை யும் தூண்டுகிறது.

### மருத்துவப் பயன்பாடு

மாதுளையின் பூ, இலை, பட்டை, காய், மற்றும் வேர் என அனைத்துமே ஆயுள் வேத வைத்திய முறையில் முதன்மை இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

- மாதுளை வேரையும் பட்டையையும் அவித்து, அந்த நீரைக் கொண்டு காயங்களைச் சுத்தம் செய்யலாம்.
- கண் நோய் ஏற்படும் போது மதுளம் இலையை அவித்து, அந்த நீரைப் பயன்படுத்தி கண்களை கழுவலாம்.
- உணவு சமிபாடின்மை, வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுவலி போன்றவற்றுக்கு மருந்தாக அமைகிறது.
- அதிக குருதிப் போக்கு மற்றும் வயிற்றோட்டம் ஏற்படும் போது அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மாதுளம் மரப்பட்டையை அவித்துப் பருகலாம்.

### மண்வளமும் காலநிலையும்


மாதுளை எல்லா வகையான மண்களிலும் வளரக்கூடியது. வறட்சியையும், பனிப் பொழிவையும் தாங்கி வளரக் கூடிய தாவரமாகவும் இது விளங்குகிறது.

### இனப்பெருக்கம்

விதைகள் மற்றும் பதிய முறை மூலம் மாதுளையை இனப் பெருக்கம் செய்யலாம். விதைகள் மூலமே அதிகளவு தாவரங்கள் இனப் பெருக்கம் செய்யப்படுகின்றன. மாதுளையில் அதிகளவான தன்மகரந்தச் சேர்க்கை இடம்பெற்றாலும், அயன்மகரந்த சேர்க்கையும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. 'வேர் விட்டத் துண்டங்கள்' மற்றும் 'காற்றுப் பதியம்' மூலமும் தாய்த் தரவரத்தை ஒத்த இனங்களை இனப் பெருக்கம் செய்யமுடியும்.

### பயிரிடல்

ஆரம்ப காலங்களில் வீட்டுத் தோட்டப் பயிராக செய்கை பண்ணப்பட்ட மாதுளை, தற்போது வர்த்தக ரீதியிலும் பயிரிடப்படுகிறது. ஏக்கரொன்றில் '3 மீற்றர் 3 மீற்றர்' இடைவெளி கொண்டு 400 மரங்களை நடுகை செய்யலாம். மழைக்கால ஆரம்பத்துடன்



நாற்றுக்களை நடுகை செய்வது சிறப்பான்தாகும்.

மாதுளையில் இருந்து அதிகவிளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கும், மரத்திற்கு சிறந்த தோற்றத்தை வழங்குவதற்கும் மாதுளைத் தாவரம் வளரும் காலத்தில் இருந்தே சிறந்த பராமரிப்பை வழங்க வேண்டும். மரத்தை முறையாகப் பயிற்றுவிக்க வேண்டும். மேலும் மாதுளையின் முதன்மைத் தண்டுகளில் 3 தொடக்கம் 4 தண்டுகள் வரை வளர இடமளிக்க வேண்டும். முதன்மைத் தண்டுகள் 2 தொடக்கம் 2 அடி உயரம் வளர்ச்சியடைந்ததும், நுனியரும்புகளை அகற்றி கிளை கொள்வதனை ஊக்கிவிக்க வேண்டும். ஒவ்வொரு அறுவடை காலத்தின் பின்னரும் நீர் வாதுக்கள், தேவையில்லாத கிளைகள், கீழ் நோக்கிச் சரியும் கிளைகள் மற்றும் ஒட்டுண்ணித் தாவரங்கள் என்பனவற்றை அகற்ற வேண்டும். இந்தச் செயன்முறைகள் மாதுளைச் செய்கையில் முதன்மையான பயிர் வளர்ப்பு நடைமுறைகளாகப் பின்பற்றப்பட வேண்டும்.




### அறுவடை

இவற்றிலிருந்து வருடம் முழுவதும் பழங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், வருடத்தின் மத்திய காலப் பகுதயில் அதிகளவு பழங்களை அறுவடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். பூக்கள் உருவாகி 4 மாதங்களில் பழங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பழத்தினை நேரடி உணவாக்கிக் கொள்ளலாம். தவிர, ஏனைய பழங்களுடன் பழக் கலவையாகவும், பழச்சாறாகவும், வைண் ஆகவும் அருந்தலாம்.

**“மழை வரும்
மரம் நடு”**

---

கே.எஸ்.சிவஞானராஜா

# முருங்கை

## தேக ஆரோக்கிய அற்புதங்கள் மொழியும் மருத்துவச்சி



எம்மிடையே பாவனையிலிருக்கும் ஒவ்வொரு பழமொழியிலும் ஆழ்ந்த உட்பொருள் பொதிந்திருப்பதை நாம் ஆராயந்து நோக்குமிடத்து, “முருங்கையை நட்டவன் வெறுங்கையோடு போவான்” என்ற பழமொழியின் கருத்தையும் புரிந்து கொள்ளமுடிகிறது. குறிப்பாக, இலங்கையின் வடபகுதி முருங்கை மரத்தின் சொ(வி)த்தாக விளங்குகிறது. இதனை மறுதலையாகச் செல்வதானால் வடபகுதியின் முத்தான சொத்தாக முருங்கை விளங்குகிறது.

### சந்தானம்

வடபகுதியின் சுற்றாடல் சுழமைவு முருங்கைக்குச் சாதகமாக அமைந்திருப்பதனால் முருங்கை மரமெல்லாம் பூவாக , பூவெல்லாம் பிஞ்சாக, காம்பெல்லாம் காயாக நின்று நீடு வாழ்கிறது. யாழ்ப்பாணத்தில் காய்க்கின்ற முருங்கைக் காய் உலகிலே அதிக சுவையுடையதாக விரும்பப்படுகிறது. காரணம் மண்வாசனையே. காய்கள் அத்தனையும் நல்ல சதைப்பிடிப்புடன் காணப்படுகின்றன. சதை முழுவதுமாகச் சத்து நிரம்பியுள்ளது. பெண்களுக்கு மருத்துவ ரீதியில் விசேடத்துவமுடைய உபகாரியாக திகழ்கிறது.

“சதையையுண்டால் சந்தானம்
சக்கையை யுண்டால் சமாதானம்
இலையையுண்டால் இரத்ததானம்
எண்ணியதெல்லாம் முழுத்தானம்”

காயிலே உடல் வலுவுக்கேற்ற ஊட்டச்சத்துகள் இருப்பது போலவே, இலையில் இரும்புச் சத்துடன் கூடிய கனியத் தாது வளங்களும் நிறைவாக உள்ளன. படுக்கையில் படுத்தவரையும் எழுப்ப வல்ல மிடுக்கினை முருங்கை கொண்டுள்ளது. ‘அடுப்பூதும் பெண்களுக்கு ஆலாபனம் செய்வதும், ஆச்சியும் அப்புவும் மூச்சு விடுவதும் இதனாலே’ என்று சொன்னால் மிகையாகாது.

### நிறைவான வாழ்வின் தருவி

ஆக, போன சந்ததியும், அதற்கு முந்தைய சந்ததியும் நிறைவான வாழ்வை கண்டனர் என்றால், அது முருங்கையினாலே என்று துணிந்து கூறலாம்.

**“காயும் இலையும்
காம்பும் தோறும்
நோயும் இல்லாத
நீண்ட ஆயுளாகும்...!
பாயும் படுக்கையும்
பயமும் இல்லை
சாயும் வரைக்கும்
சஞ்சலமும் இல்லையெப்படி..?”**

### வெறுங்கை

முருங்கை வெறுங்கை என்பர்..! அதாவது, முருங்கைமர இலையைச் சாப்பாட்டில் தினம் வறையாகவோ, கறியாகவோ, சொதியாகவோ வைத்து உண்டு வந்தால் பிற்காலத்தில் பொல்லுப் பிடிக்க வேண்டி தேவை ஒருபோதும் வராது. ‘கைநீட்டிக் கைவீசி நடக்கலாம், நிமிர்ந்து நடக்கலாம்’ என்ற கருத்தையே இந்தப் பழமொழி சுட்டிக்காட்டி நிற்கிறது. அதில் ஒன்றும் இல்லையே என்று கருத்துப்படவில்லை. முருங்கைக்காயைத் தினமும் சாப்பிடக்கூடாது. காரணம் அதில் அளவுக்கதிகமான கல்சியமும் விற்றமின்களும் உண்டு. உடம்பிலே சத்துக் கூடினால் உறுப்புகள் குழப்பகரமான குளறுபடிகள் செய்யும். இது நோயல்ல, விரதங்களைக் குழப்பியே விட்டு விடும். பிறகென்ன அவ்வளவுதான். ஆசைகள் அரும்பித் துளிர்விட்டுப் புன்னகைக்கும்.

### இல்லறதாரிகள்

இல்லறத்தில் இருப்பவர்களுக்கு இது வரப்பிரசாதம். கணவன் மனைவி இனிப்பாகவும் இதமாகவும், இங்கிதமாகவும், இலாவகமாகவும், லாவண்யமாகவும் விளங்குவதற்கு முருங்கை உணவுகள் வரம்பாலிக்கும் மருந்தாகவும், விருந்தாகவும், பெரும் பேறாகவும் விளங்குகிறது. அருள் சுரக்கும் முருங்கை ஏழை பங்காளனாகவும், சிரஞ்சீவியாகவும், பெண்களுக்கு நலம் சேர்க்கும் சஞ்சீவியாகவும், எந்த ஒரு மருந்துக்கும் ஆளாகாத பாஞ்சாலியாகவும் மிளிர்கிறது.

ஆண்டிக்கும் அரசனுக்கும் இது தூண்டவும், தாண்டவும், வேண்டவும் செய்வதனால் சந்தான முருங்கை என்றும், சடங்கு முருங்கையென்றும், சௌபாக்கிய முருங்கையென்றும், சந்தோஷ முருங்கை யென்றும் அழைக்கப்படும் வழக்கம் உண்டு. என்ன சொல்ல...! இதன் சிறப்புக் க(கொ)ண்டு நிமிர்ந்த தோள்விரித்து, நேரியபார்வையோடு ஒளிர்ந்த மேனியும், ஒத்திசைவான மார்பும், குளிர்ந்த மனமும், கூடாத சதையும் மலர்ந்த உலகில் மருவி நிற்குமே.

# பத்தி எழுத்து

## கண்காணிக்கப்பட வேண்டியவர்கள் வியாபாரிகளே!

அரசு சில அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி வரியைக் குறைத்துள்ளது. பாவனையாளர்கள் குறைந்த விலையில் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டே இந்த வரிக்குறைப்புக்கள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

ஆனால் இந்த நன்மைகள் மக்களைச் சென்றடையுமா? என்பது சந்தேகமாக உள்ளது. ஏனென்றால் வர்த்தகர்களும், சிறு வியாபாரிகளும் விலைக்குறைப்புச் செய்வதற்கு சாதரணமாக இணங்குவதில்லை. ஏதோசாட்டுப்போக்குச் சொல்லிக் காலத்தைக் கடத்துவதே இவர்களின் வாடிக்கையாகிவிட்டது. தம்மிடமுள்ள பழைய இருப்புக்களைக் குறைந்த விலைக்கு விற்கமுடியாது என்பது இவர்களது வாதமாகும். இதில் நியாயமும் இல்லாமலில்லை. ஆனால் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படும் போது இவர்கள் தம்மிடம் உள்ள முன்னயை பழைய இருப்புக்களை முன்னைய விலைக்கு விற்பதில்லை. அதிகரித்த விலைக்கே விற்கின்றனர்.

அரிசியின் விலை குறைந்துள்ளதாக அரசு அறிவித்தபோதிலும் அதிகரித்த விலையிலேயே அதனை விற்பனை செய்வதை அவதானிக்க முடிகின்றது. இதனால் சாதாரண மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் இதில் அதிக கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. இதைவிட இடத்துக்கிடம் வேறுபட்ட விலைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதையும் காண முடிகின்றது. மக்கள் அன்றாடம் கொள்வனவு செய்கின்ற மரக்கறி வகைகள், கடலுணவுகள் ஆகியனவும் சந்தைக்குச் சந்தை மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. வியாபாரிகளே இதற்கான முதன்மைக் காரண கர்த்தாக்களாக உள்ளனர்.

வியாபாரிகள் இலாபம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு செயற்படும் வரையில் அவர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்றவே முடியாது. உணவகங்களும் இதற்கு விதிவிலக்காகக் காணப்படவில்லை. உணவுப் பொருள்களின் விலைகள் மாறுபட்ட வகையில் காணப்படுகின்றன. உ காரணமாக [illegible] விலையில் கூட மாறுபாடுகள் காணப்படுகின்றன.

[illegible]

[illegible] என்பதை உறுதி செய்ய வேண்டும்.

# நவம்பர் மாத ராசிபலன்

(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)



மகரம்

சனி பகவானை ராசிநாதனாகக் கொண்ட மகர ராசி அன்பர்களே, இந்த மாதம் ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாகக் செயற்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்வதன் மூலம் கூடுதல் இலாபம் கிடைக்கப்பெறுவீர்கள். தொழிலை விரிவுபடுத்த ஆலோசனைகளை மேற்கொள்வீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறமை வெளிப்படும். அதனால் மேல் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கப்பெறுவீர்கள். வர வேண்டிய பணம் வந்து சேரும்.

குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும் பத்தில் இருப்பவர்களால் அதிக வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். தாய், தந்தையரின் உடல் நிலையில் கவனம் தேவை.

பெண்கள் எந்த விஷயத்திலும் தெளிவான முடிவை எடுப்பீர்கள். புதிய விஷயங்களை அறிந்துகொள்ள ஆர்வம் உண்டாகும்.

**கலைத்துறையினருக்கு:** எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும். நினைத்த காரியத்தை நினைத்தபடி நடத்தி முடிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**அரசியல்துறையினருக்கு:** மனம் வருந்தும்படியான சூழ்நிலை ஏற்படும். மேலிடத்தவர்கள் நீங்கள் சொல்வதை காதில் வாங்காதவர் போல் இருப்பார்கள். எனவே எல்லோரையும் அனுசரித்து செல்வதால் நன்மை உண்டாகும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் இருக்கும். நினைத்த காரியத்தை செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் மனக்கவலை உண்டாகும்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் முன்னேற்றம் இருக்கும். அறிவியல், கணித பாடங்களில் கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்ல மதிப்பெண் பெற உதவும்.


**உத்திராடம் 2, 3, 4 பாதம்:**
இந்த மாதம் எதிலும் சிக்காமல் நழுவுவது நல்லது. கொடுத்த வாக்கை காப்பாற்றி அதன் மூலம் மதிப்பும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். பணவரவு திருப்தி தரும். சிக்கலான சில விஷயங்களை சாதூரியமாக பேசி முடித்து விடுவீர்கள். வீண் பயத்தை தவிர்ப்பது நல்லது.

**திருவோணம்:**
இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடும். உத்தியோகஸ்தர்கள் தங்களது சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் திறம் பட செய்து முடித்து பாராட்டு கிடைக்க பெறுவார்கள்.

**அவிட்டம் 1,2 பாதம்:**
இந்த மாதம் குடும்பத்தில் உறவினர் வருகை இருக்கும். தேவையற்ற வீண் பேச்சுக்களை குறைப்பதன் மூலம் குடும்பத்தில் அமைதி ஏற்படும். வாழ்க்கை துணையின் ஆதரவு உண்டு. பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடலாம். கோபத்தைத் தவிர்த்து பேசுவது நல்லது.



# வரலாற்றில் இன்றைய தினம் 11.11.2017





2000 - ஒஸ்திரியாவில் கேபிள் கார் தீப்பிடித்ததில் சுமார் 155 பேர் உயிரிழந்தனர்.

1869 - ஆஸ்திரேலியாவில் விக்டோரியன் பழங்குடியின மக்கள் தொடர்பான பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
1918 - ஆஸ்திரியப் பேரரசர் முதலாம் சாள்ஸ் அதிகாரத்தை இழந்தார்.
1960 - தென்வியட்நாமிய அதிபர் டெய்முக்கு எதிரான இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டது.
1975 - அங்கோலா சுதந்திரம் பெற்றது.
1981 - அன்டிகுவாவும், பார்போடாவும் ஐ.நா. சபையில் இணைந்தன.
2004 - பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் ஏற்பட்ட பேருந்து விபத்தில் சுமார் 58 பேர் உயிரிழந்தனர்.
2016 - [illegible] நிதி போதாது என்று [illegible] சபையின் கூட்டமைப்பு அதிருப்தி.
2016 - இனவாதக் கொள்கையில் வடக்கு அரசியல் வாதிகள் என்று நாடாளுமன்றத்தில் அருந்திக்க சாடல்.

## நாளை

**12.11.2017**
ஞாயிற்றுக்கிழமை
ஐப்பசி 26

திதி: நவமி மா. 05.08 வரை
நட்சத்திரம்: மகம பி.ப. 04.07 வரை
சுபநேரம்: 09.06–10.36 வரை
ராகுகாலம்: 04.36–06.06 வரை



# குயின்

## மறுதயாரிப்புப் பணிகள் மிகவும் துரிதகதியில்

கங்கனா ரணாவத் நடிப்பில் வெளியாகிய 'குயின்' படத்தின் மறு தயாரிப்புப் பணிகள் 4 மொழிகளில் மறு தயாரிப்புக்கு உட்படுகிறது.

தமிழில் காஜல் அகர்வால், தெலுங்கில் தமன்னா, மலையாளத்தில் மஞ்சிமா மோகன், கன்னடத்தில் பருல் யாதவ் ஆகியோர் ஹிந்தியில் ரணாவத் நடித்த வேடத்தில் நடிக்கிறார்கள். இதற்கான படப்பிடிப்புப் பணிகள் பிரான்ஸில் தற்போது துரிதமாக ்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. படப்பிடிப்புக்காக நான்கு நடிகைகளும் கடந்த சில வாரமாக பிரான்ஸில் முகாமிட்டுள்ளனர். இதில் தமிழ், கன்னட மொழி படங்களை ரமேஷ் அரவிந்த் இயக்குகிறார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 5 | | 1 | 4 | | |
| | | | | | 7 | | 3 | 9 |
| | | 7 | | | | | 5 | |
| | | 2 | | 9 | | | | |
| | | | | 2 | | 5 | | 6 |
| | | 4 | | | 5 | 2 | | |
| | | | 9 | | 8 | | 4 | |
| 6 | | | | | | | | 1 |
| | 8 | | | 3 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 6 | 3 | 4 | 2 | 5 | 9 | 8 |
| 9 | 8 | 2 | 7 | 5 | 6 | 4 | 1 | 3 |
| 3 | 4 | 5 | 1 | 8 | 9 | 2 | 7 | 6 |
| 4 | 5 | 7 | 6 | 2 | 1 | 3 | 8 | 9 |
| 6 | 9 | 8 | 5 | 7 | 3 | 1 | 4 | 2 |
| 1 | 2 | 3 | 4 | 9 | 8 | 6 | 5 | 7 |
| 5 | 3 | 4 | 9 | 6 | 7 | 8 | 2 | 1 |
| 8 | 7 | 1 | 2 | 3 | 4 | 9 | 6 | 5 |
| 2 | 6 | 9 | 8 | 1 | 5 | 7 | 3 | 4 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.




திங்கட்கிழமை



# பெண்களின் சக்தி

பெண்களின் கண்ணீர் உலகிலேயே மிக ஆற்றலுள்ள சக்தி
-வில்சன் மிஸ்னர்.

பெண்ணின் முகம் எனது புத்தகம் -
-பைரன்

காற்றை விடக் கடும் வேகம் கொண்டது பெண்களின் எண்ணம்
- ஷேக்ஸ்பியர்.

பெண் மனம் பெறும் அறிவுக்கு ஏற்பவே மனிதனின் அறிவும் வளர்ச்சியுடையதாயிருக்கும்
- ஷெரிடன்

பெண் எந்தக் காற்றிலும் அசைந்தாடி கொண்டி ருக்கும் நாணலைப் போன்றவள். ஆனால், பெரும்புயலிலும் அவள் ஒடிந்து விழ மாட்டாள்
- வேட்லி.

பெண்களுக்குரிய சுதந்திரத்தை வழாங்காத வரை ஒரு நாடு சுபீட்சம் அடையாது .
-நேரு.

உலகின் பெரும் புதிர்களுள் ஒன்று பெண்
-ஷேக்ஸ்பியர்

பெண்ணின் இதயம் அவளுடைய உதடுகளில் இருக்கிறது. ஆனால், அவளுடைய ஆன்மாவோ அவளுடைய கண்களில் இருக்கிறது
-லார்ட் பைரன்.

பொய்மைகோழைத்தனம், கீழ்க்குணம்ஆகிய மூன்றுமே பெண்கள் பெரிதும் வெறுப்பவை
-ஷேக்ஸ்பியர்.

பெண்ணின் ஒழுக்கத்தில் நம்பிக்கை இருத்தலே குடும்ப இன்பத்தின் அடிப்படை
-லாண்டர்.

twitter.com/Kozhiyaar



சிலருக்கு ஆறுதல் கண்ணீரில்.
சிலருக்கோ ஆறுதல் 'தண்ணீரில்'!

எதையாவது சாப்பிட்டுக்கிட்டே இருந்தா பிரஷர் வரும்ங்கிறாங்க....



எதையும் சாப்பிடலைன்னா அல்சர் வரும்ங்கிறாங்க

நாம் பிறக்கும்போதே எமக்கான பிரச்சினைகளும் பிறந்தாச்சு...



நாம் வளர்கிறமோ இல்லையோ எமது பிரச்சினைகள் எம்மை விட பெரிதாய் வளர்ந்து நிற்கின்றன.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனக்குழப்பம் உருவாகலாம். குடும்பத்தில் ஒற்றுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சீரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர்.

**இடபம்:** பேச்சில் நிதானத்தைக் கடைபிடிக்கவும். தொழில் வியாபாரத்தில் குறைபாடுகளை உடனடியாக சரிசெய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி உருவாகும். இலாபம் அதிகரிக்கும். சொத்து பிரச்னையில் சுமூகத் தீர்வு

**கடகம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**சிங்கம்:** இனிய பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். மக்கள் மத்தியில் மதிப்பு உயரும். தொழில் வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும்.

**கன்னி:** சுயநல நோக்குடன் சிலர் உதவ முன்வருவர். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தனரின் நன்மதிப்பை பெறுவர்.

**துலாம்:** தடைகளை தகர்த்து முன்னேறுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் இலாபம் பன்மடங்கு உயரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** தவறைத் திருத்திக் கொள்ள முயல்வீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும் இலாபம் குறையாது.

**தனுசு:** குடும்பத்தில் யாருடனும் வாக்குவாதம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**மகரம்:** குடும்பத்தினர் கருத்துக்கு மதிப்பளிப்பீர்கள். தொழில் வியாபார ரீதியான பயணம் செல்ல நேரிடும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**கும்பம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் உதவி தக்க நேரத்தில் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும்.

**மீனம்:** அன்பு மிக்கவராக அனைவரையும் ஆதரிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் சிறப்பான வளர்ச்சி இருக்கும். சேமிக்கும் விதத்தில் இலாபம் உண்டாகும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஆடுகள் நனைகின்றன: ஓநாய்கள் அழுகின்றன



பணக்காரர் ஒருவர் தன் வேலைகளை முடித்து விட்டு தன் வீட்டுக்குக் காரில் திரும்பி வந்து கொண்டிருந்தார். ஒரு வளைவில் அவர் தன் காரைத் திருப்பிய போது ஆச்சரியமான ஒரு காரியத்தை அவர் பார்க்க நேர்ந்தது. தெருவோரத்தில் அடர்த்தியாகப் புற்கள் வளர்ந்திருந்தன. புற்களுக்கு அருகே அமர்ந்து ஏழை ஒருவன் அந்தப் புற்களைப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தான். அந்தப் பணக்காரன் மிகவும் ஆச்சரியம் அடைந்து அந்த ஏழை மனிதனைத் தன்னருகே அழைத்து "நீ ஏன் ஆடு மாடுகள் போல புற்களைத் தின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். ஏழையோ, ஐயா!... உணவு சாப்பிட எனக்கு வழியில்லை. வறுமைதான் காரணம். ஆகவே, பசி தாங்க முடியாத நான் இந்தப் புல்லைப் பிடுங்கித் தின்று கொண்டிருக்கிறேன்"! என்று கூறினான்.

புணக்காரன் சற்று யோசனையில் இருந்து விட்டு "நீ என்னுடன் என் வீட்டுக்கு வருகிறாயா? என்றான். உடனேயே அந்த எழை மனிதன் அவன் முன் விழுந்து வணங்கினான். "ஐயா நீங்கள் தருமபிரபு. உங்களைப் போன்ற நல்லவர்கள் இரண்டொருவர் இன்னும் இருப்பதால் தான் எமது நாட்டில் மழை பெய்கிறது. உங்கள் அழைப்பை என்னால் ஏற்க முடியாதுள்ளது. நான் பிள்ளை குட்டிக்காரன். நான் மட்டும் தான் இங்கே புல்லைத் தின்கிறேனென நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் என் மனைவி மக்களும் கூட வறுமை காரணமாக வெவ்வேறு இடங்களில் புல் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் மட்டும் எப்படி அவர்களை விட்டு விட்டு தங்கள் வீட்டுக்கு வருவது?" என்று கேட்டான்.

எனக்கு உன் குடும்ப நிலையைக் கேட்பதற்கே சங்கடமாக உள்ளது. சாப்பிடுவது புல். அதையும் கூட ஒற்றுமையாக ஓரிடத்திலிருந்து சாப்பிட முடியாமல் வேறு வேறு இடத்தில் உண்ணும் படி விதி பிரித்து வைத்திருக்கிறதே. இனி இந்த நிலமை உனக்கு ஏற்படாது. உடனடியாகப் போய் உன் மனைவியையும் குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு வா" என்றார் அந்தப் பணக்காரர் இதனைக் கேட்ட அந்த ஏழை மனிதன் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தபடி தனது குடிசை நோக்கி ஓடினான். சிறிது வேளையில் அவன் மனைவி பிள்ளைகளுடன் வந்து பணக்காரனின் காரில் ஏறினான்.

கார் அவரது மாளிகை போன்ற வீட்டை அடைந்தது. பணக்காரன் காரை விட்டு இறங்கினான். ஏழை மனிதனும் அவன் குடும்பமும் காரை விட்டு இறங்கி மிகுந்த ஆச்சரியத்துடன் கண்முன்னே நிமிர்ந்து நிற்கும் அந்தப் பிரமாண்டமான மாடி வீட்டை பார்த்த படி நின்றார்கள். அப்போது பணக்காரர் "என் வீட்டுத்தோட்டக் காரன் ஒரு வாரமாக இங்கு வேலைக்கு வரவில்லை. அவன் வராததால் இந்தத் தோட்டத்தில் ஆள் உயரத்துக்குப் புல் வளர்ந்து விட்டது. இனிமேல் நீங்கள் தனித்தனியாகத் திரிந்து புல் சாப்பிடத் தேவையில்லை. இங்கேயே தினமும் வந்து உங்களுக்கு தேவையான புல்லைச் சாப்பிட்டு விட்டுப் போங்கள். என்ன சந்தோஷம் தானே" என்று கூறி விட்டு உள்ளே போய் விட்டான்.

இப்போது அந்த ஏழை மனிதன் சிந்திக்கத் தொடங்கினான். ஏழைகளின் கண்ணீரில் குளிர்காயும் அந்த பணக்காரன் போன்றவர்களின் கருணை வேடத்தை எண்ணிக் கலங்கினான். புதிய மாற்றம் வேண்டி சிந்திக்கத் தொடங்கினான்.

## சொல்வதெழுதுதல்

தரம் ஒன்றில் கற்கும் மாணவர்களுக்கான மெய் எழுத்து வரிசைச்சொற்களை ('ய்'முதல் 'ன்' வரை) இனங் காண்போம்

| ய் | ர் |
|---|---|
| நாய் | தேர் |
| பாய் | மோர் |
| கொய்யா | போர் |
| ஓநாய் | மார்பு |
| பொய் | தயிர் |
| தேங்காய் | உயிர் |
| நெய் | உயர்வு |
| தெய்வம் | பெற்றோர் |
| வாய் | வியர்வை |
| ஓய்வு | ஊர் |

| ல் | வ் |
|---|---|
| மயில் | கொவ்வை |
| பல்லி | செவ்வாய் |
| அணில் | செவ்வாழை |
| வயல் | செவ்விளநீர் |
| கடல் | செவ்வரத்தம்பூ |
| கல் | செவ்வந்திப்பூ |
| அல்லி | செவ்விந்தியர் |
| செல்வம் | செவ்விதழ் |
| குயில் | செவ்வானம் |
| கல்வி | |

| ழ் | ள் |
|---|---|
| யாழ் | தேள் |
| வாழ்வு | வள்ளம் |
| மகிழ்ச்சி | கள்வன் |
| கூழ் | எள்ளு |
| வீழ்ச்சி | வெள்ளை |
| தாழ்வாரம் | வெள்ளி |
| கீழ் | வெள்ளம் |
| தாழ்வு | உள்ளம் |
| சூழ்ச்சி | பள்ளம் |
| | பள்ளிக்கூடம் |

| ற் | ன் |
|---|---|
| புற்று | மான் |
| முற்றம் | பன்றி |
| நெற்றி | கன்று |
| ஒற்றுமை | மீன் |
| வெற்றி | அன்பு |
| குற்றம் | இன்பம் |
| சிற்பம் | அன்னம் |
| காற்று | சூரியன் |
| குற்றி | தேன் |
| வெற்றிலை | தென்னை |

# எனது பாடசாலை

- நான் கல்வி கற்கும் பாடசாலை அழகானது.
- இது நல்லதொரு சூழலில் அமைந்துள்ளது.
- நல்ல சூழல் கற்றலுக்கு உதவி புரியும்.
- எனது பாடசாலையில் ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.
- இங்கு தரம் 1 முதல் 13 வரையான வகுப்புக்கள் இருக்கின்றன.
- நான் தரம் 7 இல் கல்வி பயில்கிறேன்.
- எனது பாடாலை இருநூறு வருடங்களாக இயங்கி வருகிறது.
- ஆரம்பத்தில் ஆரம்பக் கல்விப் பிரிவு மட்டும் இயங்கியதாகவும், பின்னர் படிப்படியாக இடைநிலைப் பிரிவு, உயர்தரப் பிரிவுகள் என்று வளர்ச்சி பெற்றதாகவும் அறிய முடிகிறது.



- எனது தாத்தாவும் அப்பாவும் இங்கே தான் கற்றார்கள்.
- ஆண்கள் மட்டும் கல்வி கற்கும் பாடசாலைாக இது விளங்குகிறது.
- எனது பாடசாலையில் பல அறிஞர்களும், அரசியல்வாதிகளும் பழைய மாணவர்களாக இருக்கின்றார்கள்.
- எனது பாடசாலை பல வைத்திய நிபுணர்களையும் பொறியியலாளர்களையும் சிறந்த விளையாட்டு வீரர்களையும் உருவாக்கிக் கொடுத்துள்ளது.
- எமது பாடசாலையில் கற்ற பலர் நாடெங்கிலும் உள்ள வங்கிகள், மாவட்ட செயலகங்கள், பாடசாலைகள் அரச, தனியார் நிறுவனாங்களில் சிறந்த பதவிகளில் பணியாற்றுகிறார்கள்.
- இந்தப் பாடசாலை சிறந்த நாட்டுப் பற்றாளர்கள், எழுத்தாளர், கவிஞர் உருவாக்கியுள்ளது.
- எனது பாடசாலையில் சிறந்த நூலகம் ஒன்று உள்ளது.
- இங்கே அரிய சிறந்த நூல்கள் உள்ளன.
- ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு சிறந்த நூலகம் அவசியமாகும்.
- இங்கே சிறப்பு தேர்ச்சிகளும், பயிற்சிகளும், அனுபவமும் மிக்க ஆசிரியர்கள் பணிபுரிவதோடு அன்போடும், பண்போடும் கல்வி கற்பிக்கிறார்கள்.
- எமக்கு நல்ல திறமையும், ஆளுமைத் திறனுமுடைய அதிபர் கிடைத்துள்ளார்.
- எமது பாடசாலையில் பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் என்பன இயங்கி வருகின்றன.
- இவை பாடசாலையின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றன.
- இவர்களை விட சமூகத்தில் உள்ள பல பெரியவர்களும் நலன் விரும்பிகளும் பாடசாலையில் அக்கறையாக உள்ளனர்.
- ஒரு நல்ல சமூகத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவது நல்லதொரு பாடசாலையாகும்.
- அத்தகைய இந்தப் பாடசாலையில் கல்வி கற்பதை நான் பெருமையாக எண்ணுகிறேன்.
- நானும் என் தோழர்களும் இங்கு நல்ல கல்வியையும் ஒழுக்கத்தையும் பெற்று எதிர்காலத்தில் பாடசாலைக்கு நல்ல பெருமை சேர்த்துக் கொடுப்பதாக உறுதி எடுத்துள்ளோம்.

## இணைப்போம்



இரண்டு
2

மூன்று
3

ஒன்று
1

## வழிகாட்டுவோம்



# இரவில் வெகுநேரம் கண் விழிக்கிறீர்களா?

தற்போது இரவில் வெகு நேரம் கண் விழித்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நீங்களும் அந்த வகையைச் சேர்ந்தவரா? அப்படியானால் இது உங்களுக்குரிய பதிவு தான்...

**இரவில் வெகு நேரம் கண் விழிக்கிறீர்களா?**

இரவில் வெகு நேரம் கண் விழித்தி ருப்பது ஆபத்தானது என்கிறது மருத்துவ உலகம். இரவில் மட்டுமே சுரக்கும் 'மெலடோனின்' என்ற வேதிப் பொருள் இரவில் கண் விழித்தால் சுரக்காது என்கிறார்கள் மருத்துவர்கள். இரவு வேளையில் நீண்ட நேரம் தூக்கம் வரவில்லையா? உங்கள் பணியே இரவு நேரத்தில்தானா? இரவு முழுக்க விழித்து செல்போன், சினிமா, கணினியில் ஆழ்ந்திருப்பவரா? நண்பர்களோடு சேர்ந்து தினமும் பார்ட்டி, அரட்டை என்று நேரத்தைக் கழிப்பவரா? இவையெல்லாம் எமது உடலுக்குத் தீங்கு ஏற்படுத்துபவை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இவற்றால், மெலடோனின் சுரப்பு பாதிக்கப்படும். மூளையில் இருக்கும் பீனியல் சுரப்பி சுரக்கும் இந்த மெலடோனின் சுரக்கா மல் போனால் உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியமும் கெட்டுப்போகும். அது மட்டுமின்றி, நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து எல்லா நோய்களையும் உடல் வரவேற்கத் தொடங்கிவிடும் என்கிறார்கள்.

மேலும், இரவில் கண் விழிப்பதால் ஓய்வு கொள்ள வேண்டிய கல்லீரலும் பாதிப்பு அடைகிறது. கண்கள் முதல் சிறுநீரகம் வரை இரவு தூக்கம் தொலைப்பதால் கடுமையான பாதிப்பை அடைகின்றன. பின், பகலில் உறங்குவதால் சரியாக உணவு எடுத்துக்கொள்ளாமல் வயிற்றுப்புண், செரிமானப் பிரச்சினை என உடல் பாதிப்புகள் வரிசைகட்டி வருகின்றன.

மேலும், நரம்புத்தளர்ச்சி, தோல் சுருக்கம், மனஅழுத்தம் தொடங்கி எதிர்மறையான எண்ணங்கள், ஆண்மைக்குறைவு, கல்லீரல் பிரச்சினை என நோய்க்கு மேல் நோய் பெருகி வாழ்வை ஒரு வழியாக்கிவிடும். நாம் இரவைத் திருடினால், அது நம் ஆரோக்கியத்தைத் திருடுவிடும் என்பதை உணர்ந்து நடப்போம்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 616 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 10.11.2017
வெற்றி இலக்கங்கள்
02 24 40 58 G
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 13,166,372/-
Web: www.dlb.lk

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 213
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 10.11.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 78,637,660/-
K 40 45 57 64
Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 72
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2017.11.10
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 52,213,805/-
வெற்றி இலக்கங்கள்
17 20 50 51 I
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 10.11.2017
வெற்றி வாரம் 2209
வர்ணம் சிவப்பு
கன்னி
வெற்றி இலக்கங்கள் 16 34 36 44
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 29,30,316/=
2017.11.12 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## கனடாவில் இலகுவாக குடியேற ஓர் அரிய வாய்ப்பு !!!

கனடா குடியேற்றத் திட்டத்தின் கீழ் கனடாவில் குடியேறவிருக்கும் பத்து மில்லியன் பேரில் நீங்களும் ஒருவராகுவதற்கு இன்றே விரையுங்கள்.

- குடும்பமாகவும் குடியேறலாம்.
- நேர்த்தியான ஆவண ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் சிநேக பூர்வமான ஆலோசனைகள்.

"நான்கு வருட காலமாக தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கை"

WINSTAR VISA CONSULTANTS
106, தபாற்பெட்டிச்சந்தி,திருநெல்வேலி
021 300 4641

## மரண அறிவித்தல்

### திருமதி. கணபதிப்பிள்ளை ஜெகசோதி

அளவெட்டி டச்றோட்டை பிறப்பிடமாகவும் இல. 15.7/2 அத்தப்த்து மாவத்தை, தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. கணபதிப்பிள்ளை ஜெகசோதி அவர்கள் 09.11.2017 அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சிவக்கொழுந்து ஆகியோரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் தங்கம்மாவின் அன்பு மருமகளும் திரு. பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி. யோகராஜா சந்திரவதனி (லண்டன்) நந்தகோபன் (லண்டன்), திவாகரன் (கனடா), கலாநிதி (திருமதி) அனந்தினி நந்தகுமாரன் (சிரேஷ்டவிரிவுரையாளர், வவுனியா வளாகம், யாழ். பல்கலைக்கழகம்) கணேந்திரன் (சுவிஸ்), உமாபுத்திரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராஜா, மாலினி, தனலக்ஷ்மி, நந்தகுமாரன் (கணக்காளர், வியாபார அபிவிருத்தி ஆலோசகர்) சசிகலா, ஜனனி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், செல்லப்பா, நாகலிங்கம் மற்றும் சரஸ்வதியின் மைத்துனியும் வைத்திய கலாநிதி. காயத்ரி சத்தியன், அபிராமி, திசாந், நிலாந், பிரதாயினி (தற்காலிக விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக் கழகம்) திருத்தணிகன், ஆரபி, கேசனி சௌமியா, விதுஷன், சங்கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் அம்ரித்தாவின் அன்புப்பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 12.11.2017 (ஞாயிற்றுக்கிமை) அன்று கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
0112724028, 0715364459

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா சந்தி IIS சிற்றி கம்பஸ் அருகில் காதி அபூபக்கர் வீதி, இல.3/1வீடு சகல வசதிகளுடன் விடப்படும்.

தொடர்பு : 076 984 1379,077 983 9245
(காலை 9.00 - 5 .00 மணிவரை)

## வேலையாள்கள் தேவை

ரிப் வேலை செய்வதற்கு
(வாகன லைசென்ஸ் உள்ளவர்கள் நல்லது.)
ஸ்பெயா பாட்ஸ் கடையில் வேலை செய்வதற்கும்,
சேல்ஸ் செய்வதற்கும் பெண்கள் தேவை.
(கொம்பியூட்டர் செய்ய தெரிந்தவர்கள் நல்லது)

T. P : 021 222 8076
சன்னதி முருகன்
241, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி கோவிலடி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகாலட்சுமி கணேசன்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி கணேசன் நேற்று (10.11.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. சுதாகரன் (மகன் - சுதா)

## மரண அறிவித்தல்



### அருட்சகோதரி டோமினிக் பாக்கியநாதர் - தி.கு

இளவாலை பத்தாவத்தையை பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான, அருட்சகோதரி டோமினிக் பாக்கியநாதர் 10.11.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

இவரது பூதவுடல் நாளை (12.11.2017) ஞாயிற்றுக்கிழ்மை பி.ப. 3.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில், செப வழிபாட்டின் பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட் சகோதரி
கிறிஸ்ரா மரியதாஸ்
மாகாணத் தலைவி.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு நாகலிங்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சங்கரத்தையை சேர்ந்தவருமான, வட்டுக்கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நாகலிங்கம் நேற்று (10.11.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் கதிரவேற்பிள்ளை - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் வள்ளிநாயகியம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சண்முகநாதன், பாக்கியம் சேனாதிராஜா, பரமநாதன், அருமைநாதன், பஞ்சலிங்கம், மகாலிங்கம் மற்றும் நவரத்தினம், செல்வலட்சுமி ஜெயரஞ்சிதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.11.2017) வெள்ளிக்கிழமை இடம்பெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவளை,
வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கலட்சுமி(லட்சுமி ஆச்சி) சண்முகம்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கலட்சுமி(லட்சுமி ஆச்சி) சண்முகம் நேற்று (10.11.2017) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சறோஜினி தேவி, வசந்தா, பஞ்சவர்ணம் காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் ஜெகசோதி, சிவகாமி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான குணசிங்கம், விநாயகமூர்த்தி மற்றும் கணபதிப்பிள்ளை,நாகலிங்கம் காலஞ்சென்ற த்வராசா மற்றும் மகேந்திரன்,கணேசலிங்கம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45\38, முருகமூர்த்தி வயல்கரை லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
075 289 8324

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 09 . 1943



மறைவு 10 . 11 . 2017

## நாகலிங்கம் கிருஸ்ணபிள்ளை

**(கங்காணியார்)**

யாழ்ப்பாணம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கிருஸ்ணபிள்ளை நேற்று (10.11.2017) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - வேதவனம் தம்பதியரின் அன்பு மருமகனும் நன்னிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், மகேஸ்வரி, இராசம்மா மற்றும் பொன்னுத்துரை சேனாதிராசா காலஞ்சென்றவர்களான துரைராசா, இராசமணி மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணேசலிங்கம், குமாரலிங்கம், காலஞ்சென்ற ஞானேஸ்வரி மற்றும் சுபாசினி, இராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி, சித்திரா, சிவகுமார், திருக்குமரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2017) சனிக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 357 0743,**
**077 328 8718**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

விளம்பர தொடர்புகளுக்கு - 021 493 1111 (Advt@uthayan.com)

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகரசபை

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி - 2017

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) வீதி நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிட்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016(i) இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019) என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை 13.11.2017 – 27.11.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தி ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 13.11.2017 ஆம் திகதியில் இருந்து 27.11.2017 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வரிகளைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 28.11.2017 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) நாட்களுக்கு (13.02.2018 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 23.11.2017 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/06/PSDG /2017/30 | சிறாம்பியடி வீதி காப்பெற் வீதியாக்கல் | 7.326 | 31.12.2017 வரை | C7 வீதி | 73,500.00 | 13.03.2018 |
| 2 | JMC/WD/06/PSDG /2017/31 | ஓட்டுமடம் வீதி காப்பெற் வீதியாக்கல் | 5.395 | 31.12.2017 வரை | C7 வீதி | 54,000.00 | 13.03.2018 |
| 3 | JMC/WD/06/PSDG /2017/32 | சிவன் வீதி காப்பெற் வீதியாக்கல் | 3.872 | 31.12.2017 வரை | C8 வீதி | 38,500.00 | 13.03.2018 |
| 4 | JMC/WD/06/PSDG /2017/33 | அம்மன் வீதி காப்பெற் வீதியாக்கல் | 9.778 | 31.12.2017 வரை | C7 வீதி | 98,000.00 | 13.03.2018 |

தலைவர் /ஆணையாளர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

11.11.2017

# மரண அறிவித்தல்



## ஐயாக்குட்டி கந்தர் (தர்மலிங்கம்)

பூநகரி செல்வியாதீவைப் பிறப்பிடமாகவும், செல்விபுரத்தை வதிவிடமாகவும், மீசாலை, கொடிகாமத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த ஐயாக்குட்டி கந்தர் 09.11.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - கண்ணாத்தை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கற்பகத்தின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரன் (ஓய்வுநிலை கிராம அலுவலர்), ஞானேஸ்வரி, ஞானாம்பிகை (பிரான்ஸ்), ஞானச்சந்திரன், ஞானதயா (நோர்வே), ஞானசொரூபி, ஞானலக்சுமி (ஆசிரியை - கிளிநொச்சி மகா வித்தியாலயம்), ஞானசீலன் (அதிபர், பளை இந்து ஆரம்பவித்தியாலயம்), காலஞ்சென்ற ஞானசகுந்தலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை - மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை), தங்கராசா, ஜெகதீசன் (பிரான்ஸ்), விமலாவதி (பிரதி அதிபர், கிளி.முக்கொம்பன் ம.வி), தபோதரன் (நோர்வே), வித்தியநாதன், கேதீஸ்வரன், இந்துமதி (ஆசிரியை - யாழ். இடைக்காடு ம.வி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசையா, சண்முகநாதன், சுப்பிரமணியம், அன்னபூரணம், தங்கம்மா செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அனோஜா, வானுஜா, மதுரங்கன், சுமித்திரா, தாரணி, துஸ்யந்தி, அஜந்தன், நிகிந்தன், அனுசன், கம்ஷா, கரிகாலன், மைதிலி, சிந்துஜா, நிந்துஜா, கபிலா, அஷானி, அருண்ஜா, சாருகன், பாகீசன், கிஷாஜி, அபினன், உமேஷனன், பிஜானன், கஜானன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கிங்ஸ்ரன், அஸ்மிகா, பபிசன், திக்ஷிகா, டிலுஷன், ஆருஷ், அரிஷ் ஆகியோரின் அன்புப் பூட்ட னும், சின்னம்மா, காலஞ்சென்ற நாகம்மா மற்றும் சண்முகராசா, அன்னலட்சுமி, யோகாம்பிகை கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மீசாலை வடக்கு, கமநல சேவைகள் நிலையத்துக்கு அருகில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 990 7383**

# மரண அறிவித்தல்



## திருமதி கனகமுத்து குமாரசாமி

அளவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமுத்து குமாரசாமி நேற்று (10.11.2017) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் மனைவியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கதிராசி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற துரைராஜசிங்கம், புஸ்பராணி காலஞ்சென்ற தவராஜசிங்கம், பத்மராணி, தயசிங்கம் (மட்டக்களப்பு), சந்திரசிங்கம் (பிரான்ஸ்), குகதாசசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பமலர் (மட்டக்களப்பு), பொன்னுத்துரை,சித்திரலேகா, காலஞ்சென்ற குணசிங்கம், மதிவதனி (மட்டக்களப்பு), விஜயகுமாரி (பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் வித்தியா, ஜனந்தன், துஷிந்தன், மௌலிகா, புவிந்தன், ஜகிந்தன், யோகிந்தன், சரணா, நிவேதன், நிலோசன், நிலக்ஷன், நிதர்சினி, தனேந்திரராஜா, காயத்திரி, துஷாந்தி, பிரபாகரன், அகிலரூபி, தர்சிகா ஆகியோரின் பேர்த்தியும் தனுஜா, ஹரினி, அறன், ஆதினி, விகான், அபிநாஷ், அபிநேஷ், அபிலேஷ் ஆகியோரின் பூட்டியும் பாலசிங்கம் (லண்டன்), பூமணி (கமலா) (லண்டன்) ஆகியோரின் வளர்ப்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**021 221 5757, 077 949 9375**

# வடக்கு விவசாய அமைச்சரின் கருத்துக்கு மீனவர்கள் எதிர்ப்பு

முல்லைத்தீவில் வட்டுவாகல் ஏரியைத் திறந்துவிடுவது தொடர்பில் வடக்கு மாகாண சபை அமைச்சர் சிவநேசனின் கருத்தால் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நேற்றுக் குழப்பம் ஏற்பட்டது. அமைச்சரின் கருத்துக்கு மீனவ சங்கப் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று மதியம் 2 மணிக்கு ஆரம்பித்து நேற்றிரவு சுமார் 8 மணிவரை நீடித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தலைமை தாங்கினார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசாவும் கலந்து கொண்டார்.

வட்டுவாகல் குளத்தில் தண்ணீர் அதிகரிப்பால் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விவசாயிகள் தனக்கு முறையிட்டுள்ளனர் என்று சிவநேசன் தெரிவித்தார். ஆனால் தம்மிடம் எந்தவொரு விவசாயியும் முறையிடவில்லை என்று பிரதேச கமநல உத்தியோகத்தர் கூட்டத்தில் தெரிவித்தார். தனக்கும் எந்தவொரு முறைப்பாடும் வரவில்லையே என்று மாவட்டச் செயலரும் தெரிவித்தார்.

அங்கிருந்த மீனவ சங்கப் பிரதி நிதிகள் அமைச்சர் சிவநேசனின் கருத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். "மீனவர்களை எதிர்க்கிறீர்களா?" என்றும் அவர்கள் சினத்துடன் கேட்டனர்.

வட்டுவாகல் ஆறு நிரம்பி வீதியைக் கடக்கும் நிலையிலேயே வட்டுவாகல் வெட்டுவாய் வெட்டிவிடப்பட்டு உபரி நீர் கடலுக்கு விடப்படும். அது 30 வருடங்களாக இருந்துவரும் நடைமுறை.

"வெட்டுவாய் வெட்ட முன்னர் அந்த இடத்தில் விவசாயிகளும் மீன வர்களும் பொங்கல் பொங்கி படைத்து பக்திபூர்வமாகவே நிகழ்வு இடம்பெறும். அப்படியிருக்க அதனை உடனடியாக வெட்டிவிடவேண்டிய அவசியம் இல்லை. தேவையேற்படின் விவசாயம் மீன்படி, நன்னீர் அமைச்சரான சிவநேசன் தனது செயலர், உத்தியோகத்தர்களுடன் அது தொடர்பில் கலந்துரையாடித் தீர்மானிக்கலாம்" என்று மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் உரியமுறையில் ஆராய்ந்து செயற்படுங்கள் என்று இணைத்தலைவர் கூறினார். அத்துடன் அமைச்சர் அமைதியாகிவிட்டார். (உ-4,6)

## பதவியில்...

றனர். நான் இந்த நாட்டின் அரச தலைவர் என்ற வகையில் வெளிநாட்டு நீதிபதிகள் போன்றவர்களால் எவரையும் விசாரணை செய்ய அனுமதிக்கமாட்டேன். ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் தவறான அறிக்கைகளால் நீங்கள் தவறாக வழிநடத்தப்படக்கூடாது. உலகின் எந்த மனித உரிமை அமைப்புக்களும், எந்த அடிப்படையிலும், இலங்கை இராணுவத்தை கட்டுப்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது.

ஒரு இறைமையுள்ள அரசு என்ற வகையில், எந்தவொரு தலையீடுகளும் இன்றி எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆற்றல் எமக்கு இருப்பதாக ஐ.நாவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கைகள், வதந்திகள் மற்றும் நம் எதிரிகளால் 'தவறாக வழிநடத்தப்படக் கூடாது, என்னை நம்புங்கள் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் போலல்லாமல் படையினரின் வெளிநாட்டு நுழைவிசைவுகள் (விசாக்கள்) எதிர்காலத்தில் நிராகரிக்கப்படாது என்றும், தங்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு எந்தத் தடங்கலும் ஏற்படாமல் உதவுவோம் என்றும் நான் வலியுறுத்திக் கூறுகிறேன் - என்றார்.

இந்த நிகழ்வில், போர்க்குற்றம்சாட்டப்பட்டதனால் சில நாடுகளால் நுழைவிசைவு அனுமதி மறுக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே போன்ற இராணுவ அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர். (உ-5)

## கொட்டும்...

சேர்ந்த ஆயிரத்து 45 பேரும், மருதங்கேணி பிரதேசசெயலர் பிரிவில் 643 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 382 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (ற-101)

## திருமலை...

மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்று மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர். (ற-45)

## கடன்...

துறை அமைச்சர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தெளிவூட்டும் செய்தியாளர் சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய ஆட்சி காரணமாக நாம் பெரும் கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். இவ்வளவு கடன் சுமையில் இருந்து கொண்டே நாம் அபிவிருத்தியையும் முன்னெடுத்து வருகின்றோம்.

நாம் வங்கிகளில் இருந்து சிறிய தொகையை அறவிட தீர்மானித்தோம். இதற்கான வரியின் பெயர் பெரியது. குறித்த வரிக்கு மெதமுலன வரி என்று பெயரிடுவது சிறந்ததாகும்.

கடன் சுமையை குறைக்கும் நோக்குடன் மெதமுலனவரியை அறிவிடத்தீர்மானித்துள்ளோம். வங்கிகளில் இருந்து 1000 ரூபாவுக்கு 2 சதம், அதாவது 10 ஆயிரம் ரூபாவுக்கு 2 ரூபா என்ற அடிப்படையில் அறவிடவுள்ளோம். இதனை நுகர்வோர் மீது சுமத்த முடியாது. இதனால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது. இந்த திட்டத்தை மூன்று வருடங்களுக்கு மட்டுப்படுத்தவுள்ளோம். இந்த வரியை செலுத்துவதன் ஊடாக வங்கிகள் செலுத்தும் வருமான வரியில் சலுகை வழங்குவோம் என்றார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சொந்த இடம் மெதமுலன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5,31)

## வரவு - செலவு...

பாலும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லையே?" என்று செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் மங்கள சமரவீர, அந்தக் குற்றச்சாட்டைத்தான் ஏற்றுக் கொள்கிறார் என்றார். இருப்பினும் இந்த வரவு செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்துவதை கண்காணிப்பதற்கு தனியான பிரிவு நிறுவப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், கடவுச்சீட்டு, அடையாள அட்டை, நிறுவனங்களிட மிருந்து பெறப்படும் அறிக்கைகள், வனப் பாதுகாப்பு, வனவிலங்குப் பாதுகாப்பு திணைக்களக் கட்டணம், மிருகக்காட்சிசாலை கட்டணம், தாவரவியல் பூங்காக் கட்டணம், போக்குவரத்துத் துறைகட்டணங்கள், நீதிமன்றங் களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளுக்கான கட்டணம், தபால் சேவைக் கட்டணம் உள்ளிட்டவற்றை 15 சதவீதத்தினால் அதிகரிக்க உத்தேசித்துள்ளதாகவும் மங்கள குறிப்பிட்டார்.

**காபன் வரி**

"பெற்றோலுக்கே அதிக வரி அறவிடப்படுகிறது. டீசலுக்கு குறைவான வரியே அறவிடப்படுகிறது. காபன் வரியானது இரு வகையான வாகனங்களுக்கும் ஒரே அளவானதாகவே முன்மொழியப்பட்டுள்ளது. மின்சார வாகனங்களுக்கு இந்த வரி விதிக்கப்படவில்லை. மின்சாரமானது நிலக்கரி அல்லது எண்ணெய்யைக் கொண்டே உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த வரி விதிப்பில் நியாயம் கிடையாது" என்று செய்தியாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

"இங்கு இவ்வாறான சிக்கல்கள் ஏற்படலாம் என்கின்ற போதிலும், முழுப் போக்குவரத்து துறையையும் பசுமையாக்கும் நோக்கிலேயே அமைச்சரினால் இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது" என்று நிதி அமைச்சின் செயலர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க பதிலளித்தார்.

"காபன் வரி என்று வரும்போது வாகனம் பயன்படுத்தப்படும் மற்றும் காபன் வெளியேற்றப்படும் அளவின் அடிப்படையில்தான் அது அமையவேண்டும். ஆனால், இங்கு முன்மொழியப்பட்டிருப்பது ஆற்றல் வரியாகவே அமைந்துள்ளது. ஆயிரத்து ஐநூறு சீசீ என்ஜின் வலு கொண்ட பழைய வாகனத்தை ஒருவர் வைத்திருந்தால் நீங்கள் அதற்கு ஆற்றல் வரியே விதிக்கிறீர்கள். இது காபன் வரி கிடையாது" என்று செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

"அப்படியொன்றால் நாம் பெயரை மாற்றுவோம். சூழலைப் பாதுகாப்பாக வைத்திருப்பதன் நிமித்தம் பணமே எமக்குத் தேவை" என்று அமைச்சர் மங்கள சமரவீர இதற்குப் பதிலளித்தார். (உ-5,31)

## மென்பானமா...

காரம் கொண்ட மதுபானங்களின் விலைகளை அதிகரித்துள்ளதுடன் பியரின் விலையை குறைத்துள்ளோம். மென்பானங்களை பொறுத்தவரை மாணவர்கள் அருந்தும் 40 மில்லி லீற்றர் மென்பானத்தில் 100 வீதம் சீனி உட்சேர்க்கப்படுகின்றது. இது பாரதூரமான விடயமாகும். மென்பானங்கள் அருந்துவதனை விடவும் பியர் அருந்துவது சிறந்தது" என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (உ-5,31)

## சபையில்...

மான செல்வம் அடைக்கலநாதனிடத்தில் முறையிட்டார்.

புன்னகையுடன் செல்வம் அடைக்கலநாதன் இருக்கையில், "நீங்கள் அப்போதே இந்த விடயங்களைச் செய்திருந்தால் இப்போது இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. உங்களிடம் பந்து இருந்தது. இப்போது இல்லை. பந்து இல்லை என்பதற்காக தற்போது பந்துள்ளவர்களை சுட்டிக்காட்ட முயலாதீர்கள். நீங்கள் சுட்டிக்காட்டுவதை விடவும் அனைவரும் கூட்டாக இணைந்தால் இந்த விடயங்களை இலகுவாகச் செய்து முடிக்க முடியும் என்பதை இனியாவது புரிந்துகொள்ளுங்கள் என்று கூறி தனது உரையைத் தொடர்ந்தார். (உ-5,31)

## கட்டலோனியா...

முன்னேற்றகரமான ஏற்பாடுகள் அவை.

நல்லிணக்கத்தையும், நிலையான சமாதானத்தையும் இந்த நாட்டில் நிலைநாட்ட நாம் நீண்ட தூரம் செல்லவேண்டும். அரசின் செயற்பாடுகள் மாறுபட்ட கோணத்தில் பயணிக்கின்றன. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையிலும், பௌத்த கலாசாரத்தை வளர்க்கும் விதமாகவும் அதிகளவு நிதி ஒதுக்கீடு வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. ஏனைய மதங்கள் புறக்கணிக்கப்படும் வகையிலான, இத்தகைய விடயங்கள் எவ்வாறு நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும்?

அரசமைப்பின் ஊடாகவும், வரவு செலவுத் திட்டத்தின் ஊடாகவும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பது மேலும் பிரச்சினைகளையே தோற்றுவிக்கும். இதற்கு மத்தியில் மேற்கொள்ளப்படும் நல்லிணக்கம் வெறும் கண்துடைப்பு.

நான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தும் எனக்கு அரச தலைவர், தலைமை அமைச்சர் அலுவலகங்களில் இருந்தும் நாடாளுமன்றில் இருந்தும் வரும் கடிதங்கள் சிங்களத்திலேயே வருகின்றன. நல்லிணக்கம் என்பது உதட்டில் இருந்து வரவேண்டியதல்ல. மனதில் இருந்துவர வேண்டும்.

ஒற்றையாட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளதாக அரச தரப்பினர் தற்போது கூறிவருகின்றனர். இடைக்கால அறிக்கையில் கூட்டமைப்பின் தெளிவான நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ளோம். நாங்கள் ஒருபோதும் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. இணைந்த வடக்கு கிழக்கில் கூட்டாட்சியுடன் கூடிய அதிகாரப் பகிர்வு இடம்பெறவேண்டும்.

2015ஆம் ஆண்டு அயலுறவுத்துறை அமைச்சராகவிருந்த மங்கள சமரவீர பன்னாட்டுச் சமூகத்திடம் வழங்கிய உறுதிமொழிக்கமைய நிலைமாறுகால நீதியின் பிரகாரம், போரின் போது இறந்த உறவுகளை நினைவுகூருவதற்கான உரிமை அளிக்கப்படவேண்டும். ஜெனிவாத் தீர்மானத்தில் ஏற்றுக்கொண்ட காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட எவற்றிலும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

2009ஆம் ஆண்டு இறுதிப் போர் நடைபெற்றபோது 45 க்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் அருட்தந்தை பிரான்ஸிஸுடன் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். அவர்கள் தொடர்பில் பல செய்திகளும், ஆதாரங்கள் இருந்தும் அவர்களுக்கு என்ன நடந்ததென அரசு தகவல் வழங்க மறுக்கிறது.

தமிழ் மக்கள் பிரச்சினைகளுடன் கண்ணீரோடு வாழ்ந்து வரும் நிலையில் என்னதான் பொருளாதாரத் திட்டங்களை அரசு அறிவித்தாலும் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை.

தமிழ் மக்கள் விடயத்தில் பாரபட்சமாக செயற்பட்டு வரும் தரப்பாக, தற்போதும் சிங்களப் பெரும்பான்மையின் மனநிலையுடன் இருக்கும் தலைமைகளே உள்ளனர். நல்லிணக்கம், நிலையான சமாதானம் என்பன நோக்கி வெகு தூரம் செல்லவேண்டியுள்ளது.

1995ஆம் ஆண்டுக்கு முன்னரான காலத்தில் முழு வடக்கையும் விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அவர்கள் நினைத்திருந்தால் தற்போது குர்திஸ்தான், கட்டலோனியா போன்று பொது வாக்கெடுப்பொன்றைக் கோரியிருக்க முடியும். அவ்வாறு செய்யாது நல்லிணக்கத்தை அவர்கள் அன்றே வெளிப்படுத்தியிருந்தார்கள். இருப்பினும் பெரும்பான்மையின் மனநிலைமைய 2006ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் தேசியத் தலைவர் பிரபாகரன் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

விடுதலைப்புலிகளின் நல்லிணக்க செயற்பாட்டைக் கூட பெரும்பான்மைத் தரப்புக்கள் புரிந்து கொண்டிருக்கவில்லை. இவ்வாறான நிலையில் மீண்டும் தமிழினக் குழுவை அடக்கும் நிலைமை தொடர்ந்தும் செல்லும் என்ற நிலைப்பாட்டில் அரசு இருக்குமாயின் பொது வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அரசு தயாராக இருக்கின்றதா? என்றார். (உ-5,31)

## மைத்திரி - மகிந்த...

முக்கியமான அரசியல் விடயங்கள் குறித்து மகிந்தவும், மைத்திரியும் நேரடியாகச் சந்தித்துப் பேசுவது நல்லதென மகிந்த அணி முக்கிய உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் பரஸ்பரம் தீர்மானமொன்றை எடுத்ததை அடுத்தே இருவரும் நேரில் சந்தித்துப் பேசுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக மேற்படி இரு தலைவர்களும் நேருக்கு நேர் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, டிலான் பெரேரா, பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பிலும், நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.பி.ரத்நாயக்க, மகிந்தானந்த அழுத்கமகே ஆகியோர் மகிந்த அணி சார்பிலும் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர். அதனையடுத்தே இந்த நேரடிச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகிய இருவர் மட்டுமே கலந்துகொள்வதென இரு தரப்பிலும் பரஸ்பர உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது .

அரசுக்குள் தனக்கு எதிராக சதி முயற்சிகள் நடப்பதாக சில தினங்களுக்கு முன்னர் அரச தலைவர் மைத்திரி பகிரங்கமாகக் கூறியிருந்த நிலையில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. (உ-5)

## வடக்கில்...

வரை வடக்கிலுள்ள 5 மாவட்டங்களிலும் மழை நீடிக்கும். முகில்கூட்டங்களும் காணப்படும். சில இடங்களில் 100 மில்லிமீற்றர்வரை மழை வீழ்ச்சி பதிவாகும். கடற்பகுதியில் 70 தொடக்கம் 80 கிலோமீற்றர்வரை காற்று வீசக்கூடும். மீனவர்கள் இதனைக் கவனத்திற் கொண்டு அவதானமாகச் செயற்படுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

வடக்கில் நேற்றுமதியம் தொடக்கம் தொடர் மழை பெய்துள்ளது. நேற்றுக்காலை 8.30 தொடக்கம் இரவு 8.30 வரையான நேரத்தில் வளிமண்டலவியல் திணைக்களம் அமைந்துள்ள யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 26.1 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 தொடக்கம் நேற்றுக்காலை 8.30 வரை திருநெல்வேலியில் 53.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. பருத்தித்துறையில் 47.2 மில்லிமீற்றர், அலம்பில் 51.9, வல்லிபுரம் 45.3, கச்சேரியடி 43.6, யாழ்ப்பாணக் கோட்டை 37.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-4)



பயிற்சியாளர் பதவியில் இருந்து

# ஹதுருசின்க திடீர் விலகல்

பங்களாதேஷ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியில் இருந்து சந்திரிக ஹதுருசின்க விலகியுள்ளார்.

பங்களாதேஷ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக ஹதுருசின்க செயற்பட்டு வந்தார். இவர் தான் பதவியில் இருந்து விலகும் முடிவை பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். எனினும் பதவி விலகலுக்கான காரணங்கள் எதையும் குறிப்பிடவில்லை. ஹதுருசின்க இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட வாய்ப்புக்கள் அதிகம் என்று தகவல்கள் வெளிவந்துள்ள நிலையில் அவர் பதவி விலகி யுள்ளார். இதனால் ஹதுருசின்க இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராவதற்காகவே பதவி விலகியுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

(ம)

# டோனியை விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள இயலாது

## கம்பீர் ஆதரவு



"இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி மீது வைக்கப்படும் விமர்சனங்கள் தேவையற்றன. அவரை விமர்சிப்பதை ஒருபோதும் ஏற்க இயலாது" என்று தெரிவித்தார் சக வீரரான கம்பீர். டோனிக்கு ஆதரவு தெரிவித்ததன் மூலம் கம்பீருக்கும், டோனிக்கும் மனக்கசப்புக்கள் உள்ளன என்று அண்மைக்காலமாக உலாவரும் வதந்திகளுக்கும் அவர் முற்றுப்புள்ளி வைத்தார்.

நியூசிலாந்துக்கு எதிரான ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் டோனி மிகப்பெரியளவில் அடித்தாடவில்லை. இதையடுத்து அவருக்கு எதிராகப் பல விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. குறிப்பாக முன்னாள் வீரர் லக்ஷ்மன், ரி-20 ஆட்டங்களில் இருந்து டோனி ஓய்வு பெறவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். இதற்குப் பதில் வழங்குகையிலேயே கம்பீர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஓய்வு என்ற வார்த்தையை அவ்வளவு இலகுவில் டோனியின் விடயத்தில் பயன்படுத்தும் உரிமை எவருக்கும் இல்லை. ஏனெனில் இந்திய கிரிக்கெட்டுக்கு எவரும் செய்ய முடியாத பல விடயங்களை டோனி செய்துள்ளார். அவரது தலைமைத்துவம் மகத்தானது. அவரது ஓய்வை அவரே தீர்மானிக்க வேண்டும். குறித்த ஆட்டத்தில் மூன்று இமாலய சிக்சர்களை டோனி விளாசினார். அத்தனை சிக்சர்களும் 85 மீற்றர்களுக்கு அப்பால் பறந்தன. எனின் டோனி எதற்காக ஓய்வு பெறவேண்டும். அவர் உடற்தகுதியுடன் உள்ளார். தேவையற்ற அழுத்தங்களை டோனி மீது வைக்கக்கூடாது" என கம்பீர் மேலும் தெரிவித்தார்.

(ம)

20/-
இந்த வாரம்
மறதி ஒரு மந்திரம்
தந்தை செல்வாவின் பரிசுத்த ஆவி பேசுகிறது.
ரோஹண விஜயவீர பார்க்கப்படாத பக்கங்கள்
அடிமை விலங்கை உடைத்தவன்
மா. நன்னன் தனிநபர் தமிழியக்கம்
ஈழக்கிராமங்களின் மண் வாசனை - கல்வியங்காடு
நீந்திக்கடந்த நெருப்பாறு நாவல்
மற்றும் பல்சுவை அம்சங்களுடன்
சனிக்கிழமைகளில் அனைத்து முகவர்களிடமும் கிடைக்கும்.





# ஆர்ஜென்ரீனாவை நடத்துவதில்லை

## மெஸ்ஸி மறுப்பு

"ஆர்ஜென்ரீனா கால்பந்தாட்ட அணியின் தலைவரான மெஸ்ஸி, ஆர்ஜென்ரீனா கால்பந்தாட்ட அணி தொடர்பில் சகல முடிவுகளையும் தீர்மானிக்கிறார்" என்று வெளியான குற்றச்சாட்டை மெஸ்ஸி மறுத்துள்ளார். தேவையற்ற விடயங்களில் தனது தலையீடு இல்லை என்பதை அவர் ஆணித்தரமாக எடுத்தியம்பியுள்ளார்.

"என்னைப் பற்றிய நகைப்புக்கிடமான கருத்துகளை கடுமையாகக் கண்டிக்கின்றேன். எதையும் அறியாமல் கருத்துகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இதனால் ஆத்திரம் ஏற்படுகின்றது. எனினும் இவற்றுக்கெல்லாம் பழக்கப்பட்டு விட்டேன். எவ்வாறெனினும் குறித்த கருத்துகள் எனக்கு மட்டுமல்லாது, எனது சக வீரர்களுக்கும் மரியாதைக் குறைவை ஏற்படுத்துகின்றன.

தேசிய கால்பந்தாட்ட அணியில், நான் விரும்பிய நண்பர்கள் மற்றும் பயிற்சியாளர்களை கொண்டுவருகிறேன் என்பது பொய். அணியில் ஒரு சாதாரண வீரராக நான் உள்ளேன். அவ்வாறே இருக்கவும் விரும்புகிறேன்" என மெஸ்ஸி மேலும் தெரிவித்தார். (ம)

# காயமடைந்தார் ஆஸி. வீரர் நீல்



ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்துவீச்சாளர் கட்டர் நீலின் முதுகுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதை அடுத்து அவர் ஆஷஸ் தொடரில் இருந்து விலகுவதற்கு அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஸ் தொடர் இன்னும் சில நாள்களில் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் கட்டர் நீல் இடம்பிடித்திருந்தார். வேகப்பந்து வீச்சாளரான அவர் பயிற்சியின் போது காயமடைந்ததன் காரணத்தால் ஆஷஸ் தொடரில் இருந்து விலகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

நீல் அப்படி விலகினாலும், அது ஆஸ்திரேலிய அணியின் மட்டில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தாது. ஹசில்வூட், ஸ்ராக், கம்மின்ஸ் உள்ளிட்ட வேகப்பந்து வீச்சாளர்கள் முழு உடல்தகுதியுடன் இருக்கிறார்கள். அதிலும் மிச்செல் ஸ்ராக் அபார திறனில் (போர்மில்) உள்ளார். (ம)

# ஸ்ரோக்ஸ் இல்லாத இங்கிலாந்து சாதிக்காது

## ரிச்சட்ஸ் கருத்து

"சகலதுறை வீரரான ஸ்ரோக்ஸ் இல்லாமல் ஆஷஸ் தொடரில் களமிறங்கும் இங்கிலாந்து அணி, பெரியளவில் சாதிக்காது" என மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் ஜாம்பவான் விவ் ரிச்சட்ஸ் தெரிவித்தார்.

ஆஷஸ் தொடரில் பங்குபற்றவுள்ள இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரவு விடுதியொன்றில் நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்டதை அடுத்து ஸ்ரோக்ஸுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, இங்கிலாந்து அணியிலிருந்து ஸ்ரோக்ஸ் நீக்கப்பட்டுள்ளார். இதையடுத்தே ரிச்சட்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

"நான் பென் ஸ்ரோக்ஸின் மிகப்பெரிய ரசிகன். அவரது உத்வேகமும், ஆக்ரோசமும் ஆஸ்திரேலியாவில் மிக முக்கியப் பங்கு வகிக்கும். எம்மிடம் இத்தகைய குணங்கள் இல்லாவிடினும் ஆஸ்திரேலியர்கள் எம்மிடத்தில் இதனை ஏற்படுத்தி விடுவார்கள். பென் ஸ்ரோக்ஸ் உடல் அளவிலும் மனதளவிலும் வலுவான வீரர். எனவே பென் ஸ்ரோக்ஸ் இல்லாமல் இங்கிலாந்து அணி ஆஸ்திரேலிய களங்களில் பூனைக்குட்டி போல் காட்சியளிக்கும்.

பென் ஸ்ரோக்ஸ் அணிக்குப் பங்களிப்புச் செய்யும் நம்பிக்கை மிகமிக முக்கியமானது. ஆஷஸ் தொடரை இங்கிலாந்து வெல்லவேண்டுமென்றால் அதற்கு பென் ஸ்ரோக்ஸ் தவிர்க்க முடியாத ஒரு வீரர்" என ரிச்சட்ஸ் மேலும் தெரிவித்தார்.

(ம)



# இந்தியாவின் சவாலை சந்திக்கத் தயார் இப்படித் தெரிவித்தார் டினேஸ் சந்திமல்

இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் மிகவும் சவாலானதாக இருக்கும் என்று தெரிவித்தார் இலங்கை அணியின் தலைவர் சந்திமல்.

இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு இரண்டு அணிகளுக்கும் இடையிலான தலா மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட், ரி-20, ஒருநாள் தொடர்கள் நடைபெறவுள்ளன. முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இதன்படி முதலாவது ஆட்டம் கொல்கத்தாவில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சந்திமல் இவ்வாறு தெரிவித்தார்.

"சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடந்த டெஸ்ட் தொடரில் நாங்கள் வெற்றிபெற்றோம். அந்த உத்வேகத்தில் அணியில் உள்ள வீரர்கள் உள்ளனர். டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியா தற்போது உலகின் முதல்தர அணி என்பதை அறிவோம். கடந்த 2 ஆண்டுகளாக இந்திய அணியினர் சிறப்பாக விளையாடி வருகிறார்கள். இந்தத் தொடர் எங்களுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கடந்த கால ஆட்டங்களின் முடிவை திரும்பிப் பார்க்க விரும்பவில்லை. இந்தத் தொடருக்கு எங்களை நன்கு ஆயத்தப்படுத்தி வருகிறோம்.

இந்திய மண்ணில் நாங்கள் ஒரு போதும் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதில்லை. இந்தியாவில் டெஸ்ட் தொடரொன்றைக் கைப்பற்றுவது இலங்கை வீரர்களின் கனவாகும். கொல்கத்தாவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் நாங்கள் விளையாடுவது இதுவே முதல் முறையாகும். கொல்கத்தாவில் ரசிகர்கள் கூட்டத்தின் முன்னிலையில் ஆடுவது எப்போதும் மகிழ்ச்சியான அனுபவமாக அமையும். ஒரு அணியாக தொடரை சிறப்பாக ஆரம்பிப்பது முக்கியமானதாகும். இந்தியாவில் எனது முதல் டெஸ்ட் சுற்றுப் பயணம் இதுதான். மத்தியூஸ், கேரத் ஆகியோரைத் தவிர எங்கள் அணியில் உள்ள ஏனைய வீரர்களுக்கு இந்தியாவில் இதுதான் முதல் டெஸ்ட் தொடராகும். உண்மையிலேயே இது ஒவ்வொருவருக்கும் நல்ல சவாலாக இருக்கும். இந்திய சுழல்பந்து வீச்சாளர்கள் அஸ்வின், ஜடேயா இருவரினதும் சுழலை சந்திக்கத்தயாராக உள்ளோம்" என சந்திமல் மேலும் தெரிவித்தார். (ம)





மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் 14 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது சென். ஜோன்ஸ் கல்லூரி

(ம-23)

# பாகிஸ்தானுக்கு எதிரான தோல்விகள் வருத்தின

## மத்தியூஸ் கவலை



மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் பாகிஸ்தானுக்கு எதிராகக் கிடைத்த தோல்விகள் என்னை மிகையாகக் காயப்படுத்தின என்று தெரிவித்தார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மத்தியூஸ்.

இந்தத் தொடர்களில் காயம் காரணமாக மத்தியூஸ்விலகியிருந்தார். இந்தியாவுக்கு எதிரான தொடரில் கலந்துகொள்வதற்காக தற்போது இந்தியா சென்றுள்ள அவர் பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

"பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய போதிலும். அடுத்த இரண்டு வாரங்கள் மிகவும் கவலைதரும் விதத்தில் அமைந்திருந்தன. இலங்கை வீரர்கள் விளையாடுவதை வீட்டிலிருந்த பார்த்துக் கொண்டிருந்தேன். அணி தோல்வியடையும் சந்தர்ப்பத்தில் பங்களிப்புச் செய்ய இயலாமல் இருப்பது வேதனை மிகுந்தது" என மத்தியூஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## இலங்கைக்கு எதிரான தொடரில்

# பாண்டியாவுக்கு கட்டாய ஓய்வு



இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடரில், சகலதுறை வீரரான பாண்டியாவுக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய அணியில் சமீப காலமாகத் தொடர்ந்து ஓய்வின்றி விளையாடி வருகிறார் பாண்டியா. இந்த நிலையில் அவரது உடற்தகுதியைக் கருத்திற் கொண்டு இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடரில் பாண்டியாவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான தொடர்கள் முடிவடைந்த பின்னர் இந்திய அணி தென்னாபிரிக்காவை எதிர் கொள்கிறது. இந்தத் தொடரைக் கருத்திற்கொண்டே பாண்டியாவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான இந்திய அணியில் இருந்து சமீபகாலமாகப் புறக்கணிக்கப்பட்டு வரும் அஸ்வின், ஜடேயா இருவருக்கும் டெஸ்ட் அணியில் இடம்கிடைத்துள்ளது.


இந்திய அணி விவரம் - கோக்லி (தலைவர்), லோகேஸ் ராகுல், முரளி விஜய், தவான், புஜாரா, ரகானே, ரோகித், சகா, அஸ்வின், ஜடேயா, குல்தீப் யாதவ், மொகமட் சமி, ஊமேஸ் யாதவ், புவனேஸ்வர் குமார், இசாந் சர்மா. (ம)

அகரம்
கல்வி நிலையம்
(K.K.S வீதி மல்லாகம்) (K.K.S வீதி கொக்குவில்)
புதிய தரம் 06 ற்கான
தமிழ் மொழி மூல வகுப்புக்கள் ஆங்கில மொழி மூல
மல்லாகத்தில் 12.11.2017 அன்று காலை 11.00 மணி
கொக்குவில் 19.11.2017 அன்று காலை 11.00 மணி
ஆரம்பமாகின்றன.
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

இலிகிதர் தேவை
யாழ் நகரமத்தியில்
இயங்கும் சட்டத்தரணி
அலுவலகத்தில் பணியாற்ற
பெண்பிள்ளை தேவை.
077 967 2613

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
15 . 08 . 1927



ஆண்டவன் அடியில்
06 . 11 . 2017

### செல்லையா தாமோதரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற V.C.O)

யாழ்.ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வவுனியா வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தாமோதரம்பிள்ளை 06.11.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - அம்மணி அம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கெஜலெட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), மனோரதன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), Dr.ஜெயரதன் (தாய்சேய் நல வைத்திய அதிகாரி - சுகாதார பிராந்திய பணிமனை, வவுனியா), தேவாதரன் (கணித அளவையாளர் - பிரித்தானியா), ஸ்ரீவதனி (டென்மார்க்), உஷா (ஆசிரியை - வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), Dr.உமாவதி (Consultant, Texas USA), வனிதா (பொறியியலாளர்- கனடா), குமுதினி (ஆஸ்திரேலியா), மயூதரன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), ரோகினி (Scientific Officer Pathology - ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்னநாயகி (ஆஸ்திரேலியா), மதியாபரணம் (இளைப்பாறிய தொலைபேசி உத்தியோகத்தர் இலங்கை - கனடா -Toronto) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாமினி, சியாமளா, கமலாதேவி, விஜிதா, மனோகாந்தன், சந்திரகுமார், மனோகரன், ராகுலன், ஸ்ரீகாந்தன், புனிதினி, சங்கரதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி, ஞானேஸ்வரி, நாகேஸ்வரி, சண்முகநாதன், காலஞ்சென்றவர்களான சோதிநாதன், தர்மலிங்கம் மற்றும் இரட்ணதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தராணி, பாமினி ஆகியோரின் அன்புத் தாய்மாமாவும், நளாயினி, தயாளினி, வாகீசன், வாமணன், பிரசாந்தினி ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும்,கௌதம், கீரன், ஆரணி, அஷ்வினி, கேஷிகா, டேஷிகன், மதுஷன், மகிஷா, ஹரிசன், சுபங்கவி, ஸாஸ்வதன், பிரணவன், சைலஜன், சாருஜன்,நிரூஜன், லக்ஷன், சஞ்சய், சஜீவ், துளசி, தனீஸ், பிரியன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூந்தோட்டம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26,5ஆம் ஒழுங்கை,
வைரவபுளியங்குளம், வவுனியா.

தகவல்
குடும்பத்தினர்.

ஜெயரதன் (வவுனியா) - +94 2422 20164, +94 7720 93154,
உஷா (வவுனியா) - +94 242 227 231

## மரண அறிவித்தல்



### துரைசிங்கம் பிறேமதாஸ்

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பிறேமதாஸ் 03.11.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் துரைசிங்கம் - தவமணிதேவி தம்பதிகளின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற சாந்தலிங்கம் மற்றும் தவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தலதாவின் பாசமிகு கணவரும், லகிஷாவின் அன்புத் தந்தையும், முருகதாஸ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்), மைதிலி (கனடா), ஷைமினி (சுவிஸ்), திலீபன் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், ஜெயரூபி (ஆசிரியை - கொக்குவில் இந்துக் கல்லூரி), ஸ்ரீதரன் (கனடா), கணேஷன் (சுவிஸ்), சிலக்ஷினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், உசந்திகா, சாய்னேஷ் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், பிரக்விஷ் இன் அன்பு பெரியப்பாவும், சுஜிதரன், கஜானன், ஹரிஷ், பிரனேஷ், விக்னேஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நர்ளை (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை Hendan Cemetery Crematorium, Holders Hill Road, London இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 12 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமராம் தோட்டம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்.

0212240705

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.